# தமிழ்

February 2019

9ம் ஆண்டில்

நற்றமிழரின் நாடித்துடிப்பு



VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

**Idli / Dosa Wet Mix** • இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്




ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा

# ஐ தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

February 2019 சுவடி — 8 ஓலை — 12


## வணக்கம் பல

ஒரு தனிமனிதனின் வாழ்க்கையில் பெரும் முடிவுகள் எட்டப்படும்போது, அவை மிகப் பெரிய நன்மையையோ, தீமையையோ ஏற்படுத்திவிடும் என்பது உண்மை! அம்முடிவு வாழ்க்கையையே தலைகீழாகப் புரட்டிப் போடும் வல்லமையை காலத்தின் கைகளில் வழங்கிவிடும் என்பதற்கு, மிகப் பெரும் தலைவர்களின் ஆரம்பகால வாழ்க்கையினை ஆராய்ந்தோமானால் தெற்றெனப் புலப்படும்!

பெரும் தலைவர்களும், சாதனையாளர்களும், உயர்பதவி வகிப்பவர்களும் எடுக்க கூடிய முடிவுகள், அவர்கள் சார்ந்த நாட்டையும், சமூகத்தையும் ஒரு பெரும் மாற்றத்துக்குக் கொண்டு செல்லும். சமீபத்தில் பிரித்தானியாவில் அப்படிப்பட்ட ஒரு முடிவு எடுக்கப்பட்டு, அது மிகப் பெரும் தோல்வியைச் சந்தித்துள்ளது உலக மக்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்துள்ளது.

முடிவுகளை எட்டும்போது அதன் சாதகப் பாதக விளைவுகளை அலசிப் பார்த்தபின்தான் எடுக்கிறார்கள் என்றாலும், சில முடிவுகள் நீண்ட கால குழப்பத்தை ஏற்படுத்தும் விதமாகவும், உடனடிப் பயன்தராத நிலையிலும், மக்கள் அம்முடிவுகளின் அடிப்படையில் ஒத்துழைப்பு நல்காத நிலையிலும் அவை தோல்வியைத் தழுவுவது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடுகிறது!

சமீபத்தில் இலங்கை அதிபர் எடுத்த முடிவு ஒரு பெரும் கேலிக்கூத்தாகி, உலக நாடுகளின் கண்டனத்துக்கும், மக்களின் ஏளனத்துக்கும் உள்ளானதைச் சமீபத்தில் கண்கூடாகக் காண முடிந்தது. எனவே முடிவுகள், தொலைநோக்குப் பார்வையுடன் அணுகி, அவை தீவிரமாக அலசப்பட்டு, ஆக்கப்பூர்வமாக விவாதிக்கப்பட்டு எடுக்கப்படுமேயானால், நாட்டுக்கு நலம் பயக்கும்.

தை மாதம் பிறந்து தரையெல்லாம் குளிர் பரவியிருக்கும் இந்தக் குளிர்காலம், பூமிப் பந்தின் பசுமைக்கு உரமிட்டு உத்தரவாதம் அளிப்பதுபோல், நல்ல வாசிப்பும், நல்ல ஆக்கங்களும் மனிதனின் மனதைப் பண்படுத்தும்!

பிரித்தானியா, இந்தியா, இலங்கை, கத்தார் என உலகச் செய்திகளுடனும், தமிழின் சிறப்பான படைப்புகளுடனும், புதிய பல பனுவல்களையும் சுமந்து வருகின்ற இம்மாத 'அய் தமிழ்' இதழ், வழமைபோலவே வாசகர்களின் மனதை நிறைக்கும் இதழாக மலர்கின்றது.

வாசியுங்கள்! வரவேற்று மகிழுங்கள்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

## உள்ளே...


முடிவு யார் கையில்?

பிழைக்குமா பூமாலை!

பத்தும் செய்யும் பணம்!

புலம்பெயர்ந்தோரும் குடிகளே

அறிவோம் தமிழர் பெருமை

சிவகாமியின் சபதம்

தம் வேர் அறுக்கும் மக்கள்

மருத்துவ தமிழ்

ஆசையால் அறிவு உணர்தல்



**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*



*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

# முடிவு யார்

உலகத்தின் பார்வை இப்போது 'உச்ச தேசம்' என்று கொண்டாடப்படும் பிரிட்டன் மீது பதிந்திருக்கிறது! பிரிட்டன் பிரதமர் தெரீசா மே முன்னெடுத்த பிரெக்ஸிட் ஒப்பந்தம் அந்நாட்டின் நாடாளுமன்றத்தில் 230 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது, பிரிட்டன் வரலாற்றில் ஓர் ஆளும் அரசுக்கு ஏற்பட்ட மிகப் பெரிய தோல்வியாக கருதப்படுகிறது.

இந்தத் தோல்வி, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக ஐரோப்பிய ஒன்றியத்துடனான ஒப்பந்தத்தை உருவாக்குவதில் தீவிரமாக செயல்பட்ட பிரிட்டன் பிரதமர் தெரீசா மே இது மிக பெரிய வீழ்ச்சியாக கருதப்படுகிறது.

முன்னதாக, ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுவது என்று இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு பிரிட்டன் மக்களிடம் கருத்தறிந்து



முடிவு எடுக்கப்பட்டது. அப்போதிருந்து, வெளியேறுதலுக்கான நடவடிக்கைகளின் விவரங்களில் ஒப்புதல் ஏற்படுத்துவதற்காக கடினமான பேச்சுவார்த்தைகளில் இரு தரப்பினரும் ஈடுபட்டு வருகின்றனர்.

வரும் மார்ச் 29—இல் ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு பிரிட்டன் வெளியேறுவதற்கு சில விதிகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய இந்த ஒப்பந்தம் தொடர்பாக வாக்களித்த எம்.பி.க்கள் எதிராக 432 வாக்குகளும், ஆதரவாக 202 வாக்குகளையும் பதிவு செய்தனர்.

தற்போது பிரதமர் தெரீசா மேயின் அரசு மீது தொழிலாளர் கட்சி தலைவரான ஜெர்மி கோபின் நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ள சூழலில், இது பொதுத் தேர்தலுக்கு வழிவகுக்கக்கூடும்.

ஆனால், தன்னுடைய எண்ணத்தை பிரிட்டன் நாடாளுமன்றத்தை ஏற்கச் செய்யலாம் என்று கருதி, இறுதியில் பிரிட்டன் பிரதமர் தெரசா மே, நாடாளுமன்றத்தில் டிசம்பர் 11—ல் வாக்கெடுப்பு நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்தார்.

மற்ற கட்சி எம்.பி.க்களுடன் சேர்ந்து, தனது




கட்சி எம்.பி.க்கள் பலரும், இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிப்பார்கள் என்பதால், இதற்கு வெற்றி கிடைக்காது என்று பிரதமருக்குத் தெளிவாகிவிட்டதால் அப்போது வாக்கெடுப்பு கைவிடப்பட்டது. இந்நிலையில் ஜனவரி 15 அன்று இது தொடர்பான வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. இதனிடையே பிரதமர் தெரீசா மே கொண்டு வந்த பிரெக்ஸிட் ஒப்பந்தம் தொடர்பான விவாதமும், வாக்கெடுப்பும் பிரிட்டன் அரசியலில் கட்சி பாகுபாடுகளை கடந்துள்ளது.

இதில் முக்கிய அம்சம் என்னவென்றால், இந்த ஒப்பந்தத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் வாக்களித்தது போல பிரதமர் தெரீசா மேவின் சொந்த கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சி எம்பிக்களும் ஒப்பந்தத்துக்கு எதிராக வாக்களித்துள்ளனர். கிட்டத்தட்ட 118 கன்சர்வேட்டிவ் கட்சி எம்பிக்கள் ஒப்பந்தத்துக்கு எதிராக வாக்களித்துள்ளனர். அதேபோல் இயான் ஆஸ்டின் உள்ளிட்ட தொழிலாளர் கட்சியை சேர்ந்த 3 எம்பிக்கள் பிரதமரின் ஒப்பந்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தது

பிரெக்ஸிட்டில் என்னென்ன வாய்ப்புகள் உள்ளன என இங்கே அலசுவோம்.

உலகமயமாக்கலுக்குப் பின் இங்கு எதுவும் தனி இல்லை, ஒரு நாட்டில் நடக்கும் விஷயங்கள் மற்றொரு நாட்டில் ஆதிக்கம் செலுத்தும்.




அதனால் பிரெக்ஸிட் குறித்து அனைவரும் தெரிந்து கொள்வது அவசியமாகிறது. பிரெக்ஸிட் வாய்ப்புகள் குறித்த அடிப்படையான சில தகவல்கள்:

## பிரெக்ஸிட்டில் என்னென்ன நிகழலாம்?

ஜூன் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஐரோப்பிய ஒன்றிய திரும்பப் பெறுதல் சட்டம், சில நடைமுறைகளை வகுத்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த பிரெக்ஸிட் வரைவறிக்கைக்கு எதிராக

வாக்களித்தால் அதன்படி செயல்படலாம். அதன்படி, வரைவறிக்கை நாடாளுமன்ற உறுப்பினர்களால் புறக்கணிக்கப்படும்பட்சத்தில் 21 நாட்களுக்குள் புதிய திட்டம் என்னவென்று சொல்ல வேண்டும்.

அதே நேரம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த வரைவறிக்கைக்கு எதிராக வாக்களிக்கும்பட்சத்தில், ஆறு வாய்ப்புகள் உள்ளன.




உடன்பாடு இல்லை, இரண்டாம் வாக்கெடுப்பு, மீண்டும் பேச்சுவார்த்தை, பொதுத் தேர்தல், பொது வாக்கெடுப்பு, நம்பிக்கை இல்லா தீர்மானம் என்ற இந்த ஆறு வாய்ப்புகள்தான்!.

## உடன்பாடு இல்லை

உடன்பாடு இல்லை என்றால், எந்த உடன்பாடும் இல்லாமல் பிரக்ஸிட் நிகழும். ஏற்கெனவெ, இது தொடர்பான சட்டம் உள்ளது. அதாவது, 29 மார்சு 2019இல் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறும்.

ஒரு வேளை எந்த உடன்படிக்கையும் இல்லாமல் பிரிட்டன் வெளியேறுவதை நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கும்பட்சத்தில், நம்பிக்கையில்லா வாக்கெடுப்பை நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னெடுக்கலாம்.

## உடன்பாட்டிற்கான இரண்டாம் வாக்கெடுப்பு

மீண்டும் இந்த வரைவறிக்கை தொடர்பான வாக்கெடுப்பை நடத்த அரசு முயற்சி செய்யலாம். ஆனால், தார்மிகரீதியாக அது சரியானது இல்லை. ஒரு விஷயத்திற்காக ஒரே கூட்டத் தொடரில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரண்டுமுறை வாக்களிக்க கூடாது என்ற நடைமுறை உள்ளது.

ஆனால், அதேநேரம் அரசு சில முன்முயற்சிகள் எடுத்து, ஒப்பந்தத்தில் சில மாற்றங்கள் செய்ய ஐரோப்பிய ஒன்றியத்தை இணங்க வைத்தால், மீண்டும் வாக்கெடுப்பிறகு எடுத்துக் கொள்ளப்படும். அவைத் தலைவர்தான் இரண்டாம் வாக்கெடுப்பு குறித்து முடிவினை எடுக்க வேண்டும்.

## மீண்டும் பேச்சுவார்த்தை

மீண்டும் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளில் அரசு இறங்கலாம். சின்ன திருத்தங்கள் செய்யப்பட்டு, முன்பே கூறியது போல, மீண்டும் மக்கள் பிரதிநிதிகள் அவைக்கு இந்த வரைவறிக்கை அனுப்பப்படலாம்.

பிரெக்ஸிட்டை தள்ளிப் போட, அரசமைப்புச்சட்டம் அட்டவணை 50இன் நீட்டிப்பு தேவைப்படலாம். மறு பேச்சுவார்த்தைக்கு ஐரோப்பிய ஒன்றியம் மறுத்துவிட்டால், அரசு வேறு வழிகளை தேட வேண்டும்.

தெரீசா மேவின் ஒப்பந்தத்திற்கு அரசியல் ரீதியாக அங்கீகாரத்தை பெற, மீண்டும் பொதுத் தேர்தலை நடத்துவதுதான் இப்போதுள்ள சிக்கலிலிருந்து மீள ஒரே வழி. அவருக்கு உடனே தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் இல்லை. ஆனால்,

நிரந்தரகால நாடாளுமன்ற சட்டத்தின்படி, அவர் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தேர்தல் நடத்த இசைவு தெரிவிக்கும்படி கோரிக்கை வைக்கலாம். மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதற்கு இசைவு தெரிவிக்க வேண்டும்.




## பொது வாக்கெடுப்பு

மீண்டும் பிரக்ஸிட்டுக்கான வாக்கெடுப்பிற்கு அரசு அழைப்புவிடுக்கலாம். ஐரோப்பிய யூனியனில் இருந்து வெளியேறுவது என்று இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு பிரிட்டன் வாக்களித்தது.

அப்போதிருந்து, வெளியேறுதலுக்கான நடவடிக்கைகளின் விவரங்களில் ஒப்புதல் ஏற்படுத்துவதற்காக கடினமான பேச்சுவார்த்தைகளில் இரு தரப்பினரும் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், தன்னுடைய எண்ணத்தை பிரிட்டன் நாடாளுமன்றத்தை ஏற்கச் செய்யலாம் என்று கருதி, இறுதியில் பிரிட்டன் பிரதமர் தெரசா மே, நாடாளுமன்றத்தில் டிசம்பர் 11—ல் — வாக்கெடுப்பு நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்தார்.

மற்ற கட்சி எம்.பி.க்களுடன் சேர்ந்து, தனது கட்சி எம்.பி.க்கள் பலரும், இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிப்பார்கள் என்பதால், இதற்கு வெற்றி கிடைக்காது என்று பிரதமருக்குத் தெளிவாகிவிட்டதால், வாக்கெடுப்பு கைவிடப்பட்டது.

வடக்கு அயர்லாந்து — பிரிட்டனின் ஒரு பகுதி — அயர்லாந்து குடியரசு இடையிலான எல்லைப்புறத்தை எப்படி கையாளப் போகிறோம் என்பது பற்றிய பிரச்சினை காரணமாகத்தான் தன்னுடைய கன்சர்வேட்டிவ் கட்சிக்குள்ளேயே (மற்றும் நாடாளுமன்றத்தில் அவருக்கு பெரும்பான்மையை அளிக்கும் வடக்கு அயர்லாந்து எம்.பி.க்களிடமும்) எதிர்க்கருத்துகளை அவர் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால், இந்தப் பிரச்சினை ஏன் பிரெக்சிட் திட்டங்களைத் தடம்புரளச் செய்ய வேண்டும்?

ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு இடையில் சோதனைகள் ஏதுமின்றி, கட்டணங்கள் ஏதும் செலுத்தாமல் தடையின்றி சரக்குப் போக்குவரத்து நடைபெறலாம் என்பது ஐரோப்பிய யூனியனில் உறுப்பினராக இருப்பதால் கிடைக்கும் முதன்மையான ஆதாயங்களில் ஒன்று.

எனவே, இப்போது, அயர்லாந்து மற்றும் வடக்கு அயர்லாந்து இடையில் குறைந்த கட்டுப்பாடுகளுடன் சரக்குகள் மற்றும் சேவைகள் நடைபெறுகின்றன. பொருட்களை சுங்கத் துறை சோதனை மற்றும் தரம் உறுதி செய்யும் சோதனைகளைக்கு உட்படுத்த வேண்டியதில்லை. ஆனால், ஐரோப்பிய யூனியனில் இருந்து பிரிட்டன் வெளியேறினால் / வெளியேறும் போது, சுங்கம் செலுத்தும் யூனியனில் இருந்து அது வெளியேறும். உள்ளே வரும் அல்லது வெளியில் செல்லும் போக்குவரத்துகள் அனைத்தும் சோதனை செய்யப்படும், சுங்கம் செலுத்த வேண்டியிருக்கும்.




குண்டுவீச்சுகள் என ஏற்பட்டு பல ஆயிரம் பேர் உயிரிழந்தனர். பல ஆயிரம் பேர் காயமடைந்தனர்.

1998ல் இரு அரசுகளும், வடக்கு அயர்லாந்தில் உள்ள அரசியல் கட்சிகளும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு ஒப்புக்கொள்ளும் வரையில், இந்தப் பிரச்சனை நீடித்தது. முன்பு தீவிரமான அரணாக — இருந்த பகுதிகள் வடக்கு மற்றும் தெற்கு என்ற பிரிவினை இல்லாமல் போயின. இதனால் பயணமும் வர்த்தகமும் எளிதானது. நடைமுறையில் தொடர்ச்சியான பகுதிகளைக் கொண்ட தீவாக மாறியது.

இதை இழப்பதும் ``கடினமான எல்லை'' முறைக்குத் திரும்புவதும், வன்முறைக்குத் திரும்புவதைப் போல ஆகிவிடும் என்ற அச்சம் இருக்கிறது. ஆனால் பிரெக்சிட்டுக்கு — 2019 மார்ச் 29 — என்ற கெடு உள்ளது. எனவே சுங்கம் தொடர்பான ஏற்பாடுகள் குறித்து ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டாக வேண்டும்.

சரக்குகள் மட்டும் தான் பாதிக்கப்படும் என்பது கிடையாது — மக்கள் தடையின்றி சென்று வருவதும் கூட தடைப்படும். இது வடக்கு அயர்லாந்துக்கு முக்கியமான பிரச்சினையாக இருக்கும்.

வெளிப்படையான தடைகள் இல்லாத மற்றும் சுங்கச் சோதனைகள் இல்லாத `தடங்கல் இல்லாத எல்லை' வேண்டும் என்று இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. பல பத்தாண்டுகளாக வடக்குப் பகுதியில் பெரிய பிரச்சினையாக இருந்த பிரிவினை மற்றும் வன்முறை திரும்பாதிருக்க இது தேவை என ஒப்புக்கொள்ளப்பட்டது.

அயர்லாந்து குடியரசுக்கும் வடக்கு அயர்லாந்துக்கும் இடையில் உள்ள எல்லை, அதன் பிரதிநிதித்துவம் காரணமாக முக்கியமானது. அயர்லாந்தின் பெரும் பகுதி — 32 மாவட்டங்களில் 26 மாவட்டங்கள் — 1922ல் பிரிட்டனிடம் இருந்து சுதந்திரம் பெற்றன. ஆனால் வடக்கு அயர்லாந்தின் ஆறு மாவட்டங்கள் பிரிட்டனின் அங்கமாயின.

வடக்கு அயர்லாந்தில் உள்ள தேசியவாதிகள் — பெருமளவில் கத்தோலிக்கர்கள்— ஒருங்கிணைந்த அயர்லாந்து இருக்க வேண்டும் என விரும்பினர். ஆனால் ஐக்கியவாதிகள் — பெரும்பான்மை ப்ராட்டஸ்டண்ட்கள்— அதே நிலையில் இருக்க வேண்டும் என்று விரும்பினர்.

இந்த இரு குழுவினருக்கும் இடையிலான மோதல் 1968ல் பிரச்சினைகளாக உருவெடுத்தது. சமூகங்களுக்கு இடையில் துப்பாக்கிச் சூடுகள்,

நீடித்த காலத்துக்கான ஒப்பந்தம் எதுவும் எட்டப்படவில்லை. ஆனால், தெரீசா மே ஓர் தாங்கிப் பிடிக்கும் திட்டத்துக்கு இசைவு தெரிவித்துள்ளார். நீண்டகால நோக்கிலான ஒரு தீர்வு காணப்படும் வரையில் சுங்க ஒன்றியத்துக்குள் வடக்கு அயர்லாந்து நீடிக்கும் என்ற ``அவசரகால முன்னெச்சரிக்கை'' ஏற்பாடாக அது உள்ளது.

பிரதமரின் திட்டத்தில் உள்ள இந்த முன்னெச்சரிக்கை ஏற்பாட்டில் — வடக்கு அயர்லாந்தின் ஜனநாயக ஐக்கிய கட்சிக்கும், கன்சர்வேட்டிவ் கட்சியில் அதிருப்தியாளர்கள் பலருக்கும் பிரச்சினை இருக்கிறது.


மே —வின் நடவடிக்கைக்கு எதிராக வாக்களிப்பது என்று கன்சர்வேட்டிவ் எம்.பி.க்களில் சில டஜன் பேர் எதிர்க்கட்சிகளுடன் கை கோர்ப்பதற்குத் திட்டமிட்டனர்.

அவசரகால முன்னெச்சரிக்கை திட்டத்தால், வடக்கு அயர்லாந்துக்கும், பிரிட்டனின் இதர பகுதிகளுக்கும் இடையில் புதிய ஒழுங்குமுறை தடைகள் ஏற்படலாம் என்று கருதுவதால் கன்சர்வேட்டிவ் அதிருப்தியாளர்களும் டி.யு.பி. தரப்பினரும் இதை விரும்பவில்லை.

கூடுதலாக, இது சட்டபூர்வ கட்டுப்பாட்டைக் கொண்டு வந்துவிடும். ஐரோப்பிய யூனியனின் ஒப்புதல் இல்லாமல் அவசரகால முன்னெச்சரிக்கை ஏற்பாட்டில் இருந்து பிரிட்டன் வெளியேற முடியாது.

தற்காலிக நடவடிக்கை என முன்வைக்கப்படும் திட்டம், நடைமுறையில் நீடித்த நடவடிக்கையாக மாறிவிடும். அவசரகால முன்னெச்சரிக்கை திட்டத்தால், வடக்கு அயர்லாந்துக்கும், பிரிட்டனின் இதர பகுதிகளுக்கும் இடையில் புதிய ஒழுங்குமுறை தடைகள் ஏற்படலாம் என்று கருதுவதால் கன்சர்வேட்டிவ் அதிருப்தியாளர்களும் டி.யு.பி. தரப்பினரும் இதை விரும்பவில்லை.

கூடுதலாக, இது சட்டபூர்வ கட்டுப்பாட்டைக் கொண்டு வந்துவிடும். ஐரோப்பிய யூனியனின் ஒப்புதல் இல்லாமல் அவசரகால முன்னெச்சரிக்கை ஏற்பாட்டில் இருந்து பிரிட்டன் வெளியேற முடியாது.




தற்காலிக நடவடிக்கை என முன்வைக்கப்படும் திட்டம், நடைமுறையில் நீடித்த நடவடிக்கையாக மாறிவிடும். கூடுதலாக டி.யு.பி.யில் இருந்து குறைந்தபட்சம் 10 எம்.பி.க்களின் ஆதரவு அவருக்குத் தேவை.

“அவசரகால முன்னெச்சரிக்கை திட்டம் கைவிடப்பட வேண்டும்'' என்று தொலைபேசி மூலம் பிரதமரிடம் கூறியுள்ளதாக டி.யு.பி. தலைவர் அர்லென் ஃபாஸ்டர் தெரிவித்துள்ளார்.

எனவே, ஒரு வகையில், இந்தத் திட்டத்துக்கு கன்சர்வேட்டிவ் மற்றும் டி.யு.பி. ஆதரவைப் பெறுவதற்கு, அவசரகால முன்னெச்சரிக்கை திட்டத்தில் தெரசா மே திருத்தம் செய்தாக வேண்டும்.

ஆனால், ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளுடன் மே—வின் அரசாங்கம் எட்டியுள்ள திட்டத்தில் மேற்கொண்டு எந்தப் பேச்சுவார்த்தையும் நடத்த முடியாது என்று ஐரோப்பிய யூனியன் தொடர்ந்து கூறி வருகிறது.

அப்போதும் கூட, நாடாளுமன்ற ஒப்புதலைப் பெறுவதற்கு உதவியாக, இந்தத் திட்டத்தில் சில விஷயங்களில் மாறுதல் செய்வதற்கு ஆதரவைப் பெறுவதற்காக தெரசா மே பெர்லினுக்கு பயணம் மேற்கொண்டார்.

வாக்கெடுப்பை ஒத்திவைத்த பிறகு, வடக்கு அயர்லாந்து எல்லைத் திட்டம் குறித்து ``மேலும் உத்தரவாதங்களை” பெறுவதற்கு நெதர்லாந்து பிரதமர் மார்க் ருட்டே மற்றும் ஜெர்மனியின் ஏஞ்சலா மெர்க்கெலுடன் தெரீசா மே பேச்சு நடத்தி வருகிறார்.

### ஐரோப்பிய யூனியன் ஒப்புக்கொள்ளுமா?

ஐரோப்பிய யூனியன் “மீண்டும் பேச்சு நடத்தாது” என்று ஐரோப்பிய கவுன்சிலின் தலைவர் டோனால்ட் டஸ்க் கூறியுள்ளார். ஆனால் “பிரிட்டன் ஏற்பளிப்புக்கு உதவி” செய்வது எப்படி என்று தலைவர்கள் பேச்சு நடத்தலாம்.

இந்த உதவி என்னவாக இருக்கும் என்பதும், அவசரகால முன்னெச்சரிக்கை திட்டத்தை எதிர்ப்பவர்களை திருப்திப்படுத்துவதற்கு இது போதுமானதாக இருக்குமா என்பதும் தான் முக்கியமான கேள்வியாக இருக்கிறது.

பிரெக்ஸிட் ஒப்பந்தம் தோல்வி: ஏமாற்றமும், வரவேற்பும்

பிரதமர் தெரீசா மேயின் பிரெக்ஸிட் ஒப்பந்தம் பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்தின உறுப்பு நாடாக பிரிட்டன் தொடர வேண்டுமென ஐரோப்பிய ஒன்றிய கவுன்சிலின் தலைவர் டொனால்டு டஸ்க் தெரிவித்துள்ளார்,

இந்த ஆண்டு மார்ச் 29ம் தேதி ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு பிரிட்டன் வெளியேறுவதற்கு சில விதிகளையும், நிபந்தனைகளையும் உள்ளடக்கிய இந்த ஒப்பந்தம் தொடர்பாக வாக்களித்த பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள், எதிராக 432 வாக்குகளையும், ஆதரவாக 202 வாக்குகளையும் பதிவு செய்தனர்.

இதன் மூலம், பிரிட்டன் பிரதமர் தெரீசா மே முன்னெடுத்த பிரெக்ஸிட் ஒப்பந்தம் 230 வாக்குகள் வித்தியாசத்தில் நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டுள்ளது.. ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் இது தொடர்பாக ஏமாற்றம் தெரிவித்துள்ளனர். பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுகின்ற பிரெக்ஸிட் வழிமுறைகளில் அதிக சந்தேகங்களை இது உருவாக்கியுள்ளது.

பிரிட்டன் அரசு மீது எதிர்க் கட்சியான தொழிலாளர் கட்சி கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் வெற்றி பெற்றுள்ள பிரதமர் தெரீசா மே, பிரெக்ஸிட் திட்டத்தை முன்னெடுக்க தங்கள் சொந்த நலன்களை புறந்தள்ளி, ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும் என்று எம்பிகளுக்கு அறைகூவல் விடுத்துள்ளார். ஆனால், இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் நடப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன்னர் தெரீசா மே கொண்டு வந்த பிரெக்ஸிட் ஒப்பந்தத்தை சில ஆளுங்கட்சி எம்பிக்கள் மற்றும் எதிர்க்கட்சியினர் ஆகிய இரு தரப்பும் இணைந்து தோற்கடித்தது குறிப்பிடத்தக்கது. தெரீசா மே ஆட்சியின் பதவிக் காலம் 2022 வரை உள்ளது. அடுத்த பொதுத் தேர்தலை தமது கன்சர்வேடிவ் கட்சி தமது தலைமையில் சந்திக்காது என்று தெரீசா மே ஏற்கெனவே தெரிவித்துள்ளார்.

## ஒப்பந்தம் இல்லாத பிரெக்ஸிட் — பொருள் என்ன?

பிரெக்ஸிட் ஒப்பந்தம் இல்லாமல் பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு வெளியேறுவது என்பது, ஒரேயடியாக எல்லா தொடர்புகளையும் துண்டித்து விட்டு பிரிட்டன் வெளியேறுவதாக அமைந்துவிடும்.. இதனால், பிரிட்டன் பொருளாதாரம் பெருமளவு பாதிக்கப்படும் என்பதால், பிரிட்டன் படிப்படியாக வெளியேறுவது விரும்பப்படுகிறது. ஆனால், பிரிட்டன் நாடாளுமன்றம் இத்தகைய ஒப்பந்தத்திற்கு ஒப்புக்கொள்ளாத பட்சத்தில், எவ்வித ஒப்பந்தமும் இல்லாமல், எல்லா உறவுகளையும் துண்டித்துவிட்டு பிரிட்டன் வெளியேற வேண்டியிருக்கும்.

இந்த வாக்கெடுப்பு, டொனால்ட் டஸ்ன் பதிவிட்ட ட்விட்டர் பதிவு உள்பட, ஐரோப்பிய ஒன்றியம் முழுவதிலும் இருந்து பல எதிர்வினைகளை எழுப்பியுள்ளது. ஒப்பந்தம் ஒன்றை எட்டுவதற்கான நேரம் மிகவும் குறைவாக உள்ளதாக ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் ஜாங் கிளாடு யுங்கர் எச்சரிக்கை விடுத்துள்ளார்'

"பிரிட்டன் அதனுடைய கருத்துக்களை உடனடியாக தெளிவுப்படுத்த வேண்டும். போதிய நேரமில்லை. ஒழுங்கற்ற முறையில் பிரிட்டன் வெளியேறுகின்ற ஆபத்து இந்த வாக்கெடுப்பால் அதிகரித்துள்ளது." என்று பிரிட்டன் நாடாளுமன்ற வாக்கெடுப்பு முடிவு அறிவிக்கப்பட்டவுடன் ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் கூறியுள்ளார்.

பிரிட்டன் அதற்கே உரித்தான அணுகுமுறையில் இந்த முடிவை எடுத்துள்ளதாக ஐரோப்பிய ஒன்றிய பிரெக்ஸிட் தலைமை மத்தியஸ்தர் மைக்கேல் பர்னிர் கூறியுள்ளார். "அடுத்தக்கட்ட நடவடிக்கை என்ன என கூறுவது பிரிட்டன் அரசை பொறுத்தது. ஒப்பந்தம் ஒன்றை எட்டுவதற்கான முடிவில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உறுதியுடன் இருக்கிறது" என்கிறார்.

இது பற்றி கருத்து தெரிவித்துள்ள ஜெர்மனி நிதி அமைச்சரும், துணை சான்சிலரான ஒலாஃப் ஷோல்ஸ், "ஜனவரி 15 ஐரோப்பாவுக்கு கசப்பான நாள்! நாங்கள் தயாராகவுள்ளோம். கடினமானதொரு பிரெக்ஸிட் ஐரோப்பாவுக்கும், பிரிட்டனுக்கும் குறைந்தபட்ச ஈர்ப்புடைய தெரிவாக இருக்கும்" என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

ஜெர்மனியை ஆளும் கிறிஸ்தவ ஜனநாயக ஒன்றிய கட்சியின் தலைவர் ஆன்கிரேட் கிராம்ப் காரென்பரும் இதே கருத்தை கூறியுள்ளார்,


பிரிட்டனை பற்றி கருத்து தெரிவிக்கையில், "முக்கியமாக அவர்கள் மீதே அழுத்தங்கள் உள்ளன" என்று பிரான்ஸ் அதிபர் இம்மானுவெல் மக்ரோங் கூறியுள்ளார்.

ஒப்பந்தம் எதுவும் இல்லாமல் வெளியேறுவது பெரும் பாதிப்பாக அமையும் என்பதால், நிலைமாற்ற காலம் முக்கியமானது! பிரிட்டன் வெளியேறுவது பற்றி இனிமேல் திட்டமிட முடியாது என்பதால், சரியான காலம் இனி பிரிட்டனுக்கு வாய்க்க வேண்டும்!

காலம் கனிந்து வந்தால் எதுவுமே சாத்தியம்தான்! அதேபோல் காலம் ஒத்துழைக்க மறுத்துவிட்டால் எதுவுமே சாத்தியமில்லை என்பதும் மீண்டும் ஒருமுறை உலகத்தின் பார்வைக்கு பிரக்சிட் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சூரியன் அஸ்தமிக்காத தேசம் என்று புகழப்பட்ட அந்த தேசத்தில் நல்லதொரு காலம் கனியட்டும்!

# கருத்துப் ப(ா)டம்




# சொல்றாங்க... சொல்றாங்க...



“சுட்டுப் போட்டாலும்
தமிழகத்தில் தாமரை மலராது!”

—மு.க. ஸ்டாலின்

(ஐயா, வாயில் வந்ததை எல்லாம் யோசிக்காம அடிச்சு விடற உம் திறமை... அடடா, அபாரமய்யா!!)



“சுட்டு போட்டால் தாமரை மலராது. ஆனால் மக்கள் ஓட்டு போட்டால் தாமரை மலரும்!”

— தமிழிசை

(அட நீ வேற இருக்கியாம்மா! உன்னை மறந்தே போயிட்டோம்! ‘பூனைமேல் மதிலாக’ன்னு உளறிக்கிட்டு இருக்கிறவருக்கு, உன் பங்குக்கு நீ வேற ஏன்மா ‘பஞ்ச்சு’ விடறே?)



“மோடி மட்டும் மறுபடியும் ஆட்சிக்கு வந்தால், ஹிட்லர் ஜெர்மனிக்கு செய்தது போல, நமது சட்ட சாசனத்தை அழித்துவிட்டு ஜனநாயகத்தைப் படுகுழியில் தள்ளிவிடுவார்”

—கெஜ்ரிவால்

(சரியாத்தான் சொல்லி இருக்கிறீங்க சார், ஆனா நிறைய பேர் இப்படிப் பேசிட்டு காணாமல் போயிருக்காங்க! எதுக்கும் கொஞ்சம் எச்சரிக்கையாவே இருங்க!)



“எல்லையில் சுவர் கட்டுவதற்காக, நாங்கள் மாதங்கள் அல்ல... வருடக்கணக்கில் கூட அரசு அலுவல்களை முடக்குவோம்“

— ட்ரம்ப்

(பெரிய அண்ணே! நீங்க எதையும் முடக்குவீங்கன்னு எல்லாருக்கும் நல்லா தெரியும்! நேரத்தை வீணடிக்காம நீங்களும் வேலையைப் பாருங்க, மத்தவங்களையும் கொஞ்சம் வேலை செய்ய விடுங்க!)

# பிழைக்குமா

## அமெரிக்காவில் அவசரநிலை கொண்டுவருவேன் – அதிபர் டிரம்ப் எச்சரிக்கை

அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஒப்புதலின்றி அமெரிக்கா—மெக்ஸிகோ இடையே எல்லைச்சுவர் கட்டுவதற்காக நாட்டில் அவசரநிலையை பிரகடனம் செய்வேன் என்று அதிபர் டொனால்டு டிரம்ப் கூறியுள்ளது அந்நாட்டில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.

தனது கனவுத் திட்டமான எல்லைச்சுவர் கட்டுவதற்கு தேவையான நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு தொடர்ந்து மறுப்புத் தெரிவித்து வரும் ஜனநாயக கட்சியினருடனான பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்ததையடுத்து டிரம்ப் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார். தனது எல்லைச்சுவர் திட்டத்திற்கு நாடாளுமன்றத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படாததால், கடந்த வருடத்தின் இறுதியிலிருந்து நடைமுறையிலுள்ள பகுதியளவு அரசாங்க முடக்கத்தை முடிவுக்கு கொண்டுவரும் மசோதாவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குவதற்கு டிரம்ப் மறுப்பு தெரிவித்து வருகிறார்.




அமெரிக்காவில் அரசுத்துறைகளுக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படாததால் பல்வேறு துறைகளை சேர்ந்த 8 லட்சம் ஊழியர்கள் கடந்த டிசம்பர் மாதம் 22ஆம் தேதி முதல் சம்பளமின்றி பணிபுரிந்து வருகின்றனர். ஜனநாயக கட்சியினருடனான டிரம்பின் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தாலும், அடுத்தகட்ட பேச்சுவார்த்தை சனிக்கிழமை மீண்டும் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### கூட்டத்தில் நடந்தது என்ன ?

போதிய நிதியின்றி முடக்கியுள்ள அரசாங்கத்தின் செயல்பாட்டை சீரமைப்பதற்கு தடையாக உள்ள எல்லைச்சுவர் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு சார்ந்த பிரச்சனை குறித்து, அதற்கு தொடர்ந்து மறுப்புத் தெரிவித்து வரும் ஜனநாயக கட்சியினருடன் வெள்ளை




மாளிகையில் பேசுவதற்கு டிரம்ப் 90 நிமிடங்களை ஒதுக்கியிருந்தார்.

அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஒப்புதலின்றி எல்லைச்சுவர் திட்டத்திற்கு தேவையான நிதியை ஒதுக்குவதற்கு அதிபரின் அதிகாரத்தை பயன்படுத்தி நாட்டில் அவசரநிலை பிரகடனம் செய்வது குறித்து யோசிக்கிறீர்களா என்று டிரம்பிடம் கேட்டபோது, ‘ஆம்‘ என்று பதிலளித்தார்.

என்று அவர் மேலும் கூறினார். இந்த கூட்டத்தில் பங்கேற்ற அமெரிக்க நாடாளுமன்றத்தின் சபாநாயகர் நான்சி பெலோசி “இது மோதல்போக்குக்கொண்டதாக” இருந்தது என்றும், மக்கள் பிரதிநிதிகள் சபையின் ஜனநாயக கட்சி தலைவரான சக் ஸ்கூம்மர், “அரசாங்கம் செயல்பட வேண்டுமென்று அதிபரிடம் கோரினோம். அவர் எதிர்த்தார்” என்று கூறினார்.




“அதற்கு வாய்ப்புள்ளது. தேசிய அவசரநிலையை பிரகடனம் செய்து, எல்லைச்சுவரை விரைந்து கட்ட முடியும். இலக்கை அடைவதற்கான மற்றொரு வழி அது” என்று டிரம்ப் கூறினார்.

“நான் செய்வதை நினைத்து மிகவும் பெருமைப்படுகிறேன். நான் இதை அரசுத்துறை முடக்கம் என்று கூறமாட்டேன். நாட்டின் பலனுக்காகவும், பாதுகாப்புக்காகவும் செய்ய வேண்டிய ஒன்றாக நான் இதை கருதுகிறேன்”

### முரண்டு பிடிக்கும் டிரம்ப்

அமெரிக்காவில் தொடர்ந்துவரும் அரசு செயல்பாடு முடக்கம், அந்நாட்டில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தி வருகிறது. மெக்ஸிகோ எல்லையில் சுவர் கட்டும் அதிபர் டிரம்பின் திட்டத்துக்கு நிதி ஒதுக்க காங்கிரஸ் மறுத்து வரும் நிலையில் ஏற்பட்ட சிக்கலால், பல்வேறு அரசுத் துறைகளுக்கு நிதி ஒதுக்குவதற்கான நிதி மசோதா

நிறைவேற்றப்படாமல் அரசுப் பணிகள் முடக்கம் நடந்துவருகிறது.

செயல்பாடு முடக்கம், அந்நாட்டில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தி வருகிறது. மெக்சிகோ




"கவர்ன்மென்ட் ஷட் டவுன்" என்று கூறப்படும், அரசுப் பணிகள் முடக்கம், அமெரிக்காவுக்கு புதிதில்லை என்றபோதும், தற்போது அது 15 நாட்களாகத் தொடர்ந்து வருவது நாட்டில் கவலைகளை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக ஏறத்தாழ 8 லட்சம் ஊழியர்களுக்கு சம்பளம் தரப்படாததால், அதன் மோசமான விளைவுகளை அம்மக்கள் அனுபவித்து வருகின்றனர். எல்லையில் சுவர் கட்டும் திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்படும் வரை அரசாங்க முடக்கம் தொடரும் என டிரம்ப் கூறி உள்ளார்.

அரசாங்கம் செயல்படாமல் இருப்பதன் விளைவாக தாங்கள் மோசமான விளைவுகளை சந்திப்பதாக மக்கள் சமூக ஊடகங்களில் மக்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர். உள்நாட்டு பாதுகாப்பு, சட்டம், வீட்டு வசதி, விவசாயம், வணிகம் உள்ளிட்ட ஒன்பது துறைகள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. 16 நாட்கள் நீடித்த கடைசி அரசாங்க பணி முடக்கம் 2013 இல் நிகழ்ந்தது. டிரம்ப்பின் பிடிவாதமும், முடக்கப்பட்டுள்ள அரசும்' — அமெரிக்காவில் நடப்பது என்ன?

'கவர்ன்மென்ட் ஷட் டவுன்' என்று அழைக்கப்படும் அமெரிக்க அரசு செயல்பாடுகள் முடக்கம் மூன்றாவது வாரமாகத் தொடர்ந்து வரும் சூழ்நிலையில், இதனை பல ஆண்டுகள் தொடர கூடத் தயாராக இருப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கூறி உள்ளார். அமெரிக்காவில் தொடர்ந்துவரும் அரசு எல்லையில் சுவர்கட்டும் அதிபர் டிரம்பின் திட்டத்துக்கு நிதி ஒதுக்க காங்கிரஸ் மறுத்து வரும் நிலையில் ஏற்பட்ட சிக்கலால், பல்வேறு அரசுத் துறைகளுக்கு நிதி ஒதுக்குவதற்கான நிதி மசோதா நிறைவேற்றப்படாமல் அரசுப் பணிகள் முடக்கம் நடந்துவருகிறது. கவர்ன்மென்ட் ஷட் டவுன் என்று கூறப்படும், அரசுப் பணிகள் முடக்கம், அமெரிக்காவுக்கு புதிதில்லை என்றபோதும், தற்போது அது மூன்று வாரமாக தொடர்ந்து வருவது நாட்டில் கவலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இதன் காரணமாக ஏறத்தாழ 8 லட்சம் ஊழியர்களுக்கு சம்பளம் தரப்படாததால், அதன் மோசமான விளைவுகளை அம்மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

என்ன சொல்கிறார் டிரம்ப்?

காங்கிரஸை மீறி செயல்பட தேசிய அவசரநிலையை பிரகடனப்படுத்தி மெக்சிகோ எல்லையில் சுவர் கட்டுவேன் என ஜனநாயகக் கட்சியில் உயர் பொறுப்புகளில் உள்ளவர்களை சந்தித்த பின் டிரம்ப் கூறி உள்ளார்.

சுவருக்கான நிதி ஒதுக்கப்படும் வரை நான் எந்த மசோதாவிலும் கையெழுத்திடப் போவதில்லை என டிரம்ப் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் ஜனநாயகக் கட்சியினரை சந்தித்த பின் டிரம்ப், அந்த சந்திப்பு மிகவும் ஆக்கப்பூர்வமான சந்திப்பாக இருந்ததாக

கூறினார்.

ஆனால், அவ்வாறாக அமையவில்லை என்பது டிரம்பின் பேச்சிலிருந்து தெரிகிறது.

இதனால் ஏறத்தாழ 8 லட்சம் ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்கம் செயல்படாமல் இருப்பதன் விளைவாக தாங்கள் மோசமான விளைவுகளை




சந்திப்பதாக சமூக ஊடகங்களில் மக்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

டிரம்ப், “என்னால் செய்ய முடியும். தேசிய அளவிலான அவசர நிலையை பிரகடனப்படுத்தி, அந்த சுவரை விரைவாக கட்ட முடியும். இது அந்த சுவரை கட்டுவதற்கான மற்றொரு வழி” என்று கூறி உள்ளார்.

வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர், இந்த வெள்ளிக்கிழமை கூட்டம் சச்சரவுடன் முடிந்ததாக கூறுகிறார்.

செய்தியாளர்களிடம் பேசிய ஜனநாயகக் கட்சியின் செனட் தலைவர் ஷூமர், “அரசு முழுமையாக செயல்பட வேண்டும் என நாங்கள் கோரினோம். ஆனால் டிரம்ப் மறுத்துவிட்டார்” என்றார்.

மேலும் அவர், “அரசினை பல மாதங்கள், ஏன் ஆண்டுகள் கூட முடக்க தயாராக இருப்பதாக டிரம்ப் எங்களிடம் கூறினார்” என்று தெரிவித்தார்.

அரசு முடக்கம்

முழுமையாக அரச முடங்கவில்லை என்றாலும், உள்நாட்டு பாதுகாப்பு, சட்டம், வீட்டு வசதி, விவசாயம், வணிகம் உள்ளிட்ட ஒன்பது துறைகள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக அமெரிக்க பூர்வகுடி மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தரப்பட வேண்டிய கணிசமான நிதி அரசு முடங்கி உள்ளதால் தரப்படாமல் உள்ளது.

ஊழியர்கள் இல்லாததால் பூங்காக்களில் குப்பைகள் மலை போல குவிந்துள்ளன.

அரசு முடங்கி உள்ளதால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் #ஷிலீஓுமீ பீஷீஷ்ஸீஷிமீ ஷீகூ்வீமீஃ என்ற ஹாஷ்டாக்கில் தங்கள் கருத்துகளை பகிர்ந்துள்ளனர்.

அரசு முடங்குவது இதுதான் முதல் முறையா?

தரவுகளை ஆராய்ந்து பார்த்தால் கடந்த காலங்களில் இதனைவிட அதிகளவிலான நாட்கள் அரசு முடங்கி இருப்பது தெரிய வருகிறது. அது குறித்த அட்டவணையை இங்கே பகிர்கிறோம்.

முடங்கிய அமெரிக்க அரசாங்கம்: தீர்வு காண டிரம்புக்கு அழுத்தம்

கடந்த மூன்று வாரங்களுக்கும் மேலாக அமெரிக்க

அரசாங்க துறைகள் பகுதியளவு முடங்கியுள்ள சூழலில், இவற்றில் சில பகுதிகளை தற்காலிகமாக மீண்டும் திறக்க வேண்டுமென குடியரசு கட்சியை ஓர் மூத்த செனட்டர், அமெரிக்க அதிபர் டிரம்புக்கு கோரிக்கை வைத்துள்ளார்.




டிரம்புக்கு மிகவும் நெருக்கமான லிண்ட்ஸே கிரஹாம் என்ற அந்த செனட்டர், சில வாரங்களுக்கு மீண்டும் சில துறைகளை இயக்குவது குடியரசு மற்றும் ஜனநாயக கட்சிகளுக்கு இடையே இது தொடர்பான பேச்சுவார்த்தை தொடங்க உதவும் என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அரசாங்க துறைகள் தற்போது பகுதியளவு முடங்கியுள்ளதுதான் அமெரிக்க அரசாங்க வரலாற்றில் நடந்த மிக நீண்ட முடக்கமாக கருதப்படுகிறது.

அமெரிக்காவில் அரசுத்துறைகளுக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படாததால் பல்வேறு துறைகளை சேர்ந்த 8 லட்சம் ஊழியர்கள் கடந்த டிசம்பர் மாதம் 22ஆம் தேதி முதல் ஊதியமின்றி பணிபுரிந்து வருகின்றனர்.

அமெரிக்காவில் தொடர்ந்துவரும் அரசு செயல்பாடு முடக்கம், அந்நாட்டில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தி வருகிறது. மெக்ஸிகோ எல்லையில் சுவர் கட்டும் அதிபர் டிரம்பின் திட்டத்துக்கு நிதி ஒதுக்க காங்கிரஸ் மறுத்து வரும் நிலையில் ஏற்பட்ட சிக்கலால், பல்வேறு அரசுத் துறைகளுக்கு நிதி ஒதுக்குவதற்கான நிதி மசோதா நிறைவேற்றப்படாமல் அரசுப் பணிகள் முடக்கம் நடந்துவருகிறது.

மெக்சிகோ எல்லையில் சுவர்கட்டும் அதிபர் டிரம்பின் திட்டத்துக்கு நிதி ஒதுக்க காங்கிரஸ் மறுத்து வரும் நிலையில் ஏற்பட்ட சிக்கலால், பல்வேறு அரசுத் துறைகளுக்கு நிதி ஒதுக்குவதற்கான நிதி மசோதா நிறைவேற்றப்படாமல் அரசுப் பணிகள் முடக்கம் நடந்துவருகிறது.

"கவர்ன்மென்ட் ஷட் டவுன்" என்று கூறப்படும், அரசுப் பணிகள் முடக்கம், அமெரிக்காவுக்கு புதிதில்லை என்றபோதும், தற்போது அது 15 நாட்களாகத் தொடர்ந்து வருவது நாட்டில் கவலைகளை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக ஏறத்தாழ 8 லட்சம் ஊழியர்களுக்கு ஊதியம் தரப்படாததால், அதன் மோசமான விளைவுகளை மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

கவர்ன்மென்ட் ஷட் டவுன் என்று கூறப்படும், அரசுப் பணிகள் முடக்கம், அமெரிக்காவுக்கு புதிதல்ல என்றபோதும், தற்போது அது மூன்று வாரங்களுக்கும் மேலாக தொடர்ந்து வருவது நாட்டில் கவலைகளை ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கம் செயல்படாமல் இருப்பதன் விளைவாக தாங்கள் மோசமான விளைவுகளை சந்திப்பதாக மக்கள் சமூக ஊடகங்களில் மக்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

உள்நாட்டு பாதுகாப்பு, சட்டம், வீட்டு வசதி, விவசாயம், வணிகம் உள்ளிட்ட ஒன்பது துறைகள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.ஊழியர்கள் இல்லாததால் பூங்காக்களில் குப்பைகள் மலை போல குவிந்துள்ளன.



தேவி!
வானுலகில், பூவுலகில், வேறெங்கும்
தேடினாலும் கிடைக்காத
indian express foods
இட்லி / தோசை மா
இலண்டனில் மட்டுமே கிடைக்கும்
indian express foods
+44 20 8133 5144
+44 7878 89 68 37




## ''நமது நாடு தமிழ்நாடா?, இந்தியாவா?'': தமிழ்நாடு பெயர் மாற்றத்திற்கு காங்கிரஸ் தயங்கியது ஏன்?

சென்னை மாநிலம் தமிழ்நாடு என பெயர் மாற்றப்பட்டு, 50 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. காலத்தில் நிலைத்துவிட்ட இந்தப் பெயரை காலந்தாழ்த்தி வந்தாலும் இங்குள்ள அனைவரின் பேராதரவுடன் வருகிறது. இந்தத் தீர்மானம் எதிர்ப்பு ஏதுமின்றி நிறைவேறினால் அந்த வெற்றி ஒரு கட்சியின் வெற்றியல்ல. தமிழின் வெற்றி, தமிழரின் வெற்றி. தமிழர் வரலாற்றின் வெற்றி. தமிழ்நாட்டு வெற்றி. மேலும் இப்படி பெயர் மாற்றம் செய்வதாலேயே தனி நாடு ஆகவில்லை. இந்தியப் பேரரசின் ஒரு பகுதியாகவே நம் மாநிலம்



மாநிலத்திற்குச் சூட்ட பல ஆண்டுகாலப் போராட்டத்தையே நடத்த வேண்டியிருந்தது.

1967ஆம் ஆண்டு ஜூலை 18ஆம் தேதி தமிழக சட்டப்பேரவையில் பேசிய முதலமைச்சர் சி.என். அண்ணாதுரை, “இந்த அவையிலே இன்றைய தினம் “ உறுப்பினர்களாக இருக்கின்ற ஒவ்வொருவருடைய வாழ்நாளிலும் மிகுந்த மகிழ்ச்சியையும், நல்ல எழுச்சியையும் தரத்தக்க ஒரு திருநாள் ஆகும். நீண்ட நாட்களுக்கு முன்பே வந்திருக்க வேண்டிய இந்தத் தீர்மானம் இருக்கும். அதனால் சர்வதேச சிக்கல்கள் எழாது. நாம் இப்படி பெயர் மாற்றத்திற்குப் பேராதரவு அளித்ததற்காக எதிர்கால சந்ததியினர் நம்மை வாழ்த்துவார்கள்” என்று குறிப்பிட்டார்.

அதற்குப் பின் அவர் ‘தமிழ்நாடு’ என்று மூன்று முறை குறிப்பிட்டதும் உறுப்பினர்கள் வாழ்க என்று மும்முறை வாழ்த்தொலி எழுப்பினார்கள்.


தமிழ் பேசும் மாநிலத்திற்கு தமிழ்நாடு என்ற பெயர் தற்போது மிகப் பொருத்தமானதாக ஒலிக்கும் இந்த காலகட்டத்தில், இந்தப் பெயருக்கான



முரளிதரன் காசி விஸ்வநாதன்

கோரிக்கை முன்வைக்கப்பட்டு, அது ஏற்கப்படாத காலகட்டத்தைப் புரிந்துகொள்வது கடினமாகவே இருக்கும்.

“மெட்ராஸ் என்ற பெயரை, தமிழ்நாடு என்று மாற்றியது மிக முக்கியமானது. பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் நிர்வாக வசதிக்காகச் சூட்டப்பட்ட பெயர்களையும் எல்லைகளையும் தொடர்ந்து வைத்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. நிர்வாக எல்லைகளையும் தாண்டிய அடையாளம் நமக்கு இருக்கிறது. அதைத் தான் இந்தப் பெயர் சுட்டிக்காட்டுகிறது” என்கிறார் தன்னாட்சித் தமிழகம் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஆழி. செந்தில்நாதன்.




இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஐரோப்பா முழுவதுமே இன அடிப்படையிலும் மத அடிப்படையிலுமே தனி நாடுகளாக உருப்பெற்றன. பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் மொழி, இன அடிப்படையிலான பெயர்களையே தங்களுக்குச் சூட்டிக்கொண்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டுகிறார் செந்தில்நாதன்.

“இதை இனவெறியாகவோ, தனித் தமிழ் வெறியாகவோ பார்க்க வேண்டியதில்லை. மெட்ராஸ் மாகாணத்தோடு இணைந்திருந்த பிற மொழி பேசும் பகுதிகள் பிரிந்துசென்றுவிட்ட நிலையில், எஞ்சியிருந்த பகுதிகள் தமிழ் பேசும் பகுதிகளாக இருந்த நிலையில் அதற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டுமென்பது நியாயமான கோரிக்கைதான்” என்கிறார் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளர் து. ரவிக்குமார்.

ஆனால், நாடு என்று வருவதாலேயே இங்கு பலர் அதை தனி நாடு என்று

புரிந்துகொண்டு பேசுகிறார்கள் என்பதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார். தமிழ்நாடு எனப் பெயர் இருந்தாலும் மத்திய அரசால்தான் 60 சதவீத நிர்வாகம் நடைபெறுகிறது; இதைப் புரிந்துகொள்ளாமல் பிற மொழி பேசுபவர்கள் குறித்த வெறுப்பு இங்கு விதைக்கப்படுகிறது என்கிறார் ரவிக்குமார்.

தமிழகத்தில் ஆட்சியில் இருந்தபோது, சட்டமன்றத்தில் தமிழ்நாடு என்ற பெயர் மாற்றக் கோரிக்கை எழும்போதெல்லாம் அதனை தொடர்ந்து எதிர்த்துவந்த காங்கிரஸ் கட்சி 1930களிலேயே தமிழக காங்கிரஸ் கட்சி என்ற பெயரைச் சூட்டிவிட்டது.

1956ல் மொழிவாரி மாநிலங்கள் அறிவிக்கப்பட்டு, ஆந்திரா பிரிந்துசென்றுவிட்ட நிலையில் இந்தக் கோரிக்கை மிகத் தீவிரமடைந்தது. மெட்ராஸ் மாநிலத்திற்கு தமிழ்நாடு எனப் பெயர் சூட்ட வேண்டும் என்பது உள்ளிட்ட சில கோரிக்கைகளை வலியுறுத்தி சங்கரலிங்க நாடார் 1956 ஜூலை 27ஆம் தேதியன்று உண்ணாவிரதப் போராட்டத்தைத் துவங்கினார். பல்வேறு தலைவர்கள் வலியுறுத்தியும் அவர் தனது போராட்டத்தைக் கைவிட மறுத்துவிட்டார். 76 நாள் உண்ணாவிரதப் போராட்டத்திற்குப் பிறகு, அக்டோபர் 13ஆம் தேதியன்று அவரது உயிர் பிரிந்தது.

தமிழரசுக் கட்சியின் ம.பொ. சிவஞானம் போன்றவர்கள் நீண்டகாலமாக பெயர் மாற்றத்திற்காகப் போராடிவந்த நிலையில், சங்கரலிங்க நாடாரின் மறைவு இந்தப் போராட்டத்திற்கு புதிய உத்வேகத்தை அளித்தது.

1957ல் தி.மு.க. முதன் முறையாக சட்டமன்றத்தில் நுழைந்தபோதே, அதனுடைய முதல் தீர்மானம் மெட்ராஸ் ஸ்டேட் என்பது தமிழ்நாடு எனப் பெயர் மாற்றப்பட வேண்டும் என்பதாகத்தான் இருந்தது. 1957 மே 7ஆம் தேதியன்று தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது 42 பேர் ஆதரவாகவும் 127 பேர் எதிராகவும் வாக்களிக்க, தீர்மானம் தோல்வியடைந்தது.

1961 ஜனவரியில் சோஷலிஸ்ட் கட்சியின் உறுப்பினர் பி. சின்னத்துரை மெட்ராஸ் ஸ்டேட் என்பதை தமிழ்நாடு என மாற்ற வேண்டுமென தீர்மானம் கொண்டுவந்தபோது, இது தொடர்பான விவாதத்தை முதலமைச்சர் பிப்ரவரி வரை ஒத்திவைத்தார். ஆனால், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் சட்டமன்றத்தைத் தொடர்ந்து மூன்று நாட்களுக்குப் புறக்கணித்ததையடுத்து முதலமைச்சர் காமராஜர், மெட்ராஸ் ஸ்டேட் என்பதை தமிழ்நாடு என நிர்வாகக் கடிதங்களில் குறிப்பிடுவதற்கு ஒப்புக்கொண்டது.

1961ல் ஒன்றுபட்ட மேற்கு வங்க இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவையின் உறுப்பினர் பூபேஷ் குப்தா மெட்ராஸ் மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர்சூட்டக் கோரும் மசோதா ஒன்றைக் கொண்டுவந்தார். இது குறித்து நீண்ட விவாதம் மாநிலங்களவையில் நடைபெற்றது.

"இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் பழமை வாய்ந்த நகரம் சென்னை"

1964ல் தி.மு.க. உறுப்பினர் ராம. அரங்கண்ணல் இது தொடர்பாக தீர்மானம் கொண்டுவரப்பட்டபோதும், அது தோற்கடிக்கப்பட்டது. இந்தத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசிய அமைச்சர் வெங்கட்ராமன், தமிழ்நாடு என்று சொன்னால் வெளி உலகில் இருப்பவர்களுக்கு எப்படித் தெரியும் அதுமட்டுமல்ல, மெட்ராஸ் என்று சொன்னால்தானே சர்வதேச அரங்கத்தில் கேட்கும்போது பெருமையாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்.

அப்போது தமிழகத்தில் ஆட்சியில் இருந்த காங்கிரஸைப் பொறுத்தவரை, இந்தப் பெயர் மாற்றக் கோரிக்கையை ஏற்பதில் பெரும் தயக்கம் இருந்தது. தமிழ்நாடு என்ற வார்த்தையில் உள்ள நாடு என்பது தனி நாட்டைக் குறிக்குமோ என்ற அச்சம் இருந்தது. "தமிழ்நாடு என்பது நமது நாடா அல்லது இந்தியா நமது நாடா? எப்படி இதையும் நமது நாடு அதையும் நமது நாடு என்று சொல்வது" என முதலமைச்சர் பக்தவத்சலம் கேள்வியெழுப்பினார்.

தவிர, தமிழரல்லாதவர்கள் நிலை குறித்தும் அச்சங்கள் இருந்தன. இதனாலேயே காங்கிரஸ் இந்தக் கோரிக்கையில் பெரிதாக ஆர்வம்காட்டவில்லை. பெயரை மாற்றாமல் இருப்பதற்கே மக்களின் ஆதரவு இருப்பதாகவும் காங்கிரஸ் நம்பியது.

ஆனால், 1967ல் தி.மு.க. பெற்ற வெற்றி எல்லாவற்றையும் மாற்றியது. முதலாவதாக, தலைமைச் செயலகம் அமைந்திருக்கும் புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள பெயர்ப் பலகை, 1967 ஏப்ரல் 14ஆம் தேதியன்று தமிழக அரசு என்று மாறியது.

அதற்குப் பின் 1967 ஜூலை 18ல் சென்னை மாநிலத்தை 'தமிழ்நாடு' ஆகப் பெயர் மாற்றம் செய்யும் தீர்மானம் சட்டப்பேரவையில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. 23.11.1968ல் தமிழ்நாடு பெயர் மாற்ற மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. 1969 ஜனவரி 14ல் மெட்ராஸ் ஸ்டேட் என்பது தமிழ்நாடு ஆக அதிகாரபூர்வமாக மாறியது.

# படைப்பாளிகளுக்கு...

* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!



* படைப்புகளை மின்னஞ்சலில் அனுப்புவது வரவேற்கப்படுகிறது.

*இதழில் வெளியாகிற கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள் யாவும் படைப்பாளிகளின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!

## தொடர்புகளுக்கு

***editor@ithamil.com***



# பணம் ! பத்தும்

## கத்தார் சர்வதேச தடைகளை சமாளித்து தொடர்ந்து வெற்றிநடை போடுவது எப்படி ?

ஜூன் 2017இல் தன் அருகில் உள்ள நான்கு நாடுகள் விதித்த பொருளாதார மற்றும் தூதரக தடையால் பாதிக்கப்பட்டபோது, கத்தார் இரண்டு பெரிய பிரச்சனைகளை எதிர்கொண்டது என்று ஒரு நிபுணர் தெரிவிக்கிறார்.




``கத்தார் நாட்டவர்களுக்கு இரண்டு விதமான சவால்கள் உள்ளன" என்று சொல்கிறார் லண்டனைச் சேர்ந்த ராயல் யுனைடெட் சர்வீசஸ் இன்ஸ்டிட்டியூட்டின் மத்தியக் கிழக்கு ஆராய்ச்சியாளர் மைக்கேல் ஸ்டீபன்ஸ்.

``பின்லேடன் போன்ற உலகிற்கு அச்சுறுத்தலான பயங்கரவாதிகளை ஆதரிக்கும் நாடு அல்ல கத்தார் என்பதை உலக நாடுகளுக்கு உணரச் செய்வது அதன் முதலாவது பிரச்சனை."

``அடுத்தது, பொருளாதாரம் பலமாக இருக்கிறது என்று காட்டுவது. முதலீடு செய்வதற்கு நல்ல நாடு என்றும், வெளிநாட்டு நேரடி முதலீடுகள் செய்து வளர்ச்சி பெறுவதை எளிதாக்குவதற்கான சூழ்நிலைகளை கத்தார் நாட்டவர்கள் உருவாக்கித் தருவார்கள் என்றும் காட்ட வேண்டும்."

சௌதி அரேபியா, பஹ்ரைன், எகிப்து, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நான்கு நாடுகள் தடைகளை விதித்துள்ளன. எண்ணெய் வளம் அதிகம் உள்ள கத்தார், பயங்கரவாதத்தை ஆதரிக்கிறது என்று சொல்லி தடை விதிக்கப்பட்டது. இதை கத்தார் நாடு கடுமையாக மறுக்கிறது.

தடைகளை நீக்க வேண்டுமானால் இரானுடன் பொருளாதார ஒத்துழைப்பை முடிவுக்குக் கொண்டு வருவது, அல்—ஜசீரா தொலைக்காட்சியை மூடுவது உள்ளிட்ட 13 நிபந்தனைகளையும் அவை விதித்தன. இதில் எதையும் ஏற்க முடியாது என கத்தார் மறுத்துவிட்டது. அதனால் 19 மாதங்களாகியும் இன்னும் தடை நீடிக்கிறது.

தங்களுடைய வான்பரப்பை கத்தார் விமானப்




## மேட் ஸ்மித்

போக்குவரத்து விமானங்கள் கடக்கக் கூடாது என்பது உள்ளிட்ட தடைகளை அந்த நான்கு நாடுகளும் விதித்துள்ளன.

பயங்கரவாதத்தை கத்தார் ஆதரிக்கிறதா என்ற கேள்வி இப்போது தலைப்புச் செய்திகளில் இடம் பெறுவது இல்லை. சௌதி பத்திரிகையாளர் ஜமால் காஷோக்ஜி, துருக்கியில் உள்ள இஸ்தான்புல் நகரில் உள்ள சௌதி தூதரகத்தில் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து சௌதி அரேபியாவுக்கு ஏற்பட்ட சிக்கல்கள் இதை பின்னுக்குத் தள்ளிவிட்டன.

தங்களுடைய பொருளாதாரம் இப்போதும் தொழில் செய்வதற்கு உகந்ததாக இருக்கிறது என்பதைக் காட்ட கத்தார் கடுமையாக முயற்சி செய்கிறது.

எனவே, பொருளாதாரப் புறக்கணிப்புக்குப் பிறகு இந்த நாடு எந்த அளவுக்கு அதை சமாளித்துக் கொண்டிருக்கிறது?



தடை விதிக்கப்படுவதற்கு முன்பு வரையில், இப்போது கத்தார் நாட்டைப் புறக்கணிக்கும் நாடுகளின் மூலமாக, கத்தாரின் 60% இறக்குமதிகள் கொண்டு வரப்பட்டன. குறிப்பாக உணவுப் பொருள்கள் அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டன.

எனவே துருக்கி, இரான் வழியாக அவற்றைக் கொண்டு வருவதற்கு பத்திரமான மாற்று வழிகளை கத்தார் அரசாங்கம் ஏற்படுத்த வேண்டியிருந்தது. உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்கும் வேகமான நடவடிக்கைகள் எடுக்கவேண்டியிருந்தது. பால் தேவைகளை சமாளிப்பதை உறுதி செய்வதற்கு பல்லாயிரக்கணக்கான பசுக்களையும் இறக்குமதி செய்தது.

''மிக நன்றாகவே சமாளிக்கும் வகையில் இந்தப் பிரச்சனையை கத்தார் கையாள்கிறது,'' என்று

பெயர் குறிப்பிட விரும்பாத கத்தாரின் முன்னாள் பொருளாதார ஆலோசகர் ஒருவர் தெரிவித்தார்.

ஆனால் உலகில் அதிக அளவுக்கு திரவ வடிவ இயற்கை எரிவாயு ஏற்றுமதி செய்யும் நாடாக உள்ள கத்தார், மேற்கத்திய நாடுகளின் உணவு நிறுவனங்களில் பங்குகளை வாங்கியதற்குப் பதிலாக, தடை நடவடிக்கைகள் தொடங்கி மூன்று மாதங்களில், 2017 செப்டம்பரில், 7.4 பில்லியன் டாலர் மதிப்பிலான ஹமத் ஆழ்கடல் துறைமுகத்தை அதிகாரப்பூர்வமாகத் திறந்தது. அதன் மூலம் பெரிய சரக்கு கப்பல்களையும் நாட்டுக்கு வரவழைப்பது சாத்தியமாகிவிட்டது.



பெரிய சொத்துகளைப் பயன்படுத்தியிருந்தால் நீண்டகால அடிப்படையில் உணவு சப்ளையை உறுதி செய்வதற்கு இன்னும் நன்றாக இருந்திருக்குமே என்று அவர் சொல்கிறார்.

கத்தாரின் இளவரசர் தமீம் பின் ஹமத் அல் தானி, கடந்த மாதம் நாட்டின் தலைநகரில் நடைபெற்ற உலகப் பொருளாதார மாநாட்டில் உரையாற்றினார்.

``பெரும்பாலான நாடுகள் என்ன செய்திருக்குமோ அதைவிட அற்புதமாக அரசு இதைக் கையாண்டிருக்கிறது,'' என்று கத்தார் முதலீட்டு நிதி அமைப்பான அல்—ரயானின் மூத்த இயக்குநரான அக்பர் கான் கூறியுள்ளார்.

``முக்கியமாக, அவர்களுக்கு கணிசமான நற்பெயர் பெற்றுத் தரும் வகையில், சாமானிய மக்களின் வாழ்வு எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் இருப்பதை அவர்கள் உறுதி செய்துவிட்டார்கள். தடை நடவடிக்கை உணர்வு ரீதியாக பாதித்திருக்கலாம், ஆனால், தொழில் செய்யும் எங்களுடைய திறனை பாதிக்கவில்லை'' என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

கத்தாருக்கு நேரமும் சாதகமாக இருந்துள்ளது. முன்பு, பெரும்பாலும் மறு—ஏற்றுமதிகளை கத்தார் நம்பியிருந்தது. உலகெங்கும் இருந்து வரும் சரக்குகளை துபாய், ஐக்கிய அரபு அமீரகம் போன்ற அருகில் உள்ள நாடுகளுக்குக் கொண்டு வந்து, பிறகு சிறிய கப்பல்களில் கத்தாருக்கு கொண்டு செல்ல வேண்டியிருந்தது.

உணவு மற்றும் நுகர்பொருள்கள் கிடைப்பதை உறுதி செய்ததுடன், மத்திய கிழக்கு நாடுகளுக்கு அப்பால், குறிப்பாக அமெரிக்காவுடன் பொருளாதார உறவுகளை அதிகரிப்பதற்கு தீவிர முயற்சிகளை கத்தார் எடுத்து வருகிறது.


அமெரிக்க வணிகத் துறை அமைச்சர் ரோஸ், அமெரிக்க நிதியமைச்சர் ஸ்டீவன் முனுஷின் போன்றவர்களுடன் கடந்த ஆண்டு நடந்த சந்திப்புகள் பற்றி கத்தார் நாட்டின் வணிக அமைச்சக இணையதளத்தில் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

பல மில்லியன் டாலர் மதிப்புக்கு போயிங் பயணிகள் விமானங்களுக்கு கத்தார் விமானப் போக்குவரத்து நிறுவனம் ஆர்டர் தந்திருப்பது மற்றும் அமெரிக்காவில் கத்தாரின் ஒட்டுமொத்த முதலீடுகள் பற்றியும் அதில் சிறப்பம்சமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெர்மனியுடனும் பொருளாதார உறவுகளை அதிகரிப்பதற்கு கத்தார் வர்த்தகத் துறை அதிகாரிகள் தீவிரமாகப் பணியாற்றி வருகின்றனர்.

``வளைகுடா நாடுகளுக்கு அப்பால் உள்ள நாடுகளுடன் அதிக அளவில் புதிய கத்தார் செயல்பாடுகளுக்குத் தடையாக இருப்பதால், பலருக்கும் இன்னும் திருப்தி ஏற்படவில்லை.

``கத்தாரில் அதிகாரவர்க்கம் மிகவும் தீவிரமாக செயல்படுகிறது. அதனால் தான் சந்தை அளவு சிறியதாகவும், போட்டி குறைவாகவும், விலைகள்




நிர்வாகம் மேற்கொண்டுள்ள முயற்சிகளால்தான் தூதரக மற்றும் பொருளாதார மாற்றங்கள் நடந்துள்ளன," என்கிறார் கான்.

``தடை நடவடிக்கைகளுக்குப் பிறகும் தொழில்கள் வழக்கம் போல நடைபெறுகின்றன என்பதை தெரிவிப்பதன் ஒரு பகுதியாக இந்தச் சந்திப்புகள் இருக்கின்றன. இரு வழிகளிலும் வர்த்தகம் நடைபெறுகிறது. எனவே, கத்தாரின் மிகவும் குறிப்பிடத்தக்க பண பலத்தைக் காட்டுவதாக மட்டும் இது நடைபெறவில்லை. ஆனால், கத்தாரில் வெளிநாட்டு நிறுவனங்களின் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை சிறப்பம்சங்களுடன் காட்டுவதாக இது உள்ளது."

கத்தாரில் வெளிநாட்டு முதலீடுகளுக்கு ஊக்கம் தருவதற்கு, தொழிலாளர் சட்டங்கள், தனியார்மயமாக்கல், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் தொடர்பாக பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளை அரசு அறிவித்துள்ளது. வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அதிக பங்கு வரையறைகள் அளிக்கப்படுகிறது. இவற்றால், நாட்டில் முதலீடு செய்து, செயல்படுவதை அரசு எளிதாக்கியுள்ளது.

இருந்தபோதிலும், கட்டமைப்பு பிரச்சனைகள் வெளிநாடுகளின் பெரிய அளவிலான அதிகமாகவும் உள்ளன" என்று சொல்கிறார் பெயர் குறிப்பிட விரும்பாத கத்தாரின் முன்னாள் ஆலோசகர்.


இருந்தபோதிலும், உலகில் எண்ணெய் வளத்தில் மூன்றாவது பெரிய நாடாக உள்ள கத்தார் தடை நடவடிக்கைகளால் ஆரம்பத்தில் உணவு மற்றும் நுகர்பொருள்கள் சப்ளைகளை உறுதிப்படுத்தும் மாற்று வழிகளை ஏற்படுத்துவதில் தடுமாற்றம் இருந்தாலும், இதை சமாளிக்க முடிந்துள்ளது.

திரவ வடிவ இயற்கை எரிவாயு ஏற்றுமதியில் உலகில் மிகப் பெரிய நாடாக உள்ள கத்தார், 2017—ல் 81 மில்லியன் டன் அல்லது உலக ஏற்றுமதியில் 28% அளவுக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

தினமும் 600,000 பேரல்கள் கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்கிறது கத்தார். ஆனால், எரிவாயுவில் அதிக கவனம் செலுத்துவதற்காக, பெட்ரோலிய எண்ணெய் உற்பத்தி நாடுகளின் கூட்டமைப்பான ஒபெக் அமைப்பில் இருந்து அது இந்த ஆண்டு விலகியுள்ளது. இந்த நடவடிக்கைக்கும் தடை நடவடிக்கைக்கும் சம்பந்தம் இல்லை என்று அந்த நாடு கூறியுள்ளது.

தடை விதித்தபோதிலும் அதனுடைய பொருளாதாரம் தொடர்ந்து வளர்கிறது என்ற

அளவிற்கு கத்தார் நாட்டின் ஹைட்ரோகார்பன் வளம் அதிகமாக உள்ளது. 2017ல் அதன் பொருளாதாரம் 1.6% வளர்ந்துள்ளது. 2018—ல் இது 2.4% ஆக அதிகரிக்கும் என்றும், 2019—ல் 3.1% ஆக அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது என்று பன்னாட்டு நாணய நிதியம் (மிவிதி) கூறியுள்ளது.



``மற்ற வளைகுடா நாடுகளுடன் ஒப்பிடும்போது, கத்தார் நாட்டில் பொருளாதார பரவலாக்கம் மிக பலவீனமாக இருக்கிறது,'' என்று லண்டனைச் சேர்ந்த முதலீட்டுப் பொருளாதார அமைப்பின் மத்திய கிழக்குப் பொருளாதார நிபுணர் ஜாசன் டுவே கூறியுள்ளார்.

`` கத்தாரில் வசிப்பவர்களில், அந்நாட்டுக் குடிமக்கள் சுமார் 300,000 பேர் மட்டுமே இருக்கிறார்கள். வேலைபார்க்கும் கத்தார் நாட்டவர்கள் அனைவருக்கும் பொதுத் துறை நிறுவனங்களில் அந்த அரசு வேலை வழங்க முடியும்.''

``அதுவாக விரும்பினால் தவிர தொழிலுக்கு, பொருளாதாரத்தை விரிவுபடுத்த வேண்டிய தேவை கத்தாருக்கு இல்லை,'' என்கிறார் ஸ்டீபன்ஸ்.

``கத்தார் நாட்டவர்கள் விரும்பினால், அதிக எரிவாயுவை உற்பத்தி செய்வதன் மூலம் தாக்குபிடித்துவிட முடியும்,'' என்று அவர் சொல்கிறார்.

``எல்லாவற்றையும் பணத்தால் வாங்கிவிடலாம்'' என்கிறார் அவர்.

## வலுவான பொருளாதாரம்

சௌதி அரேபியா தடைவிதித்த ஒரு மாதத்திற்கு பிறகு பேசிய கத்தார் நிதியமைச்சர் அலி ஷெரீப் அல்—இமாதி தனது நாட்டின் செல்வச் செழிப்பு அண்டை நாடுகளுக்கு உறுத்தலாக இருப்பதாக தெரிவித்தார்.

கத்தாரின் தனிநபர் வருமானம் 124 முதல் 900 டாலருக்கு இடையில் உள்ளது என்பதில் இருந்து அந்த நாட்டின் செல்வ நிலையை அறிந்துக் கொள்ளலாம். உலகிலேயே மிகவும் அதிக தனிநபர் வருமானம் கொண்ட நாடு கத்தார் என்று உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியமும் கூறுகின்றன.

உண்மையில், இந்தத் தடைகள் கத்தாரை மேலும் வலுவூட்டியிருப்பதாக பலர் கருதுகின்றனர். ஏனெனில் தற்போது கத்தார், சர்வதேச நாடுகளில் முதலீடுகள் செய்வதில் முனைப்பு காட்டி வருகிறது.

## அமெரிக்காவின் நண்பன்?

மற்றொரு புறம் அண்மையில் இஸ்தான்புலில் உள்ள சௌதி அரேபிய துணை தூதரகத்தில் பத்திரிகையாளர் ஜமால் கஷோக்ஜி கொல்லப்பட்ட பிறகு, சர்வதேச அளவில் சௌதிக்கான அழுத்தங்களை அதன் நட்பு நாடான அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் அதிகரித்துள்ளன.

இவை அனைத்திற்கு பிறகும், இரானுக்கு எதிராக அமெரிக்காவின் போரில் சௌதி தனது உற்ற நண்பன் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறுகிறார்.

இதற்கு முக்கியமான காரணம் உலகில் உள்ள மொத்த கச்சா எண்ணெய் இருப்பில் சுமார் 18% சௌதி அரேபியாவில் இருப்பதும், அந்த நாடு அமெரிக்காவில் பெரிய அளவில் முதலீடு செய்கிறது என்பதும் தான். இவற்றைவிட மற்றொரு மிகப்பெரிய உண்மை என்னவென்றால், அமெரிக்கா உற்பத்தி செய்யும் ஆயுதங்களின் மிகப்பெரிய நுகர்வோர் சௌதி என்பதே.

உலகிலேயே மிகப் பெரிய ஆயுத விற்பனையாளர் அமெரிக்கா. மத்திய கிழக்கு நாடுகளில் தான் அமெரிக்காவின் பாதிக்கும் அதிகமான ஆயுதங்கள் விற்பனையாகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

உலகில் தயாரிக்கப்படும் மொத்த ஆயுதங்களில் ஏறக்குறைய பத்து சதவிகிதத்தை சௌதி

வாங்குகிறது என்பதும் கூடுதல் தகவல்.

கஷோக்ஜி கொலைக்கு பிறகு கடந்த சில தினங்களில் அதிபர் டிரம்புக்கும், சௌதி பட்டத்து இளவரசர் சல்மானுக்குமான இடைவெளி அதிகரித்திருப்பது உண்மையென்றாலும், கோடிக்கணக்கான டாலர் முதலீடு செய்யும் ஒரு நாட்டின் மீதான அன்பு அமெரிக்காவுக்கு குறைந்துவிடும் என்று கருதுவது சரியான கணிப்பாக இருக்காது.

“110 பில்லியன் டாலர் முதலீட்டை தடுப்பதற்கு எனக்கு விருப்பமில்லை” என்று நவம்பர் மாதம் டிரம்ப் நேரிடையாக கூறியது இந்த கருத்துக்கு வலு சேர்க்கிறது.

இந்த சந்தர்ப்பத்தில் டிரம்பின் நிர்வாகத்தின் எதிர்வினை கத்தார் மீதான பொருளாதாரத் தடை என்ற சிக்கலை நீக்கலாம். சௌதி அரேபியா, அமெரிக்காவுடன் இணக்கமாக இருப்பது, கத்தார்—அமெரிக்கா இடையிலான உறவில் விரிசல் ஏற்படுத்தி விடக்கூடாது என்ற அச்சம் அமெரிக்காவுக்கு கண்டிப்பாக இருக்கும்.

1996 முதல், அல்—உதீத் (கிறீ ஹிபீமீவீபீ) என்ற பிரம்மாண்டமான ராணுவத் தளத்தை ஒரு பில்லியன் டாலர் செலவில் கத்தார் அமைத்தது. நீங்கள் விரும்பினால், உங்களுக்காக பிரம்மாண்டமான ராணுவத் தளத்தை நாங்கள் கட்டித்தருகிறோம் என்று அமெரிக்கா சொன்னது. எனவே, கத்தாரில் அமெரிக்காவின் இருப்புக்கான ஒரு முக்கியமான காரணமாக இந்த ராணுவத் தளம் அமைந்துவிட்டது.

2003இல் அமெரிக்கா சௌதி அரேபியாவில் இருந்த தனது பெரிய ராணுவ தளத்தை கத்தாருக்கு மாற்றிவிட்டது. அல் உதீதில் இருக்கும் ராணுவத்தளம்தான், அமெரிக்கா பிற நாடுகளில் அமைத்திருப்பதிலேயே மிகப்பெரியது.

பிராந்திய நடவடிக்கைகளுக்கான தலைமையகமாகவும், சிறப்பு படைகளின் செயல்பாட்டு தளமாகவும் மாறிய அல் உதீதில் மொத்தம் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்கள் இருக்கின்றனர். 2003ஆம் ஆண்டு அமெரிக்கா இராக் மீது தாக்குதல் நடத்தியது மத்திய கிழக்கு நாட்டில் இருந்த தனது படைப்பிரிவைக் கொண்டுதான் என்பதும் நினைவுகூரத்தக்கது.




இந்த நிலையில் கத்தாருடன் அமெரிக்காவின் உறவுகள் கசந்துபோனால், அமெரிக்காவின் நிலை திண்டாட்டமாகிவிடும்.

அது மட்டுமல்ல, அமெரிக்காவின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப இஸ்லாமிய அமைப்புகளுடன் கத்தார் மத்தியஸ்தம் செய்து வருகிறது, அதிலும் பாதிப்பு ஏற்படும். அத்துடன், எந்த நாடு சௌதியுடன் முறைத்துக் கொண்டாலும், அது கத்தார் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்ற தவறான செய்தியையும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு கொடுக்கும். இதுவும் நீண்டகால அடிப்படையில் சௌதிக்கு அனுகூலமாக இருக்காது.

# புலம்பெயர்ந்தோரும்

## ‘கடும்போக்கு புலம்பெயர் தமிழர்கள் செயல்பாடு எங்களிடம் செல்வாக்கு செலுத்தாது’

கடும் போக்குடைய புலம்பெயர் தமிழ் மக்களின் செயற்பாடுகள் தமிழ் தேசிய கூட்டமைப்பு எடுக்கும் தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தாது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினரும் ஐரோப்பிய நாடாளுமன்றின் கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களில் மூலம் நிரூபணமாகியுள்ளமையை இரா.சம்பந்தன் எடுத்துக்காட்டினார் தமிழ் தேசிய கூட்டமைப்பினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அரசாங்கத்தினை மீளக் கொண்டுவருவதற்கு நாம் வழங்கிய ஆதரவு கொள்கை அடிப்படையிலானதாகும் என்றும் நாடானது ஒரு பிரதமரோ அரசாங்கமோ இல்லாத ஒரு இக்கட்டான நிலைமையில் இருந்தபோது




இலங்கை நட்பு குழுவின் உறுப்பினருமான ஜெப்ரி வான் ஓர்டனை, கொழும்பில் சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் அரசியல் நிலைமை தொடர்பில் தெளிவுபடுத்திய சம்பந்தன் அரசியலமைப்பு சபையின் மீள் நியமனத்தின் முக்கியத்துவத்தினை சுட்டிக்காட்டிய அதேவேளை இந்த அரசியலமைப்பு சபையின் மீள் நியமனத்தினால் நீதித்துறையின் சுயாதீனத்தன்மை பேணப்பட்டுள்ளமையானது நாட்டு பொருளாதாரத்திற்கும் நிறுவனங்களின் சுமுகமான செயற்பாடுகளுக்கும் ஏற்படவிருந்த பாதக விளைவுகளை தடுக்கும் முகமாகவே அரசாங்கத்தினை மீள கொண்டுவருவதற்கான ஆதரவினை கொடுத்ததாகவும் சம்பந்தன் தெரிவித்தார்.

புதிய அரசியல் யாப்பு உருவாக்கம் தொடர்பில் தெளிவுபடுத்திய தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் கடந்த டிசம்பர்



# குடிகளே!

7ம் திகதி சமர்ப்பிக்கப்படவிருந்த நிபுணர்கள் குழுவினால் தயாரிக்கப்பட்ட வரைபு யாப்பு பிப்ரவரி மாதம் 4ம் திகதிக்கு முன்பதாக நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த சம்பந்தன் புதிய அரசியல் யாப்பானது நாடு ஒருமித்ததாகவும் பிரிக்கப்பட முடியாததாகவும் இருப்பதனை உறுதி செய்யும் ஒன்றாக அமையும் அதே சந்தர்ப்பத்தில் மக்களும் பிராந்திய மாகாண அரசாங்கங்களும் தமது வாழ்வில் தொடர்புடைய அன்றாட விடயங்கள் தொடர்பில் அதிகாரங்களை பயன்படுத்தும் வகையிலான நேர்மையான ஒரு அதிகாரப் பகிர்வினையும் கொண்டிருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

ஜெப்ரி வான் ஓர்டன் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்ன் மற்றும் ஊடக பேச்சளார் எம்.ஏ.எசுமந்திரனை கொழும்பில் சந்தித்தார்.

மேலும் ஒரு புதிய அரசியல் யாப்பு கொண்டுவரப்படுகின்றபோது அது நியாயமானதொன்றாக இருக்கும் பட்சத்தில் அதற்க்கு எமது மக்கள் தமது ஆதரவினை கொடுப்பார்கள் எனவும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் தெரிவித்தார்.

13வது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதிலிருந்து பதவிக்கு வந்த ஒவ்வொரு தலைவர்களும் அரசியல் யாப்பில் முன்னேற்றத்தினை கொண்டுவருவதற்கு பல்வேறு கருமங்களை மேற்கொண்டுள்ளனர் என தெரிவித்த இரா.சம்பந்தன் ஜனாதிபதி பிரேமதாசாவின் காலத்தில் மங்கள முனசிங்க அறிக்கை, ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் காலத்தில் 2000ம் ஆண்டு அறிக்கை, மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் காலத்தில் அனைத்து கட்சி தெரிவுக்குழு, மற்றும் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் அறிக்கை போன்றன அரசியல் யாப்பிற்கு அதிகளவு முன்னேற்றங்களை பரிந்துரைந்திருந்தன எனவும் தெரிவித்தார்.

மேலும் “நான் நியாயமாக நம்பிக்கை கொண்டுள்ளேன். ஏனெனில் இது எனது நாடு. இந்த நாடு செழிப்படைய வேண்டும் என்பது எனது விருப்பம். எனவே என்னால் நம்பிக்கையற்றவனாக



இருக்க முடியாது,” எனவும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் தெரிவித்தார்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் நடவடிக்கைகள் தொடர்பில் பதிலளித்த சுமந்திரன் தீவிரவாத போக்குடைய புலம்பெயர்




சமூகம் மிக சிறிய எண்ணிக்கையிலேயே உள்ளனர் என தெரிவித்த அதேவேளை இலங்கையில் நியாயமான அதிகார பகிர்வு இடம்பெறும் சந்தர்ப்பத்தில் அத்தகைய நடவடிக்கைகளுக்கு பெரும்பான்மையான புலம்பெயர் சமூகம் தமது ஆதரவினை வழங்கும் எனவும் தெரிவித்தார்.

மேலும் கடும் போக்குடைய புலம்பெயர் தமிழ் மக்களின் செயற்பாடுகளும் நடவடிக்கைகளும் நாம் எடுக்கும் தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தாது என தெரிவித்த இரா.சம்பந்தன் இலங்கையில் இடம்பெற்ற ஒவ்வொரு தேர்தலிலும் அத்தகைய கடும்போக்காளர்களை மக்கள் தோற்கடித்திருக்கிறார்கள் என்பதனையும் சுட்டிக்காட்டினார்.

காணி விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த சம்பந்தன் நாங்கள் அரசாங்கத்தினால்

பிரதேசங்களின் இன விகிதாசாரத்தில் மாற்றங்களை கொண்டுவரும் நோக்கில் முன்னெடுக்கப்படும் குடியமர்வுகளை எதிர்க்கிறோம். மாறாக இயற்கையாக மக்கள் குடியமர்வதனை எதிர்க்கவில்லை எனவும் தெரிவித்தார்.

மேலும் தமிழ் பேசும் மக்கள் தமது நிலத்தினையும் கலாசாரத்தினையும் பேணுவதில் மிகவும் உள்ளார்ந்த அக்கறை கொண்டவர்கள் என்பதனையும் வலியுறுத்தினார்.

இந்த சந்திப்பில் கருத்து தெரிவித்த ஜெப்ரி வான் ஓர்டன் 2009 இற்கு பின்னர் இலங்கையில் நல்லிணக்க முயற்சிகளுக்கு அதிகளவு வெளிநாட்டு உதவி கிடைக்கும் என தான் எதிர்பார்த்ததாகவும் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ உண்மையான நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கு போதிய முயற்சிகளை மேற்கொள்ளாமையினையிட்டு தாம் கவலை அடைவதாகவும் தெரிவித்தார்” என குறிப்பிடப்பட்டுள்ளது.

மாகாண நிர்வாகத்தில் தமிழ் மக்களுக்கு கடந்த காலங்களில் அநியாயங்கள் இடம்பெற்றதாகவும், அவ்வாறான அநியாயங்களும் எதிர்காலத்தில் நடந்துவிடக் கூடாது எனவும் இலங்கை கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவிடம், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரா. சம்பந்தன் கேட்டுக் கொண்டார்.

கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டதன் பின்னர், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை ஹிஸ்புல்லா கொழும்பில் சந்தித்தார்.


இதன்போது எந்தவொரு இனத்துக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் இன, மத வேறுபாடுகளுக்கு அப்பால் நீதியாகவும், நேர்மையாகவும் தனது பணிகளை முன்னெடுக்கப் போவதாக, சம்பந்தனிடம் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ்

தெரிவித்தார்.



கிழக்கு மாகாண ஆளுநராக செயற்படுவதற்கு ஒத்துழைப்புக்களை வழங்குவதாக ஹிஸ்புல்லாவிடம் இந்த சந்திப்பின்போது உறுதியளித்த சம்பந்தன்; “தமிழ் மக்கள் பல்வேறு துன்பங்களைத் தாங்கி நிற்கிறார்கள். கடந்த காலங்களில் அரச நியமனங்களிலும், பாடசாலைகளிலும் மாகாண நிர்வாகத்தில் அவர்களுக்கு அநியாயங்கள் இடம்பெற்றிருக்கிறன. எதிர்காலத்தில் அவ்வாறு நடந்துவிடக்கூடாது” என வேண்டிக் கொண்டார்.

“தமிழ் மக்கள் யுத்தத்தில் மிக மோசமாக பாதிக்கப்பட்டவர்கள். அவர்கள் எந்த அரசாங்கத்தோடும் இணைந்து அமைச்சுக்களை பெற்றுக்கொள்ளாமல் தமது உரிமைககளைப் பெற்றுக் கொள்வதற்காக இன்று வரை போராடி வருகிறார்கள். இவ்வாறான சூழ்நிலையில் நீங்கள் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளீர்கள். நீங்கள் தமிழ் பேசும் ஒருவர். நேற்று ஆளுநர் செயலகத்தில் சகல இன மக்களையும் சந்தித்து பிரச்சனைகளை கேட்டறிந்தீர்கள்.இது சந்தோசமான வரவேற்கத்தக்க விடயம்“ என்றும் சம்பந்தன் கூறினார்.




“தமிழ் — முஸ்லிம் மக்களின் உரிமைகளை பாதுகாத்து அவர்களுக்கிடையில் ஒற்றுமையை வளர்க்கும் அதேவேளை, தமிழ் மக்களின் காணிப்பிரச்சினை, சுகாதாரப் பிரச்சினை, கல்வி, நிர்வாகம் போன்ற அடிப்படைப் பிரச்சினைகளை தீர்த்து வைக்க நீங்கள் அதிகளவு அக்கறை செலுத்த வேண்டும்“ என்றும், ஆளுநர் ஹிஸ்புல்லாவிடம் சம்பந்தன் கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த ஆளுநர்; “எனது பணிகளை நீதியாகவும், நேர்மையாகவும் எந்தவொரு இனத்துக்கும் பாதிப்பு ஏற்படாத வகையிலும் முன்னெடுப்பேன்” என உறுதியளித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநராக ஹிஸ்புல்லா நியமிக்கப்பட்டமை தொடர்பில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், முக்கியஸ்தர்களும் அதிருப்தியை வெளியிட்டு வரும் நிலையில், இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குழந்தைகளாகவே இருக்கட்டும்

சாப்பிட்ட பிறகும்
காய்கறிச் சோறு
கண்டபடி இரைந்து கிடக்கட்டும்!

நடக்கும் இடத்திலெல்லாம்
விளையாட்டுச் சாமான்கள்
கால்களை இடறிவிடட்டும்!

தண்ணீர் பாத்திரங்கள்
நீர்சிந்தி விளையாடட்டும்!

படுக்கையறையில்
தலையணைகள் சண்டையிட்டுக் கொள்ளட்டும்!

புத்தகத் தாள்கள்
கிழிந்து கிழிந்தே கிடக்கட்டும்!

படிக்கமுடியா எழுத்து வடிவத்தில்
பள்ளிக்கூடங்கள் தொலைந்து போகட்டும்!

காலி இடங்களையெல்லாம்
பேனா மை இலுப்பியும்
பவுடர் டப்பா கொட்டியும்
தெருமணல் சிதறியும்
அலங்கோலமாய் வந்து
நிரப்பிக்கொள்ளட்டும்!

புதுப்புது வார்த்தைகள்
புரியாத வார்த்தைகளென
பேச்சு மொழியொன்று
புதிதாய் உலவட்டும்!

விட்டுவிடுங்கள்
ஐந்து வயது வரையிலாவது
அது குழந்தைகளால்
வாழும் வீடாகவே இருக்கட்டும்!

**விஜயநாகா**

# மனிதன் பள்ளிக்கூடம்

பெற்றவர் சுமந்த கனவு
முதுகில் புத்தகச் சுமையாய்!
இஞ்சினீயர், டாக்டர்
என்ற ஏராளமான
எதிர்பார்ப்புகளில்...
குழந்தை
குட்டி போடுமென்ற
ஆசையில்
புத்தகத்தில் வைத்த
மயிலிறகை
மறந்து போனது!

**அரவிந்த் சந்திரா**

# கீதை சாரம்

உற்றோரை கொல்லுதல் நியாயமா தர்மமா?
உள்ளம் தடுமாறிட நின்றான் வில்லாளன்!

மாயக் கண்ணனோ புன்னகை செய்தான்
மயக்கம் அகல கீதை சொன்னான்

முதலும் நானே முடிவும் நானே!
முயன்று அடைந்திடும் பரம்பொருளும் நானே!

அழிந்து போகும் உடலோ நன்று!
அழியா ஆன்மா காத்திடல் இனிது!

கடமையைச் செய்தால் இனிமை காண்பாய்!
காரணம் கண்டால் மாயை கொள்வாய்!

ஆவது ஒன்றே குறியாய் கொள்வாய்!
அறிந்தோர் என்றே இரக்கம் கொள்ளாய்!

நன்மையும் தீமையும் தோன்றுதல் இயல்பு!
நடப்பவை நன்றே எண்ணுதல் துணிவு!

வீரனுக்கு அழகு எதிர்த்து நிற்றல்!
வந்தோர் தெவ்வரெனச் சுழற்றி எறிதல்!

பிறப்பதும் இறப்பதும் பூமியில் வட்டம்.
பிறப்பற்ற நிலையே முக்தியின் எச்சம்!

வசையும் பொறுப்பாய் இசையும் வெறுப்பாய்!
வன்மையோடு இப்போதே ஆயுதம் பிடிப்பாய்!

மாண்டால் கிடைக்கும் உயர்ந்த வானுலகு!
மாய்த்தால் முடிசூடி ஆள்வாய் இவ்வுலகு!

யோகத்தை கற்றிடு அமைதி கிடைக்கும்!
யாரென்றும் பாராமல் வில்லை எடுத்திடு!

கி. இலட்சுமி

## தந்தையைப் போல் தனையன்!

நடிகை சீயான் விக்ரமின் மகன் துருவ் விக்ரம் தற்போது பாலா இயக்கத்தில் வர்மா படத்தில் நடித்து முடித்துள்ளார். இந்த படம் அடுத்த மாதம் திரைக்கு வரவுள்ள நிலையில் தற்போது உடல் எடையை கூட்டி வெளியிட்டுள்ள ஒரு புகைப்படத்தைப் பார்த்து ஆச்சர்யமடைந்த அனைவரும் அவரது அப்பாவோடு ஒப்பிட்டு பேசி வருகின்றனர். ‘வர்மா’ படத்தில் நடித்ததற்காக தான் பெற்ற முதல் சம்பளத்தைக் கேரள வெள்ளத்துக்கு அளித்துள்ளார் துருவ்.



வளரும் பயிர் நல்லவிதமாக வளர்கிறது!

## இப்படி சூப்பர்ஸ்டாரோடு வரணும்!



வந்தாலும் சூப்பரா வரணும்!!

‘ஒரு பக்க கதை,’ ‘எனை நோக்கி பாயும் தோட்டா’ ‘வந்தா ராஜாவாதான் வருவேன்’ படங்களில் நடித்து வருபவர் மேகா ஆகாஷ். இந்நிலையில், அந்த 3 படங்களையும் முந்திக்கொண்டு, தற்போது ரஜினியின் ‘பேட்ட’ படம் மூலம் தமிழில் அறிமுகமானதில் மிகுந்த உற்சாகத்தில் இருக்கிறார் மேகா ஆகாஷ். இன்னொரு மகிழ்ச்சியாக, இந்தியில் உருவாகும் ‘சாட்டிலைட் சங்கர்’ படத்தில் நடித்து வருவதையும் பகிர்ந்து வருகிறார்.

‘அடங்க மறு’ படத்தில் ஜெயம் ரவிக்கும், ‘இமைக்கா நொடிகள்’ படத்தில் அதர்வாவுக்கும் ஜோடியாக நடித்தவர் ராஷி கண்ணா. இவர் தற்போது, சிம்புவின் ‘வந்தா ராஜாவாதான் வருவேன்’ படத்திலும் நடிக்கிறார். வெங்கட்பிரபு இயக்கத்தில் உருவாக இருக்கும் படம் ‘மாநாடு’. இப்படத்தில், சிம்பு ஜோடியாகவும் ராஷி கண்ணா நடிக்கவிருக்கிறார். இந்தப் படத்துக்காகத் தற்காப்புக் கலைகளை 28 நாட்கள் பாங்காக்கில் தங்கியிருந்து கற்றுக்கொள்ள இருக்கிறார் சிம்பு. படத்துக்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார்.



## ராசியான நடிகை ராஷி!

விவாகத்துக்குப் பிறகு விவேகம் கூடட்டும்

## விஷாலுக்கு விவாகம்!

அந்த ‘ராஷி’ படத்துக்கும் அமையட்டும்!

விஷாலின் அடுத்த படம் ‘அயோக்யா.’ இப்படத்தில் விஷாலுக்கு ஜோடியாக ராஷி கண்ணா சேர்ந்த நேரம், ‘ராசியான பொண்ணு’ என்ற பெயர் கிடைத்திருக்கிறது. விஷால் திருமணம் குறித்து நீண்ட காலமாக தமிழ் சினிமா உலகில் பேசப்பட்ட நிலையில், விஷால் திருமணம் செய்யவிருக்கும் அனிஷா அல்லா ரெட்டியுடன் தனது திருமணத்தை உறுதி செய்து இன்ஸ்டாகிராமில் பதிவு செய்திருக்கிறார். ஏற்கெனவே தெரிவித்தபடி நடிகர் சங்கக் கட்டடத்தில் தான் அவரின் திருமணம் மார்ச் மாதம் நடக்க இருப்பதாகக் கூறப்படுகிறது.

# மங்காத தமிழென்று


## தமிழர் திருநாளும் திருவள்ளுவர் தினமும்...

சங்குகளும் திருவிழாக்களும், சமுதாயத்தை இணைக்கும் சக்தியாக மட்டுமின்றி, மனிதர்களை இயற்கையோடும் காலத்தோடும் இணைக்கும் சங்கிலிகளாகவும் உள்ளன. குறிப்பாக, தமிழ் மாதங்கள் எல்லாம் பௌர்ணமியுடன் இணைத்துப் பெயரிடப்பட்டுள்ளன.

சித்திரை நட்சத்திரம் பௌர்ணமியில் வருவதால் சித்திரை மாதம் என்றும்; வைகாசி, விசாக நட்சத்திரத்தை ஒட்டியும்; மார்கழி, மிருகசீரிஷ நட்சத்திரத்தை ஒட்டியும் பெயர்பெற்றுள்ளன. இந்த நட்சத்திரங்கள் முருகன், சிவன் போன்ற தெய்வங்களுக்குப் புனிதமானவையாகப் போற்றப்படுகின்றன.

காலச் சுழற்சியைக் குறிக்கும் நாளும், பருவமும் மனித வாழ்வின் சந்தங்களோடு இணைக்கப்படுகின்றன. காலச் சக்கரத்தின் சுழற்சியில், நிரந்தரம் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது; வாழ்வு, புத்தாடை புனைந்து தன்னைப் புதுக்கிக் கொள்கிறது.

தொல்காப்பியம், காலப்பகுப்பையொட்டி காதல் வாழ்வு நிலைகளைக் காட்டுகிறது. இளவேனில் காலத்தைப் புணர்ச்சியோடும், கார் காலத்தை இருத்தலோடும், வேனிற் காலத்தைப் பிரிவோடும், ஊடலையும் இருத்தலையும் இணைக்கின்றது. ஐந்திணைக்கும் சேயோன், மாயோன், இந்திரன், வருணன், கொற்றவை ஆகியவை ஆகியவை தனித்தனிக் கடவுள்களாகக் கூறப்படுகின்றனர்.




தமிழ் மரபில், மார்கழி மாதம் திருமாலுக்கும், சிவனுக்கும் உரிய மாதங்களாகக் கருதப்பட்டு, மாதம் முழுதும் திருப்பாவை, திருவெம்பாவை பாடல்களை இசைத்து கூட்டு வழிபாடு, பன்னெடுங்காலமாக நடந்து வருகிறது.

மாதங்களிலே நான் மார்கழி என்று கண்ணனாலே சிறப்பிக்கப்படும் மாதத்தில், கோபியர்கள் கண்ணனை சிறப்பித்துப் பாடி, நோன்பு நோற்று, மழையையும் நல்ல கணவர்களையும் வேண்டுகிறார்கள். அதே போன்று, திருவெம்பாவையில் சிவனடியார்கள், முன்னைப் பழமைக்குப் பழமையாகவும் பின்னைக்குப் பெயர்த்தும பெற்றியனாக உள்ள சிவன் புகழ்பாடிப் புனலாடுகின்றனர். இரண்டிலும் இயற்கை வழிபாடு இறைவழிபாடாக மலர்ந்தாலும், அடிப்படையில் செழிப்புத் தொன்மத்தின் விளக்கமாக உள்ளன. மழையும், பொய்கையும் கடவுளின் கருணையின் குறியீடுகளாகின்றன.

திருப்பாவை, திருவெம்பாவையின் தொடர்ச்சியான திருப்பள்ளியெழுச்சி ஆகிய இரண்டுமே இறையருளால் வாழ்வு

சங்கே

# முழங்கு!

கா. செல்லப்பன்

வளம்பெறுவதைக் கூறி முடிகின்றன. திருப்பாவை செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால், எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் என்றும், திருப்பள்ளியெழுச்சி மெய்க் கருணையும், நீயும் அவனியிற்புகுந்து எமை ஆட்கொள்ளவல்லாய் என்றும் நிறைவு பெறுகின்றன.

இதன் தொடர்ச்சியாகவே தைப் பொங்கலை, சமயச் சார்பு மிகுதியில்லாத வழிபாட்டு விழாவாகக் கருத வேண்டும். சங்க காலத்துத் தை நீராடல் பற்றி பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை ஓர் ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ளார். தைஇத் திங்கள் தன்கயம் போல என்று புறநானூறும், தைஇ நின்ற தண் பெயற் கடை நாள் என்று அகநானூறும் கூறுவதைக் காட்டுகிறார். இப்போது மகளிரே நீராடினர் என்றும் கூறுவார்.

இதற்குப் பின் எழுநூறு ஆண்டுகளுக்குப் பின் சமய உணர்வுள்ள மார்கழி நீராடலாயிற்று, பரிபாடலிலும் கலித்தொகையிலும் தை நீராடலே சமய உணர்வோடு பேசப்படுகிறது. திருவாதிரையன்று இது தொடங்குவதாகவும் குறிப்பிடப்படுகிறது. மார்கழித் திங்கள் மதி நிறைந்த நாள் என்று ஆண்டாள் தொடங்குவதால், இது மார்கழி பௌர்ணமியில் தொடங்கியிருக்க வேண்டும். எது எப்படியாயினும் தை முதல் நாள் விழாவை, மார்கழி நோன்பின் தொடர்ச்சியெனக் கொள்வதில் தவறில்லை.

தை முதல் நாள், பொங்கல் திருநாளாக நீண்ட காலமாகவும், அண்மைக் காலமாக தமிழர் திருநாளாகவும் கொண்டாடப்படுகிறது. இது அடிப்படையில் இயற்கையோடு இணைந்த, சூரியனை வழிபடும் திருநாள்; உழைப்பைப் போற்றும் பெருநாள்.




பொதுவாக, தமிழ் மாதங்கள் திங்களின் இயக்கத்தின் அடிப்படையிலேயே கணக்கிடப்படுகின்றன. ஆனால், தை மாதப் பிறப்பு, சௌர மானம் என்ற சூரியனை அடிப்படையாகக் கொண்ட கணக்கு முறையை ஒட்டியுள்ளது. உத்தராயணம் அல்லது சூரியனின் வடதிசை பயணம் தை முதல் நாளில் நிகழ்வதால், தைப் பொங்கல் சூரிய வழிபாடாகவும் உள்ளது.

சூரியனால் உயிர்களும் உழவும் சிறப்புறுவதால், அவன் புத்தொளி வீசி வருவதை, அறுவடைக்குப் பின் புதுப் பானையில் புத்தரிசியில் பொங்கலிட்டு, அவனுக்கு நன்றி செலுத்தும் நன்னாளாகிறது. போகியில் பழையன கழிந்து, பொங்கலில் புதியன பொலிகிறது.

அறிஞர் தெ.பொ.மீ. கருத்துப்படி, மனிதனுடைய சிறப்பு, கூடி உழைத்து, கூடி வாழ்ந்து, கூடி அனுபவித்தலே பொங்கல் திருநாள். மனிதனோடு உழைத்த மாடுகளுடன் கூடிக் கொண்டாடப்படுவதால், இது தலைசிறந்த கூட்டுறவுத் திருநாளாகும். மேலும், இத் திருநாளை சாதி, மத பேதமின்றி அனைவரும் இணைந்து கொண்டாடுவதால் இதை ஒரு சமரச , சமதர்ம, சமநிலைத் திருவிழா என்றும் அவர் கூறுவார்.

தமிழர்களின் இயற்கை மற்றும் உழைப்பைப் போற்றும் நெறியின் வெளிப்பாடாக உள்ள பொங்கல் விழா, தமிழர் திருநாளாக மாறியதில் வியப்பில்லை. சென்ற நூற்றாண்டில் தமிழின மறுமலர்ச்சி பல நிலைகளிலும் நிகழ்ந்ததன் ஒரு பகுதியே இது. இது, தமிழகம் தாண்டி மலேசியா, சிங்கப்பூர் போன்ற மற்ற உலக நாடுகளிலும் சிறப்பாகத்தமிழர் திருநாளாகக்கொண்டாடப்பட்டு வருகிறது. அப்போது இலக்கியம், மொழி சார்ந்த நிகழ்ச்சிகளும் நடைபெறத் தொடங்கின.

தமிழர் திருநாளையொட்டி வரும் ஜல்லிக்கட்டும் பண்டைத் தமிழர் வாழ்வோடு பின்னிப்பிணைந்த வீர விளையாட்டே. இது ஏறுதழுவல் என்று முல்லைக்கலியில் கூறப்பட்டுள்ளது. இந்த விழாவும், காளைகளும் இளங்காளைகளும் இணைந்து வாழ்ந்ததன் எடுத்துக்காட்டே.

இப்படி உலகத் தமிழர்களை ஒருங்கிணைக்கும் இந்த விழாவுக்கு அடுத்து, உலகத் தமிழரின் முழுமையான அடையாளமாக உள்ள திருக்குறளைப் போற்றும் திருவள்ளுவர் தினமாகக் கொண்டாடப்படுவதும் இயல்பே. திருக்குறளும் உழவைப் பெரிதும் போற்றுகிறது.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புவதை தலையான பண்பாடாகக் கூறுகிறது. ஒரு நாட்டின் சிறந்த செல்வமாக தள்ளா விளைவுளைக் குறிக்கிறது. மாடு என்ற சொல்லை செல்வம் என்ற பொருளில் பயன்படுத்துகிறது. அனைத்துக்கும் மேலாக அறம், பொருள், இன்பம் என்ற தமிழ் வாழ்வின் முப்பெரும் கூறுகளை முப்பாலாகக் காட்டுகிறது.

இந்திய தத்துவ மரபிலேயே தனித்தன்மை வாய்ந்தது திருக்குறள் என்பார் ஆல்பர்ட் ஸ்வைட்சர்; அதற்குக் காரணம், அதன் வாழ்வு ஏற்புத் தத்துவம். திருக்குறளின் அடித்தளம், அன்பு என்னும் அக ஒழுக்கம். அந்த அன்பு காதலாக அரும்பி, குடும்பப் பாசமாக மலர்ந்து, உலகையும் எல்லா உயிர்களையும் ஏற்கும் அருளாக மணம் வீசுவதற்கு வாழும் வழியை ஆக்க நெறியாக, எல்லோரும் அவரவர் நிலையிலிருந்து உய்வு பெறும் ஒழுக்க நெறியாக அது காட்டுகிறது.

தனி மனித, குடும்ப வாழ்வை அறமாகவும், சமூக வாழ்வைப் பொருளாகவும், காதலை இன்பமாகவும் குறள் வகுத்துள்ளது. ஓர் அறநூலிலே காதலின் நுணுக்கங்களை விரிவாக, ஆனால், நெறி தவறாமல் கவித்துவத்தோடும், நாடகப் பாங்கோடும் காட்டுவது ஒரு புரட்சியே. ஊடல் நுணுக்கத்தை ஓர் அதிகாரம் முழுதும் கூறிவிட்டு, ஊடுதல் காதற்கின்பம்; அதற்கின்பம் கூடி முயங்கப் பெறின் என்று, இன்பம் இன்பம் என்று இரண்டு முறை கூறி முடிகிறது. திருக்குறள் உயிர் இறையோடு ஒன்றுவதில் தொடங்கி, உடல்கள் காதலில் ஒன்றாவதில் முடிகிறது. தமிழின் முதல் உயிர் எழுத்தான அகரத்தில் தொடங்கி, கடைசி மெய்யெழுத்தோடு முடிகிறது.

இப்படித் தமிழ், தமிழரின் முதலும் முடிவுமாக இருந்தாலும், திருக்குறள் சாதி, மதம், இனம் ஏன், தேச எல்லைகளைக் கடந்த ஒரு பொதுமையான நெறியைக் கூறுவதால், அதை ஒரு உலகப் பொது நூலாக யுனெஸ்கோ அங்கீகரிக்கும் என நம்புவோம்.

யாதானும், நாடாமால், ஊராமால்... என்றும் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்... என்றும் பிரகடனம் செய்யும் திருக்குறளை உலகப் பாரம்பரிய சின்னமாக மட்டுமின்றி, உலக நாடாளுமன்றத்தின் அறநெறி சட்ட நூலாக ஐ.நா. அறிவித்தால்தான், வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்ததாகத் தமிழர்கள் பெருமை பெற முடியும்.

ஷேக்ஸ்பியர் பிறந்த ஏப்ரல் 23—ஆம் தேதியை, உலகப் புத்தக நாளாகக் கொண்டாடுவது போன்று, திருவள்ளுவர் நாள் உலக அறநூல் நாளாகக் கொண்டாடப்படவேண்டும்.

இதற்கு முதல்கட்டமாக திருக்குறளுக்கு தேசிய நூல் என்றோ, வேறு வகையிலோ தனி அங்கீகாரத்தை மத்திய அரசு தர வேண்டும். இந்தியாவின் பன்முகப் பண்பாட்டின் அடையாளமாகத் திருக்குறள் விளங்குகிறது. இதில், இந்து மதத்தின் பயன் கருதாப் பணி, பௌத்தத்தின் தர்ம நெறி, ஜைனத்தின் அஹிம்சை, கிறிஸ்துவத்தின் அன்பு நெறி, இஸ்லாமின் சகோதரத்துவம், சீக்கிய நெறியின் சமத்துவம் ஆகிய அனைத்தும் ஒருசேரப் போற்றப்படுவதால் இந்தியாவின் பொது அறநூலாக இதை மத்திய அரசு அறிவிப்பது பொருத்தமாக இருக்கும்.

இதைத் தமிழர்களின் பொதுமையான வாழ்வியல் நூலாக தமிழக அரசும் ஏற்க வேண்டும். தமிழர்கள் அனைவரும், தங்கள் வாழ்வின் வழிகாட்டியாக, ஒளிவிளக்காக ஏற்று, அவரவர் நிலைக்கேற்ப வள்ளுவ நெறியில் வாழ்வாங்கு வாழ வேண்டும்.

அலமாரி

# புத்தக விமர்சனம்

## கண்ணுக்குத் தெரியாமல் களவு போகும் நீர்

**நூல் ஆசிரியர்: நக்கீரன்**

**வாழ்வியல்**

**விலை : ரூ. 15.00**

**பக்கங்கள் : 28**

**வெளியீடு:**

**இயல்வாகை பதிப்பகம்,**

**எண்:25, மாந்தோப்பு, ப.உ.ச. நகர், போளூர் சாலை, திருவண்ணாமலை – 1.**




*ஒரு நவீன உணவகத்தில் ஒரு குவளை பீரும், ஒரு பர்கரும் சுவைக்கும் இளைஞன் மறை நீராக ஒரு குவளை பீரில் 75 லிட்டரும், ஒரு பர்கரில் 2500 லிட்டர் நீருமாக சேர்த்து மொத்தம் 2575 லிட்டர் நீரை காலிசெய்கிறான். போன தலைமுறை வரை பசியாற ஒரு கோப்பை தேநீரும் ஒரு வடையும் சாப்பிட்டவர்கள்தான் இவர்கள்.*

*நீரே தேவைப்படாத பனையிலிருந்து வெல்லத்தை எடுத்து தேநீரோ, காப்பியோ தயாரித்து குடித்து வந்த சமூகம் முழுக்க முழுக்க வெள்ளை சீனிக்கு மாற்றப்பட்டுவிட்ட பிறகு ஒரு குடும்பம் வாங்கும் ஒவ்வொரு கிலோ சீனியிலும் 1653 லிட்டர் நீர் மறைந்துள்ளது. நவீன வாழ்க்கைக்கு மாறிய பிறகு தன் குழந்தைக்கு வாங்கி கொடுக்கும் சாக்லேட்டுகள் ஒரு கிலோவுக்கு 26,450 லிட்டர் நீரை உட்கொண்ட பிறகுதான் வெளிவருகிறது போன்ற நுண்ணியத் தகவல்களுடன் வெளிவந்திருக்கும் நீர் மேலானமையைப் பற்றிய அரிய நூல் இந்நூல்!*

# அறிவோம் தமிழர்

## வேறு பெயர் வைத்துக் கொண்டால் சாதி இழிவு நீங்கி விடுமா?

சகோதரர்களே!

உங்கள் வரவேற்பு பத்திரத்தை நான் ஒப்புக்கொள்ள முடியாதானாலும், என்னைப் பற்றிய புகழுரைகள் போக மீதி உள்ள வாசகங்கள் எனது கொள்கையை தாங்கள் மனப்பூர்வமாய் ஒப்புக் கொண்டு அதன்படி நடப்பதோடு அதை மற்று அனுபவத்திலும் கொண்டு வர தங்களுடைய சம்மதத்தை தெரிவிக்கின்றன. ஆதலால் அதைப் பொருத்தவரை வந்தனத்துடன் ஏற்றுக் கொள்ளுகிறேன்.

நான் ஏதோ பிரமாதமான காரியங்கள் செய்துவிட்டதாகவும், பெரும் தியாகம் செய்திருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறீர்கள், அவ்விதமாகச் சொல்லுவதற்கு ஒன்றும் இல்லை. ஜெயில் வாசத்தைப் பற்றி சொல்லியிருப்பது மிகவும் வேடிக்கையானது. ஜெயிலுக்குப் போவதனால் பெரிய கஷ்ட நஷ்டம் ஒன்றுமில்லை. சந்தோஷமாகவும், சாந்தியுடனும் ஓய்வெடுத்துக் கொள்ள மனிதனுக்கு ஜெயிலை விட வேறு இடம் இல்லை. ஜெயிலில் இருக்கிற காலம் வரை வெளியில் தொண்டு செய்வதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடுகிறதே என்கிற ஒரு கவலை தவிர மற்றபடி வேறு ஒன்றும் இல்லை. ஆனால் வெளியில் வந்தால் முன்னிலும் அதிகமாக வேலை செய்யக்கூடிய ஆற்றலும் எழுச்சியும் உண்டாய்விடுகிறது. ஆதலால் அது ஒரு குறிப்பிடத்தக்க விஷயமே அல்ல.

உலகத்தில் உள்ள மக்களும் மற்றும் ஜீவன்களும் அதனதன் உயிர் உள்ளவரை யாதாவது ஒரு தொழில் செய்து கொண்டுதான் இருக்க வேண்டியது ஜீவ சுபாபம். தொழிலில்லாமல் இருக்கவே முடியாது. சும்மா இருப்பது என்பதும் ஒரு தொழிலேயாகும், அன்றியும் அது மற்ற எல்லாத் தொழிலையும் விட மிகவும் கஷ்டமானது. கிரமமாய்ச் சொல்வதானால் செத்தால் தான் சும்மா இருக்க முடியும். ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு தொழிலில் ஈடுபட்டு இருப்பது போல் அதாவது ஒருவன் வியாபாரம், ஒருவன் உத்தியோகம், ஒருவன் சாமியார், ஒருவன் பத்திரிகை ஆசிரியன், ஒருவன் தேசத் தலைவன், ஒருவன் பூசாரி, ஒருவன் தாசி வியாபாரம், ஒருவன் கள்ளு வியாபாரி என்பதாக பலர் பல தொழில் செய்வதுபோல் நானும் ஏதேதோ தொழில் செய்து இப்போது இந்த தொழில் செய்கிறேன். இவைகள் செயற்கை வாசனை, தற்செயல் முதலிய பல காரணங்களால் இது ஏற்பட்டனவே தவிர இதற்குப் பிரமாதமான யோக்கியதை ஒன்றும் கொடுக்க வேண்டியது இல்லை என்பதே எனது அபிப்பிராயம்.

மனித வாழ்வில் ஒவ்வொருவனுக்கும் இம்மாதிரி ஏதாவது ஒரு தொழில் இருந்துதான் தீரும். எந்த தொழிலை யார் செய்தாலும் அவனவன் ஜீவ சுபாவத்தைக் காட்டுவதிலொன்றாகுமே ஒழிய அதற்கு யோக்கியதை கொடுக்க வேண்டியதில்லை. இவைகள் உலக வாழ்க்கையில் மாறிமாறி வரவும் கூடும். இந்நிலையில் ஒரு மாற்றம் மக்களுக்கு அனுகூலம் இருப்பது போலவும், ஒரு சமயம் அவருக்கு மாத்திரம் சுயநலம் இருப்பதுபோலவும், மற்றொரு சமயம் ஒன்றுக்கும் உதவாமல் மக்களையும் கெடுத்து தானும் கெடுவதாகவும் காணப்படும். இவ்வித ஜீவ சுபாவமான தோற்றங்களைக் காணுவதினாலேயே ஆச்சரியப்படத்தக்கதும், புகழத்தக்கதும் ஒன்றுமில்லை. தவிர எனது தொண்டாகிய சுயமரியாதை இயக்கத்திற்கு பொது மக்களின் எதிர்ப்பு இருக்குமோ என எண்ணிப் பயந்துகொண்டு வந்த உங்கள் ஊரில் நீங்கள் ஆதரித்திருப்பதானது எனக்கு மேலும் மேலும் மகிழ்ச்சியையும் ஊக்கத்தையும் அடக்க முடியாத மன உறுதியையும் கொடுக்கிறது.

சுயமரியாதை தத்துவமும், இயக்கமும் நமக்கு புதிதல்ல, அது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அது மனிதன் எந்தக் காலத்தில் ஏற்பட்டானோ, எந்தக்காலத்தில் மனிதத் தன்மையும், பகுத்தறிவு உணர்வும் அவனுக்கு ஏற்பட்டதோ, அன்று முதலே சுயமரியாதை உணர்ச்சி மக்களுக்கு ஏற்பட்டுத்தான் வருகிறது. ஆனால் அதன் எதிரிகள் அதாவது ஒரு மனிதனுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்படுவதால் மற்றொரு மனிதனுடைய சுய வாழ்க்கைக்கும், உயர்வுக்கும் தடை ஏற்படுமானால், அந்த தடைக்கு ஆளாகிறவன் மற்றவனின் சுயமரியாதைக்கு விரோதமாயிருந்து அதனை ஒழிக்க வேண்டியது

# பெருமை

அவனது கடமையாகிற காலத்தில் கொஞ்சம் கொஞ்சம் மறைபடுகிறதுண்டு. ஆனால் அது ஒரே அடியாய் ஒரு நாளும் மறைந்து போகக்கூடியதல்ல.


ஆதிதிராவிடர்

தவிர, ஆதிதிராவிடர்கள் என்கிற பெயரால் எனக்கு ஒரு வரவேற்பு பத்திரம் அளித்துக் கொடுத்திருப்பதற்கு இரண்டொரு வார்த்தை சொல்லுகிறேன். நீங்கள் ஆதி திராவிடர்கள் என்று ஒரு பெயர் பெற்று இருப்பது உங்கள் சமூகத்தில் ஏற்படுத்தப்பட்ட இழிவை மாற்றிக் கொள்வதற்கு அனுகூலமானதென்று நினைத்திருக்கிறீர்கள். உங்களை கொஞ்ச காலத்திற்கு முன்பு பறையர்கள், சக்கிலியர்கள், பள்ளர்கள் என்று சொல்லிக்கொண்டிருந்த காலத்தில் அவ்வார்த்தைகளுக்கு என்ன பொருளும் தத்துவமும் இருந்ததோ அதே பொருளும் தத்துவமும் தான் "ஆதிதிராவிடர்" என்ற வார்த்தையிலும் இருக்கிறதேயல்லாமல் எந்த விதத்திலாவது அது மறைவுபட்டதாக காணவில்லை.

"பெருமாள்" என்பதாக பெயரையுடைய ஒரு 'பறையன்' ஒரு பார்ப்பனனிடம் அடிமையாய் இருந்த காலத்தில் அந்த பார்ப்பனன் அந்த பறையனை பெருமாள் என்று கூப்பிடுவது தனது பார்ப்பனீய கௌரவத்திற்கு குறைவாய் இருப்பதாக எண்ணி போய் வேறு பெயர் மாற்றிக் கொண்டு வரும்படி, கொஞ்சம் பொருள் கொடுத்து கேட்டுக்கொண்டதாகவும், அந்த பறையன் பெருமாள் என்ற பெயரை மாற்றி, பெரிய பெருமாள் என்று வைத்துக்கொண்டு வந்ததாகவும், அதன் பேரில் இந்த பார்ப்பனன் பழைய பெயரைவிட புதுப்பெயர் ரொம்பவும் மோசமாக போய்விட்டதாக கருதினதாகவும் ஒரு கதை சொல்வதுண்டு.

## பெரியார்

அதுபோலவே பறையர் என்கிற பெயர் மாறி ஆதிதிராவிடர் என்கிற பெயர் வந்ததினால் "பறையருக்குண்டான" இழிவு தத்துவம் ஒரு சிறிதும் மாறாமல், ஆதிதிராவிடன் என்றால் பறையன் இழிந்த மகன் என்ற அர்த்தத்தைக்



கொடுப்பதோடு, தேசத்தின் யோக்கியதையையும் இழிவுபடுத்தத்தக்கதான பொருளும் அதில் அடங்கி இருக்கிறது. இதை விட பழய பெயரே மேலானதென்பது எனது அபிப்பிராயம்.

சூழ்ச்சிகளிலிருந்து தப்பவோ, முன்னேற்றமடையவோ, பெயர் மூலியமாய் அடையக் கூடி நன்மையை அடையவோ முடியாது.




சமூகத்திற்கோ, சங்கத்திற்கோ ஒரு பெயர் வைக்க வேண்டுமானால் எந்த குற்றத்தை நீக்குவதற்காகவோ, அல்லது எவ்வித இழிவை விலக்குவதற்காகவோ எம்மாதிரி முன்னேற்றத்தை அடைய வேண்டுமென்பதற்காகவோ நாம் கருதி இருக்கிறோமோ அந்தக் கருத்தை கொண்டதான பெயரை ஒரு பிரசாரத்திற்கோ, இயக்கத்திற்கோ இடுவதுதான் அறிவுடைமையாகும். உதாரணமாக நமது நாட்டில் பார்ப்பனர் தவிர ஏனைய மக்கள் பார்ப்பனர்களால் இழிவுபடுத்தப்பட்டும், கொடுமைப்படுத்தப்பட்டும் இருப்பதை உணர்ந்து அவ்விழிவிலும் கொடுமையிலுமிருந்து மீள்வதற்காக ஏற்படுத்திக் கொண்டிருக்கும் சங்கத்திற்கும் வைத்துக் கொண்டிருக்கும் பெயர்களை பார்த்தால் உங்களுக்கு விளங்காமல் போகாது.

பார்ப்பனர்களுடைய கொடுமையிலிருந்தே மீளுவதற்காக ஏற்படுத்திக்கொண்ட கூட்டமாதலால் “பார்ப்பனரல்லாதார்” என்கிற பெயரோடும் அக்கொடுமையால் தாழ்த்தப்பட்டதிலிருந்து விலகி பார்ப்பனரல்லாதார் உரிமையை அடைவதற்காக ஏற்படுத்திய சங்கமாதலால் அதே கருத்து தொனிக்க தெ.இ.ந.உ. சங்கமென்பதாகவும் பெயர் கொடுக்கப்பட்டிருப்பதை நீங்கள் உணரலாம். மற்றபடி வேறு எந்த பெயர் வைத்தாலும் இழிவு மறையவோ, இழிவுபடுத்தினவர்களுடைய

எத்தனையோ சமூகத்தார் தங்களை மற்றவர்கள் இழிவு படுத்துவதிலிருந்து தப்பித்துக்கொள்ளலாமென்று கருதி எவ்வளவோ பெயர்களை மாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். இதனால் அவர்கள் எந்த இழிவை மறைக்க நினைத்தார்களோ அது ஒரு சிறிதும் மறைபடாமலும் அந்தப் பெயர் ஏற்படுத்துவதற்கு முன் எப்படி இருந்தார்களோ அது போலவே தான் இருந்து வருகின்றார்களே தவிர புது மாதிரியான மாறுதல் ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை.

உதாரணமாக ஆசாரிமார்கள் தேவாங்க சமூகத்தார்கள் முதலியவர்கள் தங்களுக்கு விஸ்வ பிராமணர்கள், தேவாங்க பிராமணர்கள் என்பதாக பெயர் வைத்துக்கொண்டதாலும் நாயக்கர்மார்கள், படையாச்சிமார்கள், நாடார்மார்கள், தங்களுக்கு பல்ஜிய க்ஷத்திரியர்கள், வன்னிய க்ஷத்திரியர்கள், அக்கினி குல க்ஷத்திரியர்கள் என்பதாக பெயர் வைத்துக் கொண்டாலும் நாட்டு கோட்டை நகரத்து செட்டியார், கோமுட்டி செட்டியார், வாணிகச் செட்டியார், வேளாளர் முதலியோர் தங்களுக்கு முறையே தனவைசியர், நகரத்து வைசியர், ஆரிய வைசியர், வாணிப வைசியர், பூவைசியர் என்பதாக பெயர் வைத்துக் கொண்டாலும் புராணங்கள் மூலியமாக இதற்கு ஆதாரம் கண்டு பிடித்தாலும் மற்ற எத்தனையோ வகுப்பார் மற்ற எத்தனையோ

பெயர்களை வைத்துக் கொண்டு இருந்தாலும் இந்த பெயர்கள் அல்லாத "சூத்திரர்கள்" என்கிற பெயருக்கு உண்டான பொருளும், தத்துவமும் அனுபவ உண்மையும் கிரகிக்கப்படுகிறதேயல்லாமல் ஒரு சிறிதாவது மாற்றம் ஏற்படாததோடு எந்த கொள்கையை உத்தேசித்து இந்த பெயரை வைத்துக்கொள்ளுகிறோமோ, அந்த கொள்கைகளின் மூலியமாகவே நாம் நம்மைவிட மற்றொரு கூட்டத்தார் உயர்வு என்பதையும் சரியான பெயர் என்பதாகத் தோன்றவில்லை. வேண்டுமானால் "ஒடுக்கினவர்கள் அல்லாதார்" "கொடுமைக்காரர்களல்லாதார்," "அயோக்கியர்கள் அல்லாதார்" என்று பெயர் வைத்துக்கொண்டால் அவர்களையும் உங்கள் கூட்டத்தில் சேர்க்காமல் சீக்கிரத்தில் இக்கொடுமை நீங்கவும் மார்க்கம் ஏற்படும். அப்படி ஏற்பட்டதுடன் இப்பெயர் மறைந்து விடுவதற்கும் அநுகூலம் ஏற்படும். அப்படிக்கில்லாமல் க்ஷத்திரியர், வைசியர்,





மற்றொரு கூட்டத்தாரை விட நாம் தாழ்ந்தவர்கள் என்பதையும் ஒப்புக்கொண்டதோடு அதை நிலை நிறுத்தவும் பாடுபட்டவர்களாகிறோம்.

ஆகவே, இம்மாதிரி பெயர்களை வைத்துக்கொள்வது "சப்தம்" மாத்திரத்தில் உயர்வாக தோன்றினாலும் தத்துவத்தின் மூலியமாக அதில் தாழ்மையே இருக்கிறது. ஆதிதிராவிடர் என்று சொல்லிக் கொள்பவர்களாகிய நீங்கள் உங்களை யார் தாழ்ந்தவர்கள் என்று சொல்லுகிறார்களோ, யார் கொடுமைப்படுத்துகிறார்களோ, யார் அதற்கு ஆதாரமாய் இருக்கிறார்களோ அவர்கள் பெயரை வைத்து "அவர்கள் அல்லாதார்" என்பதாக வைத்துக் கொண்டால் அந்தப் பெயரும் கொடுமையும் ஞாபகத்தில் இருப்பதோடு அதிலிருந்து விலகுவதற்கு உண்டான அறிவும் சக்தியும் அதிலிருந்து ஏற்படும். இந்த கூட்டத்திலேயே ஒரு கனவான் உங்களை 'ஒடுக்கப்பட்டார்' என்றழைக் கலாம் என்பதாக சொல்லுகிறார். எனக்கு அது கூட அவ்வளவு அருந்ததியர், ஆதிதிராவிடர், இந்திரகுலத்தார், நீலகண்டனார், பார்க்கவனார் என்று அம்மாதிரி பெயர் வைத்துக்கொள்வதால் நமக்கு நாமே சொல்லிக்கொண்டு கர்ப்பகோடி காலம், இந்த இழிவிலேயே இருக்க வேண்டியதுதானே ஒழிய நாம் கோரும் பலன் ஒருசிறிதும் அதனால் உண்டாகாது.

சிலர், இந்த கொள்கையோடு பேர் வைப்பதின் மூலம் பெருத்த ஆஸீக்ஷபனை இருப்பதாக காட்டிக் கொள்ளுகிறார்கள். அது ஒரு சிறிதும் உண்மையானதென்றாவது மனப் பூர்த்தியாய் சொல்லுகிறார்கள் என்றாவது ஒரு சிறிதும் எண்ணுவதற்கு இடம் இருப்பதாக எனக்கு தோன்றவில்லை. அதாவது "பார்ப்பனரல்லாதார்" என்று சொல்வதால் பார்ப்பனர் என்று ஒரு ஜாதி இருப்பதாக ஒப்புக்கொள்வதாகவும், அந்தப் பார்ப்பனர்கள் உயர்ந்தவர்கள்

என்கிற தத்துவத்தை ஒப்புக்கொள்வதாகவும் ஜாதி வித்தியாசம் ஒழிய வேண்டும் என்கிற




எண்ணத்தோடு ஏற்படுத்தின இயக்கம் அதை நிலை நிறுத்துவதற்கு வேலை செய்வதாக ஆகும் என்றும் சொல்லுகிறார்கள். இந்த வார்த்தைகளில் ஏதாவது கடுகளவு சத்து இருக்கிறதா? பார்ப்பனர்கள் என்ற ஒரு கூட்டத்தாரை நாம் தினம் கண்ணில் பார்த்துக் கொண்டு வருகிறோம். அவ்வொரு கூட்டத்தார் இந்த நாட்டில் இருந்து கொண்டு இருக்கிறார்கள். அதை யாரும் திரை போட்டு மறைத்து விட முடியாது. ஆனதினால் அப்படி ஒருவர் இருக்கிறார்கள் என்பதை ஒப்புக் கொள்வதாகுமென்பது அர்த்தமேயில்லை. அடுத்தாற்போல் இப்படிச் சொல்வதன் மூலம் பார்ப்பனர்கள் உயர்ந்தவர்கள் என்பதை ஒப்புக் கொள்வதாகின்றது என்பது நமக்கு அதிசயமாக இருக்கிறது.

பார்ப்பனர் என்று சொன்னால் பார்ப்பனன் உயர்ந்தவன் என்று ஒப்புக்கொள்வது ஆகிறது என்று எந்த அகராதியில் எழுதியிருக்கிறது என்பது நமக்கு விளங்கவில்லை. அல்லது பார்ப்பனன் என்று சொல்லும்போது அவன் உயர்ந்தவன் என்று எண்ணிக் கொண்டு சொல்லுகிறோமா? என்று பார்த்தால் அதுவும் இல்லை. ‘ஆதிதிராவிடர்’ என்று சொல்லும்போது அவர்கள் மிகத் தாழ்ந்தவர்கள் என்ற உணர்ச்சி தோன்றி விடுகிறது. பார்ப்பனர்கள் என்று சொல்லும்போது நமக்கு பலவித கொடுமைகள் செய்தவர்கள் என்றுதான் தோன்றுகிறதேயல்லாமல் பலரும் அம்மாதிரியே நினைக்கும்படியாக கொடுமைகளை ஞாபகபடுத்தக் கூடியதாக இருக்கிறதேயல்லாமல் வேறு ஏதாவது உயர்வு அதில் இருக்கிறதா? ஏற்படுகிறதா?

ஆகவே பார்ப்பனன் உயர்ந்தவன் என்பதை நிலைநிறுத்துவதாக அந்த பதம் இருக்கிறது என்று சொல்லுவது தர்மம் ஆகுமா? அதில் ஏதாவது, யோக்கிய பொறுப்பிருக்கிறதா? தவிர இந்த பெயர் இருப்பதினாலேயே எந்த விதத்தில் வித்தியாசம் நிலைத்து விடும் என்பதும் நமக்கு விளங்கவில்லை. நமது நாட்டில் உள்ள ஆயிரக்கணக்கான வகுப்பு வித்தியாசங்களை ஒழிப்பதற்காகவே அவ்வித்தியாசங்களுக்கு மூலாதாரமானவர்களை அந்த வித்தியாசத்தை விட்டு விட்டு நம்மோடு வந்து சேரும்படி அழைக்கும் தத்துவத்தோடு கூட அந்த பெயர் வைக்கப்பட்டிருக்கிறதே அல்லாமல் அதை நிலைநிறுத்தும் தத்துவம் அதனிடத்திலில்லை. அதற்கு உதாரணமாகவே பல பார்ப்பனர்கள் இந்த இயக்கத்தில் வந்து சேரப் பிரியப்படுவதும், நாம் இது சமயம் பலகாரணங்களால் அவர்களிடம் நம்பிக்கையில்லாமலும், சேர்ந்து கொள்வதற்கு இல்லாமலும் இருப்பதால் வேண்டாம் என்று சொல்வதாகவும் இருக்கிறதேயல்லாமல் வேறல்ல. நிற்க,

ஆதிதிராவிடர்களுக்கு தனி ஸ்தாபனம்

ஆதி திராவிடர்களுக்கு என்று தனியாக கிணறு, கோவில், பள்ளிக் கூடம் முதலியவைகள் ஏற்படுத்துவது புண்ணியம் என்று சிலர் கருதுகிறார்கள். நான் அதை ஒப்புக் கொள்ள முடியாததோடு வெறுக்க வேண்டியவனாகவும் இருக்கிறேன். சென்ற வருடம் இதே ஊருக்கு வந்திருந்த சமயம் காந்தி கிணறு என்ற ஒரு கிணற்றை ஆதிதிராவிடர்களுக்கு மாத்திரம் என்று வெட்டி அதைத் திறந்து வைக்கும்படி கேட்டு கொண்டபோது நான் இதே அபிப்பிராயத்தை தான் தெரிவித்தேன். காரணம் என்னவென்றால் அவர்கள் படிக்கக் கூடாது என்பதற்காகவாவது அவர்களுக்கு தனி சௌகரியம் ஏற்படுத்தி கொடுக்கக்கூடாது என்பதற்காகவாவது அல்லவே அல்ல.

இம்மாதிரி ஒரு வகுப்பாருக்கு தனி சௌகரியம் ஏற்படுத்தி கொடுத்து நம்மோடு கலந்து வாழும்படி செய்யாததின் பயனாய் நிரந்தரமாய் இவர்கள் இழிந்தவர்கள் என்பதை நிலைநிறுத்தி அவர்களை மீளவிடாமல் செய்தவர்களாகின்றோம். அதுபோலவே பார்ப்பனர்களுக்கும் சிறுதனி உரிமைகள் செய்துகொடுத்து நம்மோடு கலர விட்டு விடாமல் செய்து வருவதின் பயனாகவே அவர்கள் உயர்ந்தவர்கள் என்பதையும் நாம் தாழ்ந்தவர்கள் என்பதையும் நிலை நிறுத்தினவர்களாகின்றோம்.




இன்னும் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு கோடிக்கணக்கான தொகைகளைச் செலவு செய்து தர்மம், புண்ணியம், மோட்சம் என்பதின் பெயரால் பார்ப்பனர்களுக்கு தனிப்பள்ளிக்கூடங்களும் சத்திரங்களிலும் கோவில்களிலும் ஏனைய இடங்களிலும் தனி உரிமைகளும் "பறையர்களுக்கு" தனி கிணறும், தனி பள்ளிக்கூடம் முதலியவைகளும் செய்து கொண்டு வருவதானாலும் ஒருக்காலும் நமது மக்கள் சுயமரியாதை அடைந்து நாடு விடுதலை அடையும் என்று எண்ணுவதற்கு கொஞ்சம் கூட இடமேயில்லை.

தாழ்த்தப்பட்ட மக்களை முன்னுக்கு கொண்டு வருவதற்கும் சமத்துவம் அடையச் செய்வதற்கும் பாடுபடும் பெரியோர்கள் அந்த சமூகத்திற்கென்று தனியாக கிணறும், கோவிலும் பள்ளிக்கூடமும், வெட்டவும், கட்டவும் ஏற்படுத்தவும் நினைப்பதானது அச்சமூகத்தாரை நிரந்தரமாய் இழிவுபடுத்தி வைப்பதற்கு ஆதாரங்களையும், அவசியங்களையும், கற்சிலைகளையும், சிலாசாசனங்களையும் உண்டாக்கி வைத்தவர்களே ஆவார் கள் (இப்படிச் சொல்லிக்கொண்டு வரும்போது திரு. ஏ.வி. தியாகராஜ் அவர் கள் ஒன்றுமில்லாமல் இருப்பதற்கு இது மேலல்லவா? என்று கேட்டார்கள்) ஒன்றுமில்லாமல் இருப்பதை விட இது எந்தவிதத்திலும் மேலாகாதென்றும், கிணறும், பள்ளிக்கூடமும், கோயிலும் இல்லாமல் போனால் குடிக்கவும், படிக்கவும், கும்பிடவும் இல்லாமல் போகலாமே தவிர தாழ்ந்தவன் என்பதை நிரந்தரமாய் நிலை நிறுத்தாது என்பதை கவனியுங்கள். நமது நாட்டில் அதைபோல அநேக பெரியார்கள் எவ்வளவோ காலமாக இதைவிட மிகப் பெரும் பெரும் தருமங்களை அக்கூட்டத்தாருக்கு செய்து வந்திருந்தும் இதுவரையில் ஒரு சிறிதாவது அவர்கள் நிலைமை முன்னேறியிருப்பதாக சொல்வதற்கில்லை. உதாரணமாக தஞ்சாவூர் ராஜாவின் தர்மசாசனத்தை நான் பார்க்க நேர்ந்த பொழுது இந்த பறையர்களுக்கு என்பதாக பள்ளிக்கூடம், சத்திரம் மற்றும் பல தர்மங்கள் முதலியவைகளுக்கு பெரும்பாகமான பணத்தை ஒதுக்கி வைத்ததோடு, செய்து வந்ததாகவும் தெரிகிறது. ஆனால் அந்த ஜில்லாவில்தான் இந்த பறையர்கள் எல்லாரைவிட அதிகமாக அடிமைகளாக விற்கவும், வாங்கவும் படுகிறார்கள். எனவே அந்த வகுப்பாருக்கு யாராவது நன்மை செய்ய வேண்டுமானால் மலையளவு செய்யக்கூடிய தன்மையானது கடுகளவு செய்யக் கூடியதாக ஏற்பட்டாலும் அவர்களும் நாமும் கலந்து பழகுவதற்கு தகுந்தபடி ஏற்படுத்துவதுதான் அவர்களை முன்னேற்றத்திற்கு கொண்டு வருவதற்கு தக்க விதமாக ஏற்படுத்தியதாகுமே தவிர அவர்களுக்கு வேறு, நமக்கு வேறு என்பதாகவும் அவர்களும் நாமும் சேர்ந்து புழங்குவதற்கு சந்தர்ப்பம் இல்லாததாகவும் செய்வதானது, செய்தவர்க்கு தர்மம் செய்தார் என்று சொல்லிக்கொள்ள உதவலாமே அல்லாமல் ஒருக்காலும் அந்த கொடுமை செய்யப்பட்ட சமூகத்திற்கு நன்மை செய்வதாக ஆகாது. அதோடு தீமை செய்ததாகவும் ஆகலாம். நமது பெரியோர்கள் பார்ப்பனர்களுக்கு வேறு நமக்கு வேறு என்று பல காரியங்கள் செய்து வந்ததின் பயனாகவே அவைகள் பார்ப்பனர்கள் உயர்ந்தவர்கள் அவர்களை விட நாம் இழிந்தவர்கள் என்பதற்கு சிலாசாசன ஆதாரமாக இருந்துவருகிறது.

*குறிப்பு : 20.7.27—ல் சிறாவயல் காந்தி ஆசிரமத்தாரும், ஆதிதிராவிடர் சமூகத்தார்களும் அளித்த வரவேற்பில் ஆற்றிய சொற்பொழிவு.*

*குடி அரசு — சொற்பொழிவு — 31.07.1927*



# வாழ நினைத்தால்...

சாந்தி நாதன்

காலை மணி எட்டு இருக்கும் உடலை உறுத்தாத இளம் வெய்யிலையும், கூந்தலை அலைக்கழிக்கும் தென்றல் காற்றையும் ஒருசேர ரசித்துக்கொண்டு மிதமானவேகத்தில் மொப்பட்டில் வயக்காட்டை நோக்கிச் சென்றுக் கொண்டிருந்தாள் சுந்தரி.

பள்ளி செல்லும் பிஞ்சுகள் பூக்கூட்டம்போல் எதிர்பட புன்னகையோடு வண்டியை நிறுத்தியவளை சூழ்ந்துகொண்டு "வணக்கம் டீச்சர்" என்று ஒருசேர கூவ பதில் வணக்கத்தை கூறினாள். "வீட்டுப்பாடமெல்லாம் முடிச்சீங்களா? பள்ளிக்கூடத்தோட்டமெல்லாம் எப்படியிருக்கு?"

"தோட்டத்துல இப்ப நிறைய பூப்பூக்குது. அதை அவங்கவங்க வகுப்புல சாமிபடத்தில வைக்கிறோம். பின்னால இருக்கற தோட்டத்தில குட்டி குட்டியா கத்திரிக்கா வெண்டைக்காயெல்லாம் வருது."உற்சாக குரலில் ஒரு சிறுவன் கூற, "அதோட நிறைய பறவைங்க வருது டீச்சர். கலர்கலரா அழகான பட்டாம்பூச்சிகளும் வந்துட்டேயிருக்கு."கண்கள் விரிய ஒரு சிறமி அபிநயத்தோடு கூறினாள்.

"அப்படியா? இன்னிக்கு சாயங்காலம் நான் தோட்டம் பார்க்க வருவேனில்ல அப்ப எனக்கு காட்டுங்க" என்றவள்ஞ் "அதெல்லாம் சரி தோட்டவேலை மும்மரத்துல பள்ளிப்பாடத்தை மறந்துடாதீங்க. பரிட்சை நெருங்குதில்லே" .கையில் மதிய உணவு தூக்குச்சட்டியுடன் குழந்தைகளைப் பின்தொடர்ந்து வந்த பெண்களில் ஒருத்தி "அதெல்லாம் ஒரு பிரச்சினையும் இல்ல சுந்தரிம்மா. வீட்டுப்பாடமெல்லாம் முடிக்காம விளையாடக்கூடப் போறதில்லை கருத்தாப் படிக்கறாங்க"முகமெல்லாம் புன்னகை விரியக்கூறினாள்.

தொடர்ந்த மற்றொருத்தி, "ராத்திரி வேலை முடிச்சபிறகு எனக்கும் எம் புருசனுக்கும் எம் பையன் எழுதப்படிக்கச் சொல்லிக் குடுக்கறாம்மா" என்றாள் பெருமிதமாக.

"விடிஞ்சு நாங்க கண்முழிக்கறதுக்கு முன்னமே இதுங்க எல்லாம் எழுந்து முகம் கழுவி அவுங்கஅவுங்க வீட்டுப்பக்கமிருக்கிற மைதானத்துல கூடி மூர்த்தித்தம்பி சொல்லிக் கொடுக்கற உடற்பயிற்சி செய்யற அழகைப் பாக்கற போது எங்க கண்ணே பட்டுடும் போலிருக்கு", உணர்வு பொங்க பேசுபவளை இடைமறித்து, "கேக்கவே ரொம்ப சந்தோசமா இருக்கு குழந்தைங்க மனசு பச்சைமண்ணு மாதிரி, நாம சொல்லறதெல்லாம் உடனே நல்ல பதிஞ்சுடுது. மொத்தத்துல இந்த ஊர் செஞ்ச புண்ணியம் நீயும் மூர்த்திதம்பியும் இங்க குடி வந்தது. சோம்பிக் கிடந்த ஊரை சோலையா மாத்திக்கிட்டு வர அழகை வார்த்தையால சொல்ல முடியுமா? இதுக்கெல்லாம் அச்சாரமா நின்னு உங்களை வழி நடத்துற புண்ணியவதி பெரியம்மாவை நிதம் எங்க குலதெய்வமா நினைச்சுக் கும்பிடறோம்"

தொடர்ந்து ஓரிரு விநாடிகள் நிலவிய மௌனத்தை கலைக்கும் விதமாக சுந்தரி, “இதுக்கெல்லாம் பாதை அமைச்சவங்க பெரியம்மாதான். அவங்க பரந்த மனசும் தயாள குணமும் ரொம்ப உசந்தது. தாயைப்போல மகனும் குணங்கொண்டவரா அமைஞ்சதும், கூடவே எந்த வேலையைக் கையில எடுத்தாலும் சிறப்பா முடிக்கற சாமர்த்தியசாலியா மூர்த்தி இருக்கறதும் நமக்கு கூடுதல் பலமில்லையா? அவங்க நிழல்ல நிக்கற அநாதையான என் நிலமை தெரிஞ்சும் கேவலமா பாக்காம உங்கள்ல ஒருத்தியா ஏத்துக்கிட்டீங்களே அது எல்லாத்தையும் விட பெரிய விசயமில்லையா? சரி பள்ளிக்கூட மணி அடிச்சுடப்போவுது பசங்களை விட்டுட்டு நீங்களும் சங்கத்துக்கு போகணுமில்லே கிளம்புங்க” விடை பெறும்விதமாக வண்டியை கிளப்பியவள், “சனிக்கிழமை மதியம் பசங்களை எல்லாம் புத்தகப்பையோட நம்ம வீட்டுக்கு அனுப்பிவைங்க மதியச் சாப்பாடு அவங்களுக்கு அங்கதான். புரியாதபாடமெல்லாம் சொல்லித்தரணும் பரிட்சையில சிறப்பா எழுதணுமில்லையா”? வண்டி வேகமெடுத்துச் செல்ல மற்றவர்கள் தங்கள் வழியில் விரைந்தனர்.



வண்டியை வரப்போரம் மரநிழலில் நிறுத்தியவள் மனத்தை நீரில் குளித்த மண்ணின் மணமும் சூல்பிடித்த நெற்கதிர்களிலிருந்து எழுந்த பால்மணமும் பரவசப்படுத்தியது. பம்புசெட்டிலிருந்து பாயும் நீரை வரப்புகளுக்கு சரியானமுறையில் ஒழுங்கு படுத்திக் கொண்டே அருகில் யாருமில்லாத சுதந்திர உணர்வில் குரலெடுத்து ஏதோ திரைப்பாடலைப் பாடிக்கொண்டிருந்த மருதை சுந்தரியைப் பார்த்து சட்டென்று பாடுவதை நிறுத்த."ஏன் என்னைப் பார்த்தவுடன் நிறுத்திட்டீங்க? நல்லா பாடறீங்க தொடர்ந்து பாடுங்கண்ணே”

“அட போம்மா கிண்டல் பண்ணாதீங்க” வெட்கத்தோடு நெளியும் மருதை “இல்லீங்கண்ணே! உங்க குரல் நல்லாயிருக்கு. இந்த வருடப் பொங்கல் விழாவில பசங்க கலைநிகழ்ச்சியைத் தொடர்ந்து உங்களையும் மேடை ஏத்திடலாம் சரியா”?“அதுக்குள்ளாற நானும் நல்லாப் பாடிப் பழகிடமாட்டேன்?” என்றவன் “எம் பொஞ்சாதி மீனா வரநேரம் அதுக்குள்ள மதிய சாப்பாட்டுக்கு நம்ம வீ□ட்டுக்கு என்ன காய் தேவைன்னு ஆத்தா சொல்லியிருப்பாங்களே அதுபடி பறிச்சு தயாராவைக்கணும் இல்லைன்னா அவ.....” “சொல்லவந்ததை முடிப்பதற்குள் “என்ன சுந்தரிம்மா என் பெயர் அடிபடுது?” செல்லச்சிணுங்கலுடன் அங்கு வந்தாள் மீனா.

“அதெல்லாம் ஒண்ணுமில்லை அக்கா உங்க கைப்பக்குவத்துல எந்த கறிகாயும் ரொம்ப அருமையா இருக்கு. அதான் அம்மா என்னையே பாத்து பொறியலுக்கும் சாம்பாருக்கும் ஏதாச்சும் அனுப்பிட சொன்னாங்க. காலையில கிளம்பி வரதுக்கு முன்ன நம்ம வீட்டுக் கீரையைப் பறிச்சு வச்சிருக்கேன் அதைக் கடஞ்சுடலாம்“...

“ஏங்க, அப்ப கத்திரிக்காய் பொரியலுக்கும்

வெண்டைக்காய் குழம்புக்கும் பறிச்சிடுங்க. மூர்த்தித் தம்பி மசாலா போட்டு எண்ணெய் கத்திரிக்காய் செஞ்சா விரும்பி சாப்புடும்."மருதை கூடையோடு நகர கூடவே நடந்த மீனாவைப் பின்தொடர்ந்த சுந்தரி "நீங்க செய்யற எல்லாமே மூர்த்தி ரசிச்சுதான் சாப்பிடறாரு. நேத்து சாப்பிடும்போது மூர்த்தி, "இந்த அளவுல சாப்பிட்டேன்னா பிரசவத்துக்குப் போயிருக்கற கோமதி திரும்பி வந்து என்னை யாரு இவருன்னுக் கேக்கப் போற அளவுக்கு ஊதிடப் போறேன்னு தோணுதுன்னு சொல்லி சிரிக்கறாரு" சுந்தரியின் பாராட்டில் முகம் மலரும் மீனாவைப் பார்த்து, "இந்தப்




பாராட்டுல முழுசும் உனக்கில்ல தெரிஞ்சுக்க. இயற்கை உரத்துல விளைஞ்ச இந்த காய்களுக்கே தனி ருசி இருக்குமில்ல" என்ற மருதை "நேத்து சந்தைக்குக் காய்கொடுக்கப் போனபோது அந்தக் கடைக்காரரு இன்னும் கூடுதல் அளவுல காய் தேவைங்கறாரு.. இதெல்லாம் நம்ம முதலாளிங்க வழிகாட்டல்ல நாம செய்யற இயற்கை முறை விவசாயத்தோட மகிமை தானே."

சொன்னபடியே கூடையை மீனாவிடம் நீட்டியவன், "போதுமில்ல... போதும் நான் கிளம்பறேன். மதிய சாப்பாட்டை கூடையில வைச்சிருக்கேன்.நேரத்தோடு சாப்புடுய்யா" என்று கிளம்பினாள். "சுந்தரிம்மா, நான்போய் சந்தைக்கு அனுப்பக் காயெடுக்கறேன். மூர்த்தித் தம்பி கொஞ்ச நேரம் முந்தி போன் செஞ்சு உங்களைக் கேட்டாரு. பக்கத்து நிலச்சொந்தக்காரரோட பேசிட்டாருபோல. அவங்க மகனும் நமக்கு நிலத்தை விக்க சம்மதம் சொல்லிட்டாராம். இன்னும் கொஞ்ச நேரத்துல தம்பி இங்க வந்து உங்களைக் கூட்டிக்கிட்டு பாங்க் போகணுமாம். பாங்க் வேலையெல்லாம் பார்க்க நமக்கு பொறுமை கிடையாது. அதுக்கெல்லாம் சுந்தரிதான் சரிப்படுவான்னாரு" சொல்லிவிட்டு மருதை நகர, கிடைத்த தனிமையில் சுந்தரியின் மூடிய விழித்திரையில் கடந்தகாலம் திரைப்படமாய் விரியலாயிற்று.

"டேய், நீ சொல்றதெல்லாம் நிசமா?" அதிர்ச்சி நிறைந்த குரலில் கேட்கும் நண்பனுக்கு மௌனமாக தலையசைத்தவன் ஓசையின்றி அழத்துவங்கினான்.சிறிது ஆசுவாசத்திற்குப் பின் "கொஞ்ச நாளாகவே எனக்கு இந்த அவதி இருக்குடா. காலேஜுல பசங்க எம்முதுகுக்குப் பின்னாடி கேலிசெய்யறதெல்லாம் கண்டும் காணதவனா இருந்து கடைசிவருடப் பரீட்சையை நல்லபடியா எழுதி முடிச்சிட்டேன். ரெண்டு நாள் முன்னே வீட்டுல யாருமில்லன்ற நினைப்புல என் தங்கச்சியோட சீலையை போட்டுக்கிட்டு நின்னதை பார்த்த எங்க அண்ணி செஞ்ச கலாட்டால அப்பா ரொம்ப அதிர்ச்சிஆயிட்டாரு. அண்ணன் வேலையிலிருந்து வந்ததும் இனி நானிருக்கிற வீ□ட்டுல அவங்க இருக்க முடியாதுன்னு சொல்லி அண்ணணோட தனியாப் போக முடிவெடுத்ததும் அப்பா என்னை வெளியே போகச் சொல்லிட்டாரு. தலைப்பிரசவத்துக்கு வரப் போற மூத்த அக்கா, கலியாணத்துக்கு நிக்கற சின்னவள்ளுன்னு வரப்போற செலவை அதிக வருமானம் இல்லாத அவரு எங்க அண்ணன் தயவில்லாம எப்படிசமாளிப்பாரு? என் அக்கா தங்கச்சியும் அவரோட சேர்ந்து எங்கேயாவது கண்காணாம போன்னு விரட்டியடிச்சாங்க. அம்மாதான் பாவம் இவங்களை எதிர்க்கவும் முடியாம என்னைப் பிரியவும் இயலாம ஒரே அழுகை. இப்படி ஒரு அவமானசின்னமா உயிர் வாழறதுக்கு பதிலா செத்திடலாம்னு தோணுது. எனக்குன்னு இருக்கற ஒரே நண்பன் நீதான். அதான் உன்னை ஒருவாட்டி கடைசியாப் பாக்கணும்னு தோணிச்சு" திக்கித் திணறி ராமு பேசிமுடித்தான்.

"ஏண்டா நீ என்ன பைத்தியமா? சாகற

அளவுக்கு இப்ப என்ன ஆயிடிச்சு? முதல்ல உள்ள வா சாப்பிடலாம். அம்மா ஒரு வேலையா ஊருக்குப் போயிருக்காங்க. எனக்கு தெரிஞ்சபடி சமைச்சிருக்கேன்" வற்புறுத்தி சாப்பிட வைத்தவன், "நம்ம நடேச வாத்தியார் ஊருல விவரமானவரு. கெட்டிக்கார பையன்னு உம்மேல அவருக்குத் தனிபிரியம். அவரைப்போய் பாத்தா நம்ம மேற்கொண்டு என்ன செய்யலாம்னு ஒரு தெளிவு கிடைக்கும். "இருவரும் கிளம்பி வெளிவரும் சமயம் மூர்த்தியின் கைபேசி ஒலிக்க,"சொல்லும்மா" என்றவனின் முகம் புன்னகையால் விரிய நண்பனை பக்கத்தில் இழுத்தவாறே ஸ்பீக்கரை உயிர்பித்தான். "கடவுள் அருளும் நம்ம ஊரில இருக்கற சில நல்ல மனுசங்க தயவும் கூடி கேசு நமக்கு சாதகமாத் தீர்ப்பாயிடிச்சு மூர்த்தி. நம்மளை ஏமாத்தி நிலத்தைப் புடுங்க உறவுக் கூட்டம் முழுமூச்சா வேலை செஞ்சாலும் உன் அப்பாவோட நல்ல மனசு நண்பர்கள் ஒத்துழைப்புல இன்னிக்கு நாம ஜெயிச்சிருக்கோம். நிராதரவா நின்ன நம்ம நிலமை புரிஞ்சு பணத்தை மட்டும் பெரிசா நினைக்காம நியாயத்தை உசத்தியா எண்ணி வாதாடிய வக்கீலும் அமைஞ்சது தெய்வஅருளுன்னு தான் தோணுது."

"கேக்கவே ரொம்ப சந்தோஷமாஇருக்கும்மா. இப்ப நான் கிளம்பி அங்க வரணுமா?" இல்ல ராசா நான் காலை பஸ்ஸில கிளம்பி அங்க வரேன். இன்னும் இரண்டு வாரத்துல பத்திரப்பதிவு செஞ் சிடலாம்னு சொல்றாங்க. அதுக்கு நீ வரணும். இப்ப நம்மகிட்ட இருக்கற சொல்ப நகைநட்டெல்லாம் வித்து வக்கீலுக்கும் மத்த செலவுக்கும் ஏற்பாடு செய்யணும். மீதித் தொகைக்கு நம்ப பூவராகன் ஐயா உதவறதா சொல்றாரு. கொஞ்சங்கொஞ்சமா அவரு பணத்தைத் திருப்பினா போதுங்கறாரு."

"சரிம்மா ஜாக்கிரதையா வாங்க." போனை துண்டித்தவன் "ஏறு வண்டியில. இப்ப வாத்தியார் வீட்டிலதானிருப்பாரு. இந்த வழக்கு போட அம்மாக்கு ஆலோசனை சொல்லி தைரியம் கொடுத்ததே அவருதான். இந்த நல்ல விஷயத்தை சொல்லிட்டு அப்படியே உன்னைப் பத்தியும் பேசிடுவோம்." நண்பன் கையிலிருந்த பையை வாங்கி வீட்டிற்குள் வைக்க, தயங்கினான் ராமு.

"உங்க அம்மா என் வரவை எப்படி எடுத்தப்பாங்கன்னு தெரியாம நான் இங்க தங்கறது..." "எங்க அம்மாவைப் பத்தி எனக்குத் தெரியும். அவங்க படிப்பு இல்லாதவங்களா இருந்தாலும் பண்பும் கனிவும் நிறைஞ்சவங்க. நீ நல்ல படிக்கறதோட உன்னோட பணிவுஅடக்கம் எல்லாத்தையும் ரொம்ப பாராட்டுவாங்க. இந்த மாதிரி பிள்ளையைப்பெத்தவ புண்ணியவதிம்பாங்க. நாம ரெண்டு பேரும் ஒண்ணா பிளஸ் டூ படிக்கும் போது நீ விடியவிடிய எனக்கு படிப்பு சொல்லிக் கொடுத்து என்னை பாஸ் செய்ய வச்சதை இப்பவும் சொல்வாங்க. உன் அருமை யாருக்கு தெரியுதோ இல்லையோ அவங்களுக்கு நல்லா தெரியும் கிளம்பு."

பையிலிருந்து ஒரு கவரை எடுத்த ராமு "இதில கொஞ்சம் பணம் இருக்குடா. லீவு நாளெல்லாம் நான் ஏதாச்சும் வேலைக்குப் போயி கிடைக்கற பணத்தை அம்மா கிட்ட கொடுத்து அவங்களை ஏதாச்சும் வாங்கிக்கச் சொல்வேன்.அவங்க அதை அப்படியே வச்சிருந்து கூட அவங்க கையில இருந்த சிறுவாட்டுப் பணத்தையும் சேர்த்து ரகசியமா இருபதாயிரம் கொடுத்தாங்க. "நீ கெட்டிக்காரன் எப்படியும் சுய உழைப்பில முன்னுக்கு வந்துடுவ. அதுவரைக்கும் செலவுக்கு இருக்கட்டும்னு அழுதுகிட்டே இதைக்கொடுத்தாங்க". விம்மிய படியே நண்பன் தரும் பணக்கவரை வாங்கி வைத்தவன் "உங்க அம்மா வார்த்தை பலிக்கப் போவுது பாரு. வண்டியில ஏறு." சொன்னபடியே அடுத்த பத்தாவது நிமிடம் நடேச வாத்தியார் வீட்டிற்குள் இருவரும் நுழைய, விரியும் புன்னகையுடன்,"உயிர் தோழர்கள் இருவரும் ஒண்ணாசேர்ந்து எங்க இந்த பக்கம்?" என வரவேற்றார்.அவர்.

கையில் இருந்த இனிப்பு, பழங்கள் பையை அவரிடம் கொடுத்து வணங்கிய மூர்த்தி "சார், உங்க ஆலோசனையும் ஆசியும் துணை நின்னு கேஸ்ல எங்க பக்கம் ஜெயிச்சிடுச்சு. அம்மா முதல்ல



உங்களுக்கு இதைத் தெரிவிக்கச் சொன்னாங்க”

“ரொம்ப சந்தோஷம்பா. நீ ஏதோ ஸ்கார்ப் பிசினஸ் செய்யறதா அம்மா சொன்னாங்க.அது நல்லாப் போவுதா?”

“நல்லபடியாதான் போவுது. ஆனா




அம்மாவுக்கு இந்த வேலை சுத்தமா பிடிக்கலை. நமக்கும் படிப்புக்கும் எட்டாத தூரம்னு ஆனபிறகு ஏதோ உழைச்சுப் பிழைக்கேறேன்னு அவங்க வாய்விட்டு ஏதும் சொல்றதில்லை.”

“ஏமாத்தாம திருட்டுப் பொய் இல்லாம செய்யற தொழில் எதுவும் கேவலமில்லைன்னு அவங்களுக்கும் தெரியாமலா இருக்கு□ம்? இப்பதான் நிலம் கையில வந்திடிச்சே. இனி அவங்க எண்ணப்படி நடக்கவேண்டியதுதான்.” பேசிக் கொண்டே திரும்பியவர்,” என்னப்பா ராமு பரிட்சையெல்லாம் நல்லபடியா முடிச்சிருப்பியே. முதல் வகுப்பு நிச்சயம் தானே? மேற்கொண்டு என்ன பிளான் வச்சிருக்கே?” தலை கவிழ்ந்து மௌனமாக கண்ணீர் வடிப்பவனை புரியாமல் பார்க்கும் வாத்தியாரிடம் மூர்த்தி விபரங்களை ஒருவாறு கூற, சில நொடிகள் ஆழ்ந்த மௌனத்தில் கண்மூடி இருந்தவர் பேசத் துவங்கினார்.

“கேக்க ரொம்ப கஷ்டமாயிருக்கு. ஆனா இப்பல்லாம் ஜனங்க மத்தியில இதைப் பத்தி நேர்மறையான புரிந்துணர்வு இருக்கு. டவுன்ல எனக்குத் தெரிஞ்ச டாக்டரிடம் நான் பேசி இது தொடர்பான மருத்துவத்துக்கு ஏற்பாடு பண்ணலாம்.மனசை தளறவிடாம இரு.உறவைவிட நட்புதான் பெரிசுங்கறதுக்குப் பொருத்தமா உனக்கு மூர்த்தி இருக்கும்போது வேண்டாத எதிர்மறை எண்ணகளுக்குப் புத்தியில இடம்கொடுக்காதே.”

வாத்தியார் சொன்னது போலவே அம்மருத்துவர் செய்த அறுவைசிகிச்சையில் ராமு ஒரு பெண்ணாக மாறினான். சில நாட்கள் அவர் ஏற்பாட்டில் அவள் அங்கு தங்கி உடல் ரீதியாகவும் மனமேம்பாட்டிற்கும் சிகிச்சை எடுத்துக் கொண்டிருந்த சமயம் மூர்த்தி தாயுடன் ஊருக்கு சென்று பத்திரப் பதிவு வேலைகளை முடித்துக் கொண்டு ஊரில் குடித்தனத்திற்கு வீடும் பார்த்து வைத்துவிட்டான். உறுமாறிய ராமுவைப் பார்த்த மூர்த்தியின் அம்மா,”எனக்குப் பெட்டபிள்ளை இல்லியேன்னு மனசுல ஒரு ஏக்கம் இருந்துச்சு. இனி நீதான் என் மக சுந்தரின்னு” கட்டித்தழுவிக் கொள்ள ராமு தன் கடந்த கால கசப்புகளை மறக்க அதுவே ஆரம்பப்பள்ளியாக அமைந்தது.

அம்மாவின் ஆசைப்படி வாத்தியாரிடம் பிரியாவிடைப் பெற்றுக் கொண்டு ஊருக்கு வந்தவர்கள் தரிசுநிலத்தையும் பாழைடைந்த கிணற்றையும் கண்டு விவசாயத்தைப் பற்றி ஏதும் தெரியாத நம்மால் என்னமுடியும் என மலைத்தனர். “உங்க அப்பா காலத்துல பொன் விளைஞ்ச பூமிடா இது.கடும் கோடையிலும் வத்தாத பாசனக் கிணறை சீர் செஞ்சு நிலத்தையும் பண்படுத்திடலாம். இன்னிக்கு பாடுபட உடல்ரீதியா என்னால முடியாட்டாலும் அந்த நாளில நானும் நிலத்துல இறங்கி உழைச்சிருக்கேனில்ல அந்த அனுபவத்தை உங்களுக்கு ஆலோசனையா எடுத்துச் சொல்லி பாடுபட்டுப் பார்க்கலாமே. பூமித்தாய் கருணையில உங்க உழைப்பு நிசசயமா வீண் போகாது” தாயின் வார்த்தைகள் சத்திய வாக்கானது.ஆரம்பத்தில் எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிகள், சுந்தரியின் நிலைப் பார்த்து சிலரின் ஏளனப் பேச்சுகள் போன்றவை அவர்களை நிலை தடுமாற வைத்தது.

பகல் நேரமெல்லாம் மூர்த்தியோடு நிலத்தில் ஆண்பிள்ளை போல் பாடுபட்ட சுந்தரி மாலைநேர்களில் தன் கனிவான பேச்சால் ஊர்ப்பெண்களையும் அன்பு கலந்த போதனைகளால் குழந்தைகளையும் வசியப் படுத்திவிட ஊரில் பலரும் இவர்களின் முயற்ச்சிக்கு உதவ முன் வந்தனர். மூர்த்தியின் நேர்மையும் விடாத முயற்சியும் வங்கிக் கடனுக்கும் வழிகாட்டியது.இதற்கிடையில் சுந்தரியை இயற்கை

முறை வேளாண்மைப் பற்றி அறிய நம்மாழ்வா பயிற்சிமையத்தில் சேர்த்துவிட்டு அந்தமுறைகளைப் பின்பற்றியதில் மகசூல் படிப்படியாக தரத்திலும் அளவிலும் உயரத்துவங்கியது. கூடவே அந்த ஊர்ப் பள்ளியை சீரமைப்பதிலும் வீண் சண்டை வம்பு என்று நேரம் கடத்திய பெண்களை ஒருங்கிணைத்து அவர்கள் பொருளாதார ரீதியாக மேம்பட வகுப்பு எடுத்து சுந்தரி பாடுபட மூர்த்தி தவறான பழக்கங்களால் சீரழியும் ஆண்களுக்கு இதமாகவும் மிரட்டியும் எச்சரித்து பலரை உழைப்பாளியாக உறுமாற்றினான். மொத்தத்தில் கடந்த ஆறுஆண்டுகால உழைப்பு அந்தத் தாயையும் பிள்ளைகளையும் ஊரின் பெருமதிப்புக்கும் அன்புக்கும் உரியவர்களாக ஆக்கிவிட்டது.



இவர்களின் வாழ்க்கையின் இனிமையை அதிகரிப்பது போல கடந்த வருடம் மூர்த்தியின் கரம்பிடித்தாள் கோமதி. கணவனின் மனதறிந்து நடப்பதில் நல்மனையாளாக மாமியின் மதிப்பறிந்து மரியாதை காட்டும் மருமகளாக சுந்தரிக்கு உற்ற தோழியாக அவள் அமைந்ததில் வீடே சொர்க்கமாகிவிட்டது. இந்த இனிய இல்லறத்துக்கு மேலும் இனிப்பூட்ட கோமதி தாய்மை அடைந்தாள். மகப்பேறுக்கு விருப்பமின்றி பிறந்த வீட்டிற்கு சென்றிருப்பவள் தினம் மூர்த்தியோடு பேசாவிட்டாலும் சுந்தரியோடு பேசித் தன்னைப் பற்றிய விபரங்களைக்கூறி அவர்கள் நலனைப்பற்றியும் அறிந்து கொள்வாள்.

"என்ன ஒக்காந்துக்கிட்டே உறக்கமா?" முதுகில் தட்டிக் குரல் கொடுக்கும் மூர்த்தியின் குரலால் கனவிலிருந்து விழிப்பதுபோல் நிகழ்வுலகுக்கு திரும்பினாள் சுந்தரி. "கோமதிக்கு இன்னும் ஒருவாரம் பத்துநாளுக்குள்ளே பிரசவம் ஆகலாம்னு டாக்டர் சொல்லியிருக்காங்களாம். நம்ப அம்மா பிரசவநேரத்துல அவகூட இருக்கணும்னு கோமு பிரியப்படுது. இன்னும் இரண்டுமூணு நாளில அவங்க கிளம்பறதா இருக்காங்க. இப்ப நாம பாங்குக்குப் போயி அம்மா கிளம்பறதுக்குள்ள பக்கத்து நிலப் பதிவுக்கு லோன் ஏற்பாடு ஆகுமான்னுப் பாக்கணும்." "அதெல்லாம் கிடைச்சுடும். நான் அது சம்பந்தமா தயாரிச்சு வைச்ச பேப்பர் எல்லாம் எடுத்து வந்திருக்கே இல்லே" என்று கேட்டபடியே சுந்தரி உடன் நடக்க, வண்டியை நெருங்கும் மூர்த்தியின் கைபேசியில் ஒரு புது எண்ணிலிருந்து அழைப்பு..., "யாரு மூர்த்தியா? நான் ராமுவோடஅம்மா பேசறேன்." அருகிலிருந்த சுந்தரியும் கேட்கும் படி ஸ்பீக்கரை உயிர்பித்து "சொல்லுங்கம்மா நல்லாயிருக்கீங்களா" என்றான்.

"பெத்த மகனுக்கு செஞ்ச கொடுமைக்கு நாங்க எப்படிப்பா நல்லாயிருக்க முடியும்? இவரு உடம்பு ரொம்ப முடியாம இருக்காரு. இவரு சீக்காளியா ஆனதில மருமக போதனைக் கேட்டு முத்தவன் தனியாப் போயிட்டான். கட்டிக் கொடுத்த மகளுகளும் எங்களை வந்துப் பார்க்கறது கூட இல்லை. ராமுவை விரட்டின பாவந்தான் நம்மளுடைய இந்த நிலைமைக்குக் காரணம் கடைசியா எனக்கு அவனை ஒரு தபா பார்க்கணும்னு இவரு ஓயாம புலம்பறாரு. அதான் நம்ப வாத்தியாரைப் பார்த்துக் கேட்டதுல அவன் உன்கூட இருக்கறது தெரிஞ்சுது....." தொடர்ந்து பேச முடியாமல் அழுதாள்.

"அம்மா, ராமுவைப் பார்க்கறது மட்டுமில்லை இனிமே நீங்க அவன் கூடவே இருக்கப் போறீங்க. அப்பாவுக்கு இங்க வந்தாலே எல்லா சீக்கும் சரியாயிடும் பாருங்க. இன்னும் ரெண்டு நாளில இதுக்கான ஏற்பாடுகளை செஞ்சிட்டு இதே நம்பரில் உங்களைக் கூப்பிடுவேன். கிளம்பி எங்களோட வரத் தயாராயிருங்க மத்தவிபரம் அப்பறம் பேசலாம்" இணைப்பைத் துண்டித்தவன், "என்ன திகைச்சு நிக்கறே? பெத்தவங்களுக்கு ஒன்னோட அருமையை கடவுள் எப்படி புரியவச்சுட்டாரு பாத்தியா?" சொன்னபடியே வண்டியைக் கிளப்ப, மனமெல்லாம் பரவிய நிம்மதிஉணர்வோடு பின்னிருக்கையில் அமர்ந்தாள் சுந்தரி என்னும் சுந்தர்ராமன்.

# தம் வேர்

## குடிநீர் தட்டுப்பாடு–புது கட்டுப்பாடு !

உலகம் முழுவதும் தண்ணீர் தட்டுப்பாடு பிரச்னை பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது. தண்ணீரின் அவசியம் குறித்தும் அதைச் சேமிக்க வேண்டியதன் கட்டாயம் குறித்தும் அனுபவப்பட்டவர்கள் தற்போதுதான் மெல்ல உணரத் தொடங்கியுள்ளனர்.

தண்ணீருக்குத் தவிக்கும் சில நாடுகளில் மக்கள் படும்பாடு குறித்து வெளியாகும் தகவல்கள், பிற நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கு விடுக்கும் எச்சரிக்கையாகும். தென்னாப்பிரிக்க நாட்டின் மிகப் பெரிய நகரமான கேப்டவுனில் நீராதாரங்கள் அனைத்தும் வற்றியதால் தண்ணீருக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு இந்த ஆண்டின் தொடக்கத்தில் அங்கு “டே ஜீரோ’ எச்சரிக்கை விடுக்கப்பட்டது. அந்த நகரத்தில் உள்ள அனைத்து குடிநீர்க் குழாய்களிலும் தண்ணீர் வராத தினம் “டே ஜீரோ’ என்றும், அதன்பிறகு அரசு சார்பில் பொது குடிநீர் மையங்களில் வழங்கும் குடிநீரை “ரேஷன்’ முறையில் பொதுமக்கள் பெற்றுச் செல்லலாம் என்றும் அரசு அறிவித்தது.

இந்த எச்சரிக்கைக்குப் பின் அங்கு வாகனங்களைக் கழுவுவதுகூட சட்ட விரோதமானது. “டே ஜீரோ’ நாளை எதிர்கொள்ள கேப்டவுன் நகரமும் கவலையுடன் தயாராக இருந்தது. இந்த நெருக்கடியை எப்படி கையாளப் போகின்றனர் என உலக நாடுகளும் கேப்டவுனை கவனித்து வந்தன.




ஆனால், வருணனின் கருணையால் இந்த தினம் 2019—ஆம் ஆண்டுக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

தற்போது அங்கு தண்ணீரைச் சேமிப்பது குறித்தும், தண்ணீர் வீணாவதைத் தடுப்பது குறித்தும் தொடர்ந்து விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்படி ஒவ்வொரு நாட்டிலும் தண்ணீர் தட்டுப்பாடு முக்கியப் பிரச்னையாக தலைதூக்கியுள்ள நிலையில், இந்தியாவிலும் பல


# அறுக்கும்
# மக்கள்

எல்.ஆர். சங்கர்


மாநிலங்களில் தண்ணீர்ப் பற்றாக்குறையால் மக்கள் தவித்து வருகின்றனர்.

மகாராஷ்டிர மாநிலத்தில் நடப்பாண்டில் பருவமழை பொய்த்ததால் அங்குள்ள குடிநீர் ஆதாரங்களான அணைகள் உள்ளிட்ட நீர் நிலைகள் வற்றும் நிலைக்குச் சென்றுவிட்டன. நிலத்தடி நீர்மட்டமும் அதலபாதாளத்துக்குச் சென்று விட்டதால் மக்களும், விவசாயிகளும் கவலை அடைந்துள்ளனர்.

இதனால், மாநிலத்தின் இரண்டாவது பெரிய நகரமான புணே உள்பட பல முக்கிய நகரங்களில் தற்போது கடுமையான தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதை எப்படிக் கையாள்வது என்று தெரியாமல் அதிகாரிகள் தவித்து வருகின்றனர். தண்ணீருக்கான திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள புகழ்பெற்ற ஷீரடி சாய்பாபா கோயில் நிர்வாகத்திடம் அந்த மாநில அரசு ரூ. 500 கோடி வட்டியில்லாத கடனைப் பெற்றுள்ளது.




இந்த நிலையில் தண்ணீரைச் சேமிக்கும் வகையில் புணே நகரில் உள்ள ஹோட்டல்களில் உணவு சாப்பிட வரும் வாடிக்கையாளர்களுக்கு குடிப்பதற்கு பாதிக் குவளை தண்ணீர் மட்டுமே அளிக்க ஹோட்டல்கள் சங்கம் முடிவு செய்து அதைச் செயல்படுத்தவும் தொடங்கி விட்டது. இங்குள்ள ஹோட்டல்களில் “மெனு’ அட்டையுடன் மற்றொரு அட்டையும் தரப்படுகிறது. அதில் நீரைச்




சேமிப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் பாதிக் குவளையில் தண்ணீர் தரப்படுவது குறித்தும், இதனால் நீர் வீணாவதைத் தடுப்பது குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் நல்ல பலன் தரத் தொடங்கியுள்ளதாகக் கூறுகிறார் புணே உணவகங்கள் மற்றும் விடுதி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கணேஷ் ஷெட்டி. புணேயில் உணவகம் நடத்தி வரும் அவர் கூறுகையில், “”உணவகங்களுக்குச் சாப்பிட வரும் வாடிக்கையாளர்களுக்கு அளிக்கப்படும் குடிநீரில் பாதி மட்டும் அருந்திவிட்டு, மீதியை பலர் வீணாக்குகின்றனர். எனவே, வாடிக்கையாளர்களுக்கு பாதிக் குவளை குடிநீர் வைக்கலாம் என முடிவு செய்து அதைச் செயல்படுத்தி வருகிறோம். எனினும் தேவைப்படும் நிலையில் தேவையான குடிநீரைப் பெற்றுக் கொள்ளலாம். குடிநீரை வீணாக்கக் கூடாது என்பதுதான் எங்கள் வேண்டுகோள்” என்றார்.

இதற்கு முன் இவர்கள் ஹோட்டலுக்கு தினமும் 1,600 லிட்டர் தண்ணீர் தேவைப்பட்டது. இந்த பாதிக் குவளை தண்ணீர் தரும் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கியதும் தினசரி தண்ணீர் தேவை 50 சதவீதம் குறைந்து விட்டதாம். சராசரியாக ஒரு வாடிக்கையாளர் இதுவரை 100 மி.லி. குடிநீரை வீணாக்கி வந்துள்ளார். புணேயில் தண்ணீருக்கு தற்போது கடும் கட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் வரும் நாள்களில் நிலைமை இன்னும் மோசமாகலாம். அடுத்து வரும் கோடையையும் எதிர்நோக்க வேண்டியுள்ளதால், தண்ணீர் சேமிப்பு மற்றும் குடிநீர் வீணாவதைத் தடுப்பதில் ஹோட்டல்களின் பங்கு அதிகம் இருப்பதாக உணர்ந்து செயல்படத் தொடங்கியுள்ளனர்.

இதனால் அவர்கள் சங்கத்தில் உறுப்பினராக உள்ள 800 உணவகங்களில் தண்ணீர் சேமிப்பு குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய அட்டையை வாடிக்கையாளர்கள் சாப்பிடும் ஒவ்வொரு மேஜையிலும் வைத்துள்ளனர். மேலும், சங்கத்தில் உறுப்பினராக இல்லாத 3,500 உணவகங்களுக்கும் இந்த விழிப்புணர்வு அட்டை வழங்கப்பட்டுள்ளது.

தண்ணீர்ப் பற்றாக்குறையின் சிரமத்தைப் புரிந்துகொண்டு வாடிக்கையாளர்களும் முழு ஒத்துழைப்பு அளிக்கின்றனர். எனினும், சில வாடிக்கையாளர்கள் நீரை வீணாக்குகின்றனர். அதையும் செடிகளுக்கு ஊற்றுகின்றனர்.

உலகம் முழுவதும் மக்கள்தொகைப் பெருக்கம், தொழிற்சாலைகளின் பெருக்கம் ஆகியவற்றால் தண்ணீரின் தேவை அடுத்த பத்து ஆண்டுகளில் இரு மடங்காக அதிகரிக்க வாய்ப்புள்ளதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. மேலும், உலக அளவில் தென்னாப்பிரிக்கா, பிரேசில், ஈரான், கம்போடியா, இந்தியா, சீனா, சிங்கப்பூர், லிபியா உள்ளிட்ட 11 நாடுகளில் தண்ணீர்த் தட்டுப்பாடு அதிக அளவில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனியும் தண்ணீரைச் சேமிக்காமல், சிக்கனமாகப் பயன்படுத்தாமல் அலட்சியமாக இருந்தால், கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னரே சில ஆய்வாளர்கள் உரைத்தது போன்று, அடுத்த உலகப் போர் தண்ணீருக்காக நடந்து விடுமோ என்ற எழுகிறது.

# SAKTHI CASH & CARRY

245-247 High Street North, East Ham,
London E12 6SJ
+44(0)20 8471 4713

இந்திய – இலங்கை மளிகைப் பொருட்கள்
குறைந்தவிலையில் உயர்தரமாகவும் சுவையாகவும் கிடைக்கும்
தாயகத்தின் அனைத்துவிதமான பொருட்களும் கிடைக்கும்

வந்து பாருங்கள்!!!

வியந்து போவீர்கள் !!!




# SWATHI CASH & CARRY

306-308 High Street North, East Ham,
London E12 6SA
+44(0)20 8586 7648




## இரண்டாம் பாகம் : காஞ்சி முற்றுகை

# 28. சுகரிஷியின் வரவேற்பு

அதிசயமான பயங்கர சம்பவங்கள் நிகழ்ந்த அன்றிரவில், அசோகபுரத்துப் பாழடைந்த புத்த விஹாரத்தில் என்ன நடந்தது என்று இப்போது பார்ப்போம்.

அந்த விஹாரத்தில் தன்னந்தனியாக வசித்து வந்த வயோதிக பிக்ஷு இருண்ட சைத்யத்தில் நாகநந்தியுடன் பேசி விட்டுத் திரும்பி வந்தவுடனேயே, ஆயனரிடம் அங்கிருந்து உடனே புறப்பட்டுச் செல்வது நலம் என்று பிரஸ்தாபித்தார்.



சிவகாமியை அழைத்து ஆயனர் கேட்டபோது, சிவகாமி ஒரே பிடிவாதமாக அங்கிருந்து கிளம்ப முடியாதென்று சொல்லி விட்டாள். அங்கே சண்டை நடக்கலாமென்று பிக்ஷு சொன்னது அங்கே இருப்பதற்கு அவளுடைய ஆவலை அதிகமாக்கிற்று. அப்படி நடக்கும் சண்டையைக் கண்ணாலே பார்க்க வேண்டும் என்ற விசித்திரமான ஆசை அவள் உள்ளத்தில் உதித்தது. அந்த ஆசையின் மூலகாரணம் மாமல்லர் போர்க்களத்திலே நிகழ்த்தும் வீரச் செயல்களைப் பார்க்கவேண்டுமென்பதுதான். அவளுடைய கற்பனைக் கண்ணின் முன்னால் போர்க்களக் காட்சிகள் தென்படலாயின. நாலாபுறமும் சூழ்ந்துவரும் எதிரிகளுக்கு மத்தியில் மாமல்லர் தன்னந்தனியாக நின்று வாளைச் சுழற்றி எதிரிகளின் தலைகளை வெட்டி வீழ்த்துவதுபோல் அவள் கற்பனை செய்து கொள்வாள். மறுகணம் அந்தக் கற்பனைக் காட்சியின் கோரத்தைக் காணச் சகியாமல், மனத்தை விட்டு அக்காட்சியை அகற்றி விட முயல்வாள்.

இரவு ஒரு ஜாமம் ஆனபிறகு மறுபடியும் அந்த வயோதிக பிக்ஷு ஓடிவந்து, “அபாயம், அபாயம்! உடனே கிளம்புங்கள்! இல்லாவிட்டால், தப்பிப் பிழைக்க முடியாது!” என்று உரத்த குரலில் பரபரப்புடன் கூறினார்.

“அடிகளே! இன்னும் என்ன புது அபாயம் நமக்கு வரப்போகிறது?” என்று ஆயனர் அவநம்பிக்கையுடன் கேட்டார்.

“இங்கே யுத்தம் நடக்கலாமென்று நான் முன்னே சொன்னது, உண்மையைச் சொன்னால் ஒருவேளை நீங்கள் நம்பமாட்டீர்கள் என்றுதான். திருப்பாற்கடல் ஏரி உடைத்துக் கொள்ளும் போலிருக்கிறதென்று கேள்விப்பட்டேன். அதனால் தான் போய்விடலாமென்று யோசனை சொன்னேன். இப்போது உண்மையாகவே ஏரி உடைத்துக்கொண்டு விட்டது உடனே கிளம்புங்கள்!” என்றார்.

“சுவாமி! ஏரி உடைத்துக்கொண்டால் என்ன? அதற்காக நாம் ஏன் ஓடவேண்டும்!” என்று சிவகாமி சாவதானமாகக் கேட்டாள்.

“திருப்பாற்கடல் ஏரியை நீ பார்த்திருந்தால் இப்படிச் சொல்லமாட்டாய்! நாளைப்




பொழுது விடிவதற்குள் இங்கேயெல்லாம் ஒரே வெள்ளமாயிருக்கும்!" என்றார் பிக்ஷு.

சிவகாமி ஆயனர் பக்கம் திரும்பி, "அப்பா! நான் வெள்ளமே பார்த்ததில்லை. நாம் இங்கேயே இருந்து வேடிக்கை பார்க்கலாம். பிக்ஷு வேணுமானால் போகட்டும்!" என்றாள்.

"பெண்ணே! அறியாமையால் பிதற்றுகிறாய்! வெள்ளம் வந்தால் வேடிக்கையாயிராது! பனை மர உயரம் பிரம்மாண்டமாக வரும். இந்த விஹாரம், சைத்தியம் எல்லாம் மூழ்கிப் போய்விடும் அப்புறம் என்ன வேடிக்கையைப் பார்க்கிறது?"

"சுவாமி! அவ்வளவு நிச்சயமாய்ச் சொல்லுகிறீர்களே தங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று ஆயனர் கேட்டார்.

"பத்து வருஷத்துக்கு முன்னால் இப்படித்தான் ஒரு தடவை திருப்பாற்கடல் ஏரி உடைப்பு எடுத்துக் கொண்டது, அப்போது நானே பார்த்திருக்கிறேன். இந்தப் பள்ளத்தாக்கில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் செத்துப் போனார்கள். மீதியிருந்தவர்கள் இங்கே குடியிருப்பது அபாயம் என்று வேறு மேட்டுப்பாங்கான இடங்களுக்குக் குடிபோய் விட்டார்கள். அந்த வெள்ளத்திற்குப்



பிறகுதான் இந்த அசோகபுரம் இப்படிப் பாழடைந்து கிடக்கிறது!"

இதையெல்லாம் கேட்டபோது ஆயனருக்கும் சிவகாமிக்கும் மனக்கலக்கம் உண்டாயிற்று. ஆயினும், இரவில் கிளம்ப அவர்கள் மனம் இசையவில்லை. அதோடு, அப்போது பெருங்காற்றும் மழையும் ஆரம்பித்திருந்தன.

சிவகாமி திடீரென்று நினைத்துக்கொண்டு, "அப்பா! குண்டோதரன் சாயங்காலம் வந்தான். மறுபடியும் மாயமாய் மறைந்து விட்டானே? இந்தக் காற்றிலும் மழையிலும் எங்கே அகப்பட்டுக்



கொண்டானோ, தெரியவில்லையே?" என்று கவலையுடன் கூறினாள்.

"அவனுடைய நடவடிக்கையே இப்போது விசித்திரமாய்த்தானிருக்கிறது!" என்றார் ஆயனர்.

"அதோ கேளுங்கள் சத்தத்தை!" என்றார் பிக்ஷு.

ஆம்; அதுவரையில் கேளாத ஒரு புதுவிதமான சத்தம் அப்போது இலேசாகக் கேட்டது.

ஆயனருக்கும் சிவகாமிக்கும் மனக் கலக்கம் அதிகமாயிற்று. சிவகாமி, "அது என்ன சத்தம்?" என்றாள்.

"ஏரி உடைத்துக் கொண்டுவிட்டது நாளைப் பொழுது விடிவதற்குள் இங்கே ஒரே வெள்ளமாயிருக்கும்!" என்றார் பிக்ஷு.

"தெருவெல்லாம் தண்ணீர் ஓடுமோ? இந்த விஹாரத்துக்குள்ளே கூட ஜலம் வந்து விடுமோ?" என்றாள் சிவகாமி.

"விஹாரத்துக்குள்ளே மட்டுமில்லை, விஹாரத்துக்கு மேலேயுங்கூட வந்துவிடும்!" என்றார் பிக்ஷு.

"சுவாமி! இப்போது என்ன யோசனை சொல்கிறீர்கள்?" என்று ஆயனர் கவலையுடன் கேட்டார்.

"இப்போது நான் என்ன யோசனையைச் சொல்வது? சாயங்காலமே போய் விடலாமென்று சொன்னேன். நீங்கள் கேட்கவில்லை. பக்கத்திலுள்ள கிராமத்துக்குப் போய் ஒரு பானைத் தெப்பம் கொண்டு வருகிறேன். அதுவரையில் நீங்கள் இங்கேயே இருங்கள். இன்றிரவு நாம் தப்பிப் பிழைத்தால், புத்த பகவானுடைய கருணைதான். ஆஹா! நாகநந்தியடிகள் எப்பேர்ப்பட்ட பொறுப்பை என்னிடம் ஒப்புவித்து விட்டுப் போய் விட்டார்?"

இவ்விதம் கூறிவிட்டு அந்த வயோதிக புத்த பிக்ஷு நள்ளிரவில் புயலிலும் மழையிலும் விஹாரத்திலிருந்து வெளியில் சென்றார்.

புத்த பிக்ஷு வெளியில் போய்ச் சற்று நேரத்துக்கெல்லாம் அவர் கூறியபடியே உடைப்பு வெள்ளம் அசோகபுரத்தை அடைந்துவிட்டது. முதலில் கொஞ்சமாகத்தான் வந்தது அப்புறம் மளமளவென்று பெருக ஆரம்பித்து விட்டது. விஹாரத்துக் கதவுகளின் இடுக்கு வழியாகத் தண்ணீர் உள்ளே வரத் தொடங்கியது. சிறிது நேரத்துக்கெல்லாம் கதவுகளைப் பிளந்து தள்ளிவிட்டு உள்ளே குபுகுபுவென்று பாய ஆரம்பித்தது.

வெள்ளம் பெருகத் தொடங்கியதும் ஆயனர் முதலியோர் முதலில் விஹாரத்தின் வெளிவாசல் திண்ணையில் வந்து நின்றார்கள். ஆனால் மழை, புயல்,மின்னல் அசாத்தியமாயிருந்தபடியால் அங்கே நிற்க முடியவில்லை. பிறகு உள்ளே சென்றார்கள். உள்ளே தண்ணீர் புகுந்ததும் மேடைகளில் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். மேடைகளிலும் தண்ணீர் வந்ததும், மேல் தளத்துக்குப் போகும் மச்சுப் படிகளில் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். அப்படியும் அவர்களை விடாமல் தண்ணீர் மேலே மேலே வந்து கொண்டிருந்தது.

"அப்பா! என் அசட்டுத்தனத்தினால் உங்களை இந்த கதிக்கு ஆளாக்கினேன்!" என்று சிவகாமி ஆயனரின் கழுத்தைக் கட்டிக் கொண்டு புலம்பினாள்.

"ஐயோ! இந்த மானையும் கிளியையும் எதற்காக அழைத்து வந்தேன்?" என்று வருந்தி, அவற்றை அன்புடன் தடவிக் கொடுத்தாள். மானும் கிளியும்

ஏதோ பெரிய ஆபத்து வந்திருக்கிறது என்பதை உணர்ந்து சிவகாமியின் அருகில் வந்து ஒட்டிக் கொண்டு நின்றன.



"குழந்தாய்! நீ என்ன செய்வாய்? இப்படி நாம் கூண்டோடு கைலாசம் போகவேண்டுமென்று விதி இருக்கும் போது எப்படித் தடுக்க முடியும்? அந்த நாகநந்தியின் பேச்சைக் கேட்டு இப்படியாயிற்று!" என்று ஆயனர் கூறிச் சிவகாமியின் முதுகில் அருமையுடன் தட்டிக்கொடுத்தார்.

"நாகநந்தியின் மேல் ஒரு தவறுமில்லை. எல்லாம் மாமல்லரால் வந்தது, அப்பா!" என்றாள் சிவகாமி.

சிவகாமியின் உள்ளம் அன்றிரவு அடிக்கடி மாமல்லர்பால் சென்று கொண்டிருந்தது. வாசலில் நின்று தன்னைப் பார்த்தவர், ஒரு வார்த்தைகூடப் பேசாமல் போய்விட்டதை நினைத்து அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. அவர் நின்று பேசித் தங்களையும் கூட அழைத்துப் போயிருந்தால் இப்படி நேர்ந்திராதல்லவா? எனவே இந்த வெள்ளத்தில் நாம் செத்துப் போவதே நல்லது. நம்மை இங்கே பார்த்துவிட்டுச் சென்ற மாமல்லருக்கு, ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் நாம் இங்கேயே வெள்ளத்தில் முழுகிச் செத்துப்போனது தெரியாமல் போகாது. அப்புறம், அவர் வாழ்நாளெல்லாம் இதை நினைத்து நினைத்துத் துக்கப்படுவாரல்லவா? சற்று நின்று சிவகாமியுடன் பேசாமல் வந்து விட்டோமே என்று வருத்தப்படுவாரல்லவா? படட்டும்! படட்டும்! அவ்வளவு கல் நெஞ்சமுடைய மனிதருக்கு இதுவும் வேண்டும்; இன்னமும் வேண்டும்! அப்படி அவரை வருத்தப்படுத்துவதற்காகவே நாம் இங்கே வெள்ளத்தில் செத்துப் போவது நல்லதுதான். ஆனால், பாவம்! — அப்பாவும் அத்தையும் ரதியும் சுகரும் ஏன் இந்தக் கதிக்கு உள்ளாக வேண்டும்? பகவானே! திடீரென்று ஏதாவது ஒரு அற்புதம் நேரக்கூடாதா? தன்னைத் தவிர மற்றவர்கள் உயிர் பிழைக்கக் கூடாதா? நான் மட்டும் சாகக்கூடாதா? தன்னுடைய துரதிர்ஷ்டம், தலைவிதி, அவர்களையும் ஏன் பற்றவேண்டும்?

இப்படிப்பட்ட எண்ணங்களில் எவ்வளவு நேரம் போயிருக்கும் என்று தெரியாது. புயலும் மழையும் கொஞ்சம் ஓய்ந்திருப்பது போலத் தோன்றியது. மச்சுக்குப் போய்ப் பார்க்கலாம் என்று நினைத்து எல்லாரும் மேலே போனார்கள். உண்மையாகவே, புயல் ஓய்ந்து, மழையும் விட்டிருந்தது. சிறு தூறல்தான் தூறியது கீழ்த்திசையில் பரவியிருந்த மங்கலான வெளிச்சம் விரைவில் உதயமாகப் போகிறதென்பதைக் காட்டியது.

அந்த உதய நேரத்து ஒளியில் ஆயனர் முதலியோர் சுற்று முற்றும் பார்த்தபோது அவர்கள் என்றும் பாரா அதிசயமான காட்சி தெரிந்தது. எங்கெங்கும் ஒரே தண்ணீர்ப் பிரவாகமாயிருந்தது. சற்றுத் தூரத்திலிருந்த கிராமத்துக் குடிசை வீடுகளின் கூரையைத் தொட்டுக்கொண்டு வெள்ளம் ஓடிற்று. வீட்டுக் கூரைகளும், வைக்கோல் போர்களும், பெரிய பெரிய விருட்சங்களும் அந்தப் பெரு வெள்ளத்தில் மிதந்து சென்றன.

சிவகாமியின் உள்ளத்தின் அந்தரங்கத்தில், 'ஒருவேளை எங்கிருந்தாவது எப்படியாவது மாமல்லர் நம்மைக் காப்பாற்றுவதற்காக வரக்கூடாதா?" என்ற எண்ணம் தோன்றியது. "வீணாசை!" என்று அவளே தன்னைத்தான் திருத்திக்கொள்ள முயன்றாள்.

ஆனால், இதென்ன விந்தை! — கனவு காண்கிறோமா? சித்தப் பிரமையா? — அல்லது உண்மைதானா? — நடக்காத காரியம் நடக்கிறதே? — கைகூடாத ஆசை கைகூடுகிறதே? அதோ வெள்ளத்தில் நீந்திக் கொண்டு வரும் குதிரைமேல் இருப்பவர் மாமல்லர்தானே?... கண்களே! சரியாகப் பாருங்கள்! நெஞ்சே! கொஞ்சம் நிதானித்துக்கொள்! ஆம், ஆம்; அவர்தான் சந்தேகமில்லை! நடராஜப் பெருமானே, பராசக்தித் தாயே! அருள் புரியுங்கள்! மீதியுள்ள தூரத்தை அவர் அபாயமில்லாமல் கடந்து வந்து சேர வேண்டுமே? அப்பா! அப்பா யார் வருகிறார் என்று பார்த்தீர்களா? அத்தை! நீ பார்த்தயா? — ரதி! உனக்குக் கண் தெரிகிறதா? சுகப்பிரம்ம ரிஷியே! உமக்கு வாய் அடைத்துப் போய் விட்டதா, என்ன?..

உண்மையில் சுகப்பிரம்ம ரிஷிக்கு வாய் அடைத்துப் போகவில்லை. இரண்டு மூன்று தடவை தலையை இந்தப்புறமும் அந்தப்புறமும் வளைத்துப் பார்த்துவிட்டுச் சுகப்பிரம்மரிஷி "மாமல்லா!" என்று கூவி வரவேற்புக் கூறினார்

(சபதம் தொடரும்)




## முகொழுப்பைக் குறைக்க உதவும் 24 உணவுகள்:

ஒழுங்கற்ற வாழ்க்கைமுறை மற்றும் கொழுப்பு நிறைந்த உணவுமுறை ஆகியவற்றினால் கெட்ட கொழுப்புகள் உடலில் தங்கி இறுதியில் கொலஸ்ட்ரால் அளவு அதிகமாவதற்கு காரணமாகிவிடுகிறது. நகர்மயமாக்கலில் வாழ்ந்து வருபவருகளுக்கு ஆங்காங்கே கடைகளில் கிடைக்கும் உணவுகளை வங்கி உண்பது தான் வழக்கம் ஆனால் அதற்கு ஏற்ற உடல் உழைப்பு இல்லாத காரணங்களினால் கொலஸ்ட்ரால் அளவு அதிகமாகிவிடுகிறது.

அதிகரிப்பு (அல்லது) தொப்பை. இந்த இரண்டும் தான் உடல் மற்றும் மனம் சார்ந்த மற்ற நோய்கள் ஏற்படுவதற்கு மூல காரணம்.

இப்பொழுது உள்ள தலைமுறையினர் எல்லாம் உடல் உழைப்பைக் குறைத்து மூளைக்கு வேலை கொடுத்துக் கொண்டு இருக்கின்றனர். அதுவும் குறைந்த பட்சம் எட்டு முதல் ஒன்பது மணி நேரம் குளிரூட்டப்பட்ட அறையில் (கிசி ஸிஷீஷீனீ) அமர்ந்த நிலையில் வேலை செய்கின்றனர். வேலைப் பழுவின் காரணமாக இவர்கள் சத்தான உணவைத் தவிர்த்துக் கொழுப்பு நிறைந்த மற்றும்



சிறுவயதிலிருந்தே கொழுப்பு நிறைந்த உணவு வகைகளை உண்டவர்களுக்கு ஐம்பது அறுபதில் வரவேண்டிய இருதய நோய்கள் முப்பது வயதிலே வந்து விடுகிறது. இரத்தக் குழாய்கள் மற்றும் பிற உறுப்புகளில் படியும் கெட்ட கொழுப்புகள் இரத்த அழுத்தத்தை மிகைப்படுத்தி, இறுதியில் மாரடைப்பை உருவாக்கி இள வயதிலேயே இறப்பிற்கு வழிவகுக்கின்றன.

இன்றய காலக்கட்டத்தில் நாம் அனைவரும் கால்களில் சக்கரத்தைக் கட்டிக் கொண்டு ஓடிக்கொண்டிருக்கிறோம். இத்தகைய அவசரமான உலகில் நம் உடலுக்குத் தேவைப்படும் சத்தான உணவுப் பொருட்களைத் தேடி, வாங்கி உண்பது என்பது அரிதாகிப் போய்விட்டது. இதனால் இன்றய தலைமுறையினர் சந்திக்கும் இரு பெறும் நோய்கள் மன அழுத்தம் மற்றும் உடல் எடை

துரித உணவு வகைகளை வாங்கி உண்கின்றனர். இதனால் உடலில் சேரும் கொழுப்பும் பயன்படுத்தப்படாத கலோரிகளும் உடலிலேயே தேங்கிக் கொள்கிறது. இவ்வாறு தேங்கும் கொழுப்பும் கலோரிகளும் தான் உடல் பருமன் தொப்பை போன்றவற்றிற்கு காரணமாகின்றன. இந்நவீன காலத்தில் தொப்பையைக் குறைக்க உடற்பயிற்சி மையம் யோகா (தவக்கலை) வகுப்பு போன்றவற்றை நாடிச் செல்கின்றனர். தொப்பையையும் தொப்பைக்குக் காரணமான கொழுப்பையும் கரைக்க உடற்பயிற்சி மற்றும் யோகா (தவம்) போன்றவை மட்டும் போதாது. அதோடு கூடச் சத்தான உணவுப் பழக்கத்தையும் கையாள வேண்டும். தொப்பையைக் குறைக்க உணவின் அளவைக் குறைக்க வேண்டியதில்லை. மாறாகக் கொழுப்புச் சத்து குறைவாக உள்ள




மற்றும் கெட்ட கொழுப்பினைக் கரைத்து நல்ல கொழுப்பினை அதிகரிக்கும் பொருட்களையும் நம் அன்றாட உணவுப் பழக்கத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

நாம் உண்ணும் உணவில் நல்ல கொழுப்புகளும் உள்ளன. அவைகளை நமது உணவில் சேர்த்து உண்டு வந்தால் கெட்ட கொழுப்புகள் அண்டாமல் நமது உடல் மிக நலமுடன் இருப்பதுடன் நமது இருதயமும் நலமாக இருக்கும். இவ்வாறாக உங்கள் அன்றாட உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டிய சத்து நிறைந்த மற்றும் கொழுப்பினைக் (கொலஸ்ட்ராலைக்) கரைக்கும் உணவுப் பொருட்களின் பட்டியல் பின்வருமாறு.



### கொழுப்பைக் குறைக்கும் 24 உணவு வகைகள்:

கொலஸ்ட்ராலை நாம் உண்ணும் உணவுமுறைகளின் மூலமே குறைத்து விடலாம். அவ்வாறான உணவு வகைகளை இங்குப் பட்டியலிட்டுள்ளோம்.

1) கத்திரிக்காய் :

கலோரிகளே இல்லாத உணவு வகைகளில் கத்தரிக்காயையும் சேர்க்கலாம். நார்ச்சத்து அதிகம் உள்ள கத்திரிக்காயை உணவாக உட்கொண்டால் நமது உடலில் உள்ள கொலஸ்ட்ரால் மிக விரைவாக உறிஞ்சப்பட்டு குறைக்கப்படும்.

மேலும் கத்தரிக்காயை அதிகளவில் உணவில் சேர்த்துக் கொண்டால் நல்ல கொழுப்பின் அளவு நமது உடலில் அதிகரிக்கும். உடலில் உள்ள உப்பு சமநிலையை சீராக வைக்கபொட்டாசியம் பயன்படுவதால் இரத்த அழுத்தத்தைக் கட்டுப் படுத்த முடியும். இந்தப் பொட்டாசியம் நாம் அன்றாடம் உண்ணும் கத்தரிக்காயில் உள்ளது. மேலும் நார்ச்சத்து, வைட்டமின் 'பி' போன்றவைகள் அதிகமாக உள்ளதால் கத்தரிக்காய் இருதய நோய் என்னும் அபாயத்திலிருந்து நம்மை இறுதிவரையில் காக்கிறது.

2) சிறுதானியங்கள்:

சிறுதானியங்களை உணவாக உண்ணும் பழக்கம் நமது ஆதித்தமிழரின் வழிமரபில் தொன்று தொட்டு இருந்துள்ளது. அதுவும் தமிழ்க் கடவுள் முருகனின் உணவாகத் தினை என்பது போன்ற வரிகளை நமது சங்க இலக்கியங்களில் காணலாம். இதன் மூலம் அக்காலத்தில் நமது முன்னோர்கள் சிறுதானியங்களை முழுமுதற் உணவுப் பொருளாக உண்டு வந்துள்ளனர் என்பது அறியப் படுகிறது.

கீழ்வருபவை சிறுதானியங்களாகும்.

1. தினை
2. சாமை
3. வரகு
4. கம்பு
5. கேழ்வரகு
6. குதிரைவாலி
7. நாட்டுச் சோளம்

சிறுதானியங்களில் உடலுக்குத் தேவைப்படும் எண்ணற்ற சத்துக்கள் அடங்கியுள்ளன. சிறுதானியங்களில் சிலியம் என்ற நார்ச்சத்து அடங்கியுள்ளது. சிலியம் என்பது கரையக்கூடிய தன்மை கொண்டுள்ளது. மேலும் சிறுதானியங்களில் கார்போ ஹைட்ரேட் அதிக அளவில் உள்ளது. எனவே சிறுதானியங்களை உணவில் அதுவும் காலை உணவாகச் சேர்த்து வந்தால் நீண்ட நேரம் பசி எடுக்காது. எனவே உடலில் கெட்ட கொழுப்பு சேர்வது முற்றிலுமாகத் தடுக்கப் படுகிறது. சிறுதானியங்களில் உள்ள நார்ச்சத்து கொலஸ்ட்ராலைக் குறைக்கும் தன்மை கொண்டுள்ளது.


கம்பு, சோளம் போன்ற தானிய வகைகளில் புரதம், சுண்ணாம்பு மற்றும் பாஸ்பரஸ் போன்ற தாது உப்புக்களும் உயர்ச் சத்துக்களும் அடங்கியுள்ளன. இவை செரிமான தன்மையை அதிகரித்து உடலின் வெப்பத்தை சமநிலையில் வைப்பதோடு உடலுக்கு வேண்டாத கெட்ட கொழுப்பின் அளவைக் குறைக்கிறது.

# ஆசையால் அறிவு



## அறிவு பெறும் வாயில்கள்

அறிவு மிக ஆபத்தான கருவி. அதனால்தான் அது அற்றம் காக்கும் கருவியாகவும் இருக்கிறது. அநேகமாக, நாம் பாதுகாப்புக்குப் பயன்படுத்தும் எந்தக் கருவியும் இன்னொரு வகையில் ஆபத்தைத் தரக்கூடியதுதான். அதனை எப்படிப் பயன்படுத்துகிறோமோ அப்படித்தான் அதன் பயனைத் துய்க்க முடியும்.




இயன்றவரையிலும் எந்த ஆபத்தும் இல்லாமல் அதனைப் பயன்படுத்திக் கொள்வதில்தான் நம் சாமர்த்தியம் இருக்கிறது. அதற்கான சந்தர்ப்பத்தை நமக்கு வாழ்க்கை வழங்கிக் கொண்டே இருக்கிறது. ஆபத்து வராமல் பாதுகாத்துக் கொண்டு வைத்திருக்கும் ஆயுதத்தைவிட, ஆக்கபூர்வமான பயன்பாட்டுக்கு அந்த ஆயுதத்தைப் பயன்படுத்திக் கொள்வது எப்படி என்பதில்தான் மனிதகுல வளர்ச்சி இருக்கிறது.

இன்றைக்கும் இயற்கை நியதிப்படி எல்லா உயிர்களும் கண்டு அஞ்சுகிற இயற்கைப் பொருள் தீ. இது தீய பயத்தலால்தான் இப்பெயர் பெறுகிறது. எறும்பு முதலாக யானை ஈறாக உள்ள எல்லா உயிர்களும் கண்டு அஞ்சுவது தீக்கு மட்டும்தான். அவ்வளவு ஆபத்தான அதனை முற்றமுழுக்கத் தனக்குச் சாதகமாக ஆக்கிக்கொண்ட வல்லமையை உருவாக்கிக்கொண்டது மனிதம்.

அன்றாட வாழ்வில் நாம் எத்தனை வகைகளில் தீயைப் பயன்படுத்துகிறோம் என்பதை எண்ணிப்பார்த்தால் அறிவின் வல்லமை நமக்குப் புரியும். அதனை இன்னமும் தீமைக்குப் பயன்படுத்த நினைக்கிறோம் என்றால் நமது அறிவு இன்னும் விசாலப்படவில்லை என்றே பொருள். இங்கே தீ என்பது தீயை மட்டும் குறிக்காமல் தீமையைக் குறிக்கும் சொல்லாக மாறிவிடுகிறது.

இது மார்கழி மாதம் ஆலகால விஷத்தைவிடவும் ஆபத்தான பனிக்கொடுமையில் இருந்து தப்பிப்பது எப்படி? வேண்டாதவற்றைப் போட்டுக் கொளுத்தி வேண்டிய அளவிற்குத் தீ மூட்டிக் குளிர் காய்வதுதான் வழி. போகிப்பண்டிகை இப்படித்தான் புகையாக வந்து நம்மைச் சூழ்ந்து கொள்கிறது. தீயைவிடவும் தீமை தருகிற தீயவற்றைப் போட்டுக்கொளுத்தி அதில் இருந்து வெம்மையாகிய சுகத்தைப் பெற்றுக் கொள்ள




# உணர்தல்

கிருங்கை சேதுபதி

எளிய வழி இது.

பனிப்பதத்தில் கிடக்கும் ஓலையையோ, இன்னபிற குப்பைப் பொருளையோ, தீ மூட்டிப் பார்ப்பது ஒரு விளையாட்டு. இந்தத் தீ அளவோடு எரிகிற வரை, இன்பம். அளவுக்கு மீறிப் பற்றிவிட்டால் ஆபத்து. அதற்கு ஓர் எல்லை உண்டு.





இந்தத் தீயில் இருக்கும் தீதை எடுத்துக் கொண்டு சொல்விளையாட்டு ஆடிக்காட்டுகிறார் திருவள்ளுவர். தீயவை தீய பயத்தலால் தீயவை/ தீயினும் அஞ்சப் படும். எனவே, தீயைக் கண்டு அஞ்சாதே. தீமைக்கு அஞ்சு என்று அறிவுரை சொல்வதோடு நிறுத்திக் கொள்ளவில்லை அவர். இதற்கு அடுத்தபடியாக மேலே சொல்கிறார்.

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க — இது அரசு அதிகார வர்க்கத்திடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்லப்பட்டாலும், மாறுபாடு உடையவர்களிடத்திலும் மனக்கசப்பு வாராமல் நடந்து கொள்வதற்கு சொல்லப்பட்ட வழி. இது எல்லா உயிர்களிடத்திலும் உறவுகளிடத்திலும் பேணப்பட வேண்டிய ஒழுக்கம்.

இந்தத் தீயினுக்கெல்லாம் தாய் என விளங்குவது சூரியன். அதனைப் பரிதி என்றும் சொல்வோம். பரிதிமுன் பனியே போலப் பண்ணிய தீமை, அன்னை முன் அகலும் என்று பக்திபூர்வமாகச் சொல்கிறார் பாரதியார். அது சரி, பனிக்கு நிகராகச் சொல்லப்படும் ஆலகால விஷம் பற்றியும் நமக்கு ஒரு கதை உண்டு. அசுரர்களும் தேவர்களும் கூடி, அமுது பெறுவதற்காகப் பாற்கடலைக் கடைந்த கதை. இது கதையோ, கற்பனையோ? இதன்வழி ஓர் உண்மையை உணர்த்துகிறது தமிழ்.

உணர்ச்சியும் அறிவும் இருபுறத்து இருந்து இயக்குகிறபோது, இந்த உயிர் உடலின் துணைகொண்டு செயல்படத் தொடங்குகிறது. தேடுவது நல்லது என்றாலும், அதனால் கெடுதியும்





நேரும்.இயற்கையில் நன்றும் தீதும் ஒன்றுபட்டுத்தான் இருக்கும். அதில் தீமையைப் புறந்தள்ளி, நல்லதைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதில்தான் வெற்றி இருக்கிறது. இன்பம் தேடவேண்டுமெனில் கூடவே துன்பமும் இருக்கும். அதனை விலக்குவதற்குத்தான் அறிவு கருவியாகிறது. அறிவின் துணைகொண்டு அனுபவத்தின் வழிநின்று செயல்படும் வாழ்க்கையில் முதலில் வருவது இடர்தான். அது கண்டு அஞ்சாமல் தொடர்ந்து முயன்றால் அடுத்து வருவது இன்பம். இந்த இயற்கை மர்மத்தை எடுத்து விளக்குவதற்குத்தான் இந்தக் கதை.

மனம் ஒரு பாற்கடல் அசுரத்தனமான முயற்சியாலும், அறிவார்ந்த நிதானத்துடனான செயல்பாட்டாலும் கடையத் தொடங்குவது இன்பமாகிய அமுதுபெறத்தான். ஆனால், துன்பம்தான் முதலில் வரும். துன்பத்தைப் போக்குவதில்தான் இன்பத்தின் தொடக்கமே இருக்கிறது. துன்பத்தைப் பிறர்பால் தள்ளிவிட்டு, இன்பத்தை மட்டும் தான் அனுபவிக்க நினைப்பது அதனினும் இடர்தரும் என்பதை விளக்க எத்தனையோ வரலாறுகள், கதைகள் நம்மிடம் உண்டு. ஆனால், பிறர் துன்பத்தைத் தன் துன்பமாக ஏற்றுக் கொண்டு செயல்படுகிற உன்னத அருள் இருக்கும் உள்ளமே ஆண்டவன் இருக்கும்இடம். அவன் இறைவனுக்கு நிகராக என்றும் வாழும் மக்களால் போற்றப்பெறுவான். என்றும் இறவாத ஆற்றல் பெற்றவன் ஆகிவிடுகிறான்.

இருப்பதிலே பெருந்துயரங்களாகிய இறப்பும் பிறப்பும் அவனுக்கு இல்லை. அவனே சிவன். அவன் எங்கிருக்கிறான் என்று தேடுவோர்க்குச் சங்க இலக்கியம் இங்கிருக்கிறான் என்று காட்டுகிறது. ஔவையார் காட்டுகிறார். அரிய நெல்லிக்கனியைத் தன்னிடம் தமிழ் வாழ்வதற்காகத் தந்த அதியமானை நோக்கி, அவனைச் சிவன் ஒத்தவன் என்று அடையாளம் காட்டுகிறார். அந்த இடத்தில்தான் இந்த நீலகண்டத்திற்கான விளக்கம் கிடைக்கிறது.

நீலமணிமிடற்று ஒருவன் போல மன்னுக பெரும நீயே இது ஔவையின் அமுத வாக்கு. அரிய நெல்லிக்கனியைப் பெருந்துன்பங்களுக்கிடையில் தேடிப் பெற்றுத் தான் உண்ணாமல் தமிழ் வாழவேண்டும் என்பதற்காக, நான் உண்ணத்தந்த உன் நிலை, அந்தச் சிவன் நிலை. எனவே, நீலகண்டனாகிய சிவனைப்போல நீயும் நிரந்தரமாக வாழ்க என்று விளக்கமுறுகிறது இந்தத் தொடர் துன்பத்தைத் தனதாக்கிக் கொண்டு இன்பத்தைப் பிறர்க்கு அளிப்பவனுக்குக் கிடைக்கிற இன்பம் பேரின்பம் என்பது இதன் உள்பொருள்.






இன்றைக்கு ஔவையும், அதியமானும் இல்லை; நெல்லிக்கனியும் இல்லை. ஆனால், இந்தத் தமிழ்க்கவிதை இருக்கிறது. இதுவே, ஔவையையும் அதியமானையும் இறப்பின்றிக் காக்கிறது. இங்கே தமிழ் அமுதமாகிவிடுகிறது. இந்த அமுதம் எவ்வுயிர்க்கும் இன்பம் தருகிறது. அதுவே இலக்கியம் ஆகிறது. வாழ்வுக்கு இலக்கணமும் ஆகிறது.

ஏன் இவ்வளவு புத்தகங்களை வாங்கிக் குவித்துப் படிக்க வேண்டியிருக்கிறது? அடுத்தவர் பெற்ற அனுபவங்களை அவர்கள் பெற்ற துன்பப்பாடுகளை, கதை, கவிதை, கட்டுரைகளால் படித்து, அதன்வழி தானும் அனுபவித்து, அந்தத் துயரங்களில் சிக்கிக்கொள்ளாமல் தற்காத்துக் கொள்வதற்கு, இது முதலில் துணை செய்யும். அதற்கும் அடுத்த கட்டத்திற்குப் போக, அந்தப் புத்தகம்தான் போதிக்கிறது.

வெறும் பார்வையாளனாக இவ்வுலகில் வந்துவிட்டுப் போவதற்கல்ல இந்தப் பிறப்பு, பிறருக்குப் பயன்படுமாறு வாழ்வதற்குத்தான். இந்த வரலாற்று வரிசையில் உன் வரவைப் பதிவு செய் என்று சொல்வதற்கு வழங்கப்பட்டதுதான் இந்த மனிதப்பிறவி. அதன்வழி பிறர் துன்பங்களைப் போக்க முயல்க என்று அறிவுறுத்துவதே புத்தகத்தின் வழிபெறுகிற அறிவு.

உணர்ச்சியும் அறிவும் பொருந்திக் கொள்கிறபோது, எவ்வழிச் செல்வது என்று தெரியாமல் அல்லலுறும் மனதுக்கு உற்ற துணையாவது நல்லோர் மொழிகள்தான். இந்த அறிவினால் ஆகக் கூடிய பயன் யாது? இன்பமா? துன்பமா? ஆராய்ச்சிக்கெல்லாம் போகாமல் எதார்த்தமாகச் சொல்கிறது திருக்குறள். பிறிதின் நோய் தன் நோய்போல் போற்றுவதுதான் என்று.

பிறரின் நோய் மட்டும் அல்ல. பிறிதின் நோயையும். தன்னொத்த மனிதர்களாகிய பிறரின் நோயை மட்டும் அன்றி, தன்னொத்த உயிராகிய அனைத்தின் நோய்களையும் தனதாகக் கருதிப் போற்றுவது அறிவின் பயன் என்கிறார்.

இதில் போற்றுதல் என்ற சொல்லுக்குக் கூடுதல் அழுத்தம் கொடுத்துப் புரிந்து கொள்ள வேண்டும். ஒன்று, நோயினால் துன்பம் வாராமல் போற்றுதல், மற்றொன்று அந்த நோயே வரவிடாமல் போற்றுதல். உடல்நோய் வாராமல் போற்றுதற்கு மருந்துகள் இருப்பதுபோல், உளநோய் தாக்காமல் போற்றிக் கொள்வதற்குப் புத்தகங்கள் துணையாகின்றன என்பது ஒருபுறம் இருக்க, இத்தகு நோய்களைத் தமதெனக் கருதித் தாங்கிக் கொள்கிறபோது வருகிற தைரியம் இருக்கிறது பாருங்கள், அந்தத் தைரியத்தைத் தருவது எது தெரியுமா?

தீமையின் பக்கம் சாராமல் தூய்மைமிகு தாய்மை நிலையில் நம்மைக் கொண்டு போய் உய்ப்பது இந்த அறிவு. அது, அடுத்த உயிரின் துன்பத்தைத் தானும் தாங்கி அனுபவிப்பதோடு அதனை அகற்ற முயன்றால் தனக்கு வருகிற துன்பத்தையும் தாங்கிக் கொள்ள முடியும் என்பதை அனுபவபூர்வமாக உணர்த்திவிடுகிறது. அத்தோடு, தான் துன்பப்படும் நேரத்தில் தன்னால் போற்றப்பட்ட உயிர்களும் தனக்குத் துணையாக வந்து தாங்கிக் கொள்ளும் என்பதையும் காட்டிவிடுகிறது.

அதற்குத்தான் இந்த அறிவு துணையாக வேண்டும். அது அற்றம் காக்கும் கருவி அல்லவா? இந்த அறிவு பெறும் வாயில்தான் புத்தகம். மேல் விளக்கம் பெறத் திருக்குறளை எடுத்துக் கொள்வோம். அது பின்னர் நம்மையே எடுத்துக் கொள்ளும். நமது துயர்களைக் கொல்லும்; பேரின்பம் நல்கும்.

# தமிழ்

## நற்றமிழரின் நாடித்துடிப்பு

### January




### February

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | | |

### March

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |

### April

| S | M | T | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

### May

| S | M | T | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

### June

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

### July

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

### August

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

### September

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

### October

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

### November

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

### December

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




editor@ithamil.com

# VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

**Idli / Dosa Wet Mix** • இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്



CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI



100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा